

# தமிழரசு


1-9-1982 75 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2013

துந்துபி — ஆவணி 16


தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்





## அரசியலில் புயல்

## அருந்தமிழில் தென்றல்

தமிழ்நாட்டிலே நல்ல தமிழிலே மேடையில் பேச முடியும் என்பதை முதன் முதல் பேசிக்காட்டியவர் திரு.வி.க. அழகிய தமிழிலே அரசியலைப் பற்றியும் எழுதமுடியும் என்பதை முதலாவதாக எழுதிக் காட்டியவர் நம் திரு.வி.க. அரசியலில் புயலாகவும் தமிழில் தென்றலாகவும் இருப்பவர் நம் திரு.வி.க. நூல்களிலே நுண்ணிய உரையைத் தீட்டியவர் நம் திரு.வி.க. எதிர்கால உலகத்துக்காகச் சிறந்த ஏடுகளைத் தயாரிப்பவர் நம் திரு.வி.க.

**—பேரறிஞர் அண்ணா**

(1949-ஆம் ஆண்டில் ஆற்றிய உரையில்)



### பேரறிஞர் அண்ணாவிற்குத் திரு.வி.க.வின் வாழ்த்து

''அண்ணா துரையென்னும் அண்ணல், தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில்: வாய்மொழியில் - பண்ணாவான்;
சிற்பன்எழுத் தோவியத்தில்; செவ்வரசு; நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமிஎன் றாடு''



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி — ஆவணி 16

மலர்: 13 இதழ்: 5

1—9—1982

# சமத்துவச் சமுதாய மலர்ச்சியே விடுதலைத் திருநாளின் வெற்றி

என்னை வாழ வைக்கும் தெய்வங்களான தாய்மார்களே!

எனக்கு ஆசி கூறி வழிநடத்தும் வணக்கத்திற்குரிய பெரியோர்களே!

எனது ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புகளே!

இன்று இந்திய சுதந்தரத்தின் 36 வது பிறந்த நாள்.

சுதந்தரம் மனித உடலுக்கு என்பதோடு மனித மனத்திற்கு முதலிடம் என்றே கொள்ள வேண்டும். மனித மனத்தை ஒழுங்கு, ஒழுக்கம், சமுதாய ஒற்றுமை முதலிய அடிப்படைப் பண்புகள் தான் வழிநடத்திச் செல்ல வேண்டும். அதைச் செயலாக்க என் போன்றோர் வாய்ப்புப் பெறும்போது நமக்கு முன்பிருந்து தியாக வேள்வியில் தங்களைத் தீர்த்துக் கொண்டு நமது நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத் தியாகம் செய்த மகாத்மா காந்தியடிகள் அமரர்களான நேரு, சாஸ்திரி, காமராஜர், பெரியார், அண்ணா போன்றோரின் செயல், கருத்து, அறவழிப்பாதை இவைகளைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

இந்தியக் குடியரசில் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஜனநாயக முறையில் சிந்திக்க, பேச, எழுத ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இது ஏற்கப்பட்ட ஒன்று ஆகும். அதேபோல ஒவ்வொரு மாநிலத்தவரும் தங்கள் தாய் மொழியில் சிந்திக்க, பேசி, எழுதி, கல்வி கற்க உரிமையுண்டு. அந்த சுதந்தரத்தைப் பறிப்பது ஜனநாயக வழியில் அமையப்பட்டிருக்கின்ற குடியரசு சட்ட விதிகளுக்கு முரணாகும்.

விடுதலைத் திருநாளைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் 'நாம் சுதந்தரம் பெற்ற பிறகு நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன? எவ்வளவு? இனி என்ன தர வேண்டும்? எவ்வளவு தர வேண்டும்? என்று கணக்குப் பார்த்திடும் நாள்' என்று குறிப்பிட்டார்கள். அப்படி கணக்குப் பார்க்கும்போது, கடந்த 35 ஆண்டுகளை வீணே கழித்து விட்டோம் என்று சொல்வது நியாயமான மதிப்பீடு ஆகாது. அதே போன்று எல்லாவற்றையும் செய்து விட்டோம் என்று நிம்மதி பெறுவதற்கும் இடம் இல்லை. அரசியல் சுதந்தரம் பெற்றவுடன் நமது குறிக்கோள் நிறைவடைந்துவிடவில்லை. அத்துறையில் பெற்ற சுதந்தரம் பொருளாதாரச் சுதந்தரம் ஆக மலர்ந்து சமுதாயத்தில் சமத்துவ உரிமை பெற்ற மக்கள் எல்லாத்துறைகளிலும் பரவி, பரிணமித்து, அடித்தளத்து மக்களில் ஒவ்வொருவருக்கும் அதன் முழுப்பலனும் கிட்டுவதற்கு வாய்ப்பும் வசதியும் செய்யப்படும்போது தான் சுதந்தரத்திற்குப் பொருளும் பொலிவும் ஏற்படும்.

''இந்தியா கிராமங்களில்தான் வாழ்கின்றது'' என்று அண்ணல் காந்தியடிகள் கூறினார். அதன் அடிப்படையில்தான் கிராமப்புறத் தன்னிறைவுத் திட்டத்தை அண்ணா தி. மு. க. அரசு செயலாக்க முன்வந்தது. 1980-'81 ஆம் ஆண்டில் முதன் முறையாகச் செயலாற்றப்பட்ட இந்தத் திட்டம் இந்த நிதி ஆண்டோடு தமிழகத்தில் எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படும். ஏறத்தாழ 225 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும் இத்திட்டத்தின் வாயிலாக இந்த ஆண்டின் இறுதியில் ஏறத்தாழ 30 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலையும், மூவாயிரத்திற்கும் மேற்பட்ட கிலோ மீட்டர் தூரத்திற்கு ஆதி திராவிட குடியிருப்புகளில் இருந்து இடுகாடுகளுக்குச் செல்லும் சாலைகளும் 1,100 க்கும் மேற்பட்ட தாய்சேய் நல விடுதிகளும் 450 க்கும் மேற்பட்ட ஊரக மருந்தகங்களும், 5000க்கும் மேற்பட்ட பள்ளிக் கட்டடங்களும் புதிதாக அமைக்கப்பட்டு விடும். இவ்வாறு கிராமப்புற மக்களின் வாழ்க்கை வளம்பெற ஒருங்கிணைந்த அடிப்படையில், அடிப்படைத் தேவைகளை உருவாக்கித் தரும் இந்த முயற்சியின் பயனாக, கிராம மக்களின் வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல் பிறந்துள்ளது என்பதை நாட்டு மக்களின் நலனில் நாட்டம் கொண்ட நல்லோர் முழு மனதுடன் ஏற்றுக் கொள்வார்கள். இந்தத் தன்னிறைவுத்திட்டம் இந்த ஆண்டு முதல் நகரியங்களுக்கும் நகராட்சிகளுக்கும், விரிவுபடுத்தப்பட இருக்கிறது.

கிராமப்புறங்களில் வறுமையை எதிர்த்து நடக்கும் தாக்குதலில் ஒருங்கிணைந்த கிராமிய வளர்ச்சித் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்விரு திட்டங்களுக்கும் சேர்த்து இந்த ஆண்டு 60 கோடி ரூபாய் ஒதுக்கிடப்பட்டுள்ளது. சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட பிரிவினர் தலை நிமிர்ந்து பொருளாதார வளர்ச்சி பெற்று வாழச் செய்யும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்த அரசு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. சென்ற ஆண்டு 75 கோடி ரூபாய் செலவில் 'சிறப்புக் கூறு திட்டம்' செயல்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு ஒரு லட்சத்து அறுபத்து ஆறாயிரம் ஆதிதிராவிட குடும்பங்கள் பயன் அடையும் வகையில் பெரிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் நிலை உயர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதே நேரத்தில் தீண்டாமையை ஒட்டிய சட்ட விரோதச்செயல்களைத் தடுப்பதற்குகொண்டு

வரப்பட்டுள்ள சட்டத்தை செயலாற்ற தமிழக அரசு காவல் துறையில் தனிப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரித்து நீதி வழங்க சிறப்பு நீதி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீதி மன்றங்கள் தனித் தன்மையோடு விருப்பு வெறுப்பிற்கு இடம் கொடாது கட்சி மத சாதி கண்ணோட்டமின்றி சுதந்திரமாக இயங்க வேண்டும். கி.பி. இரண்டாயிரம் ஆண்டில் நானிலத்து மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற தேசீய குறிக்கோளை ஒட்டி தமிழகத்தின் தொடக்க சுகாதார நிலையங்களைப் பலப்படுத்தவும் எண்ணிக்கையைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிராமக் குழந்தைகளின் பல்நலப் பாதுகாப்புக்காக முறையாகத் தயாரிக்கப்பட்ட பற்பொடியை இலவசமாக வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு மாதங்களில் இப் பற்பொடி சத்துணவு கூடங்களில் உணவு அருந்தும் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படும்.

உடல் நலனைப் பாதுகாக்க நகரங்களுக்கும் பட்டணத்திற்கும்தான் வரவேண்டும் என்ற நிலை மாறி இப்போது தொடக்க சுகாதார நிலையங்களின் மூலமாக கிராம மட்டத்திலும் சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் மூலமாக தாலுகா மருத்துவ மனைகளிலும் கிராமப்புற மக்களுக்கு உடல் நல பாதுகாப்பு வழங்க முனைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புற மக்களின் பொருளாதார நிலையையும் உடல் நலனையும் உயர்த்த உருவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போலவே, கல்வி அறிவைப் பரப்பவும் உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 6 முதல் 11 வயது தொகுதிச் சிறுவர் சிறுமியருள் பள்ளிகளுள் சேர்க்கப்படுபவர்களின் எண்ணக்கை 94.76 விழுக்காடாக 1981-82-ல் உயர்ந்தது. இப்போது சிறப்பாகச் செயல்பட்டுவரும் சத்துணவுத் திட்டத்தின் காரணமாக, மேலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த இரண்டு மாதங்களில் மட்டும், இத்திட்டத்தின்நேரடிப் பயனாக 1 லட்சத்து 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் புதிதாகப் பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். தொடக்கப் பள்ளிகளில் பயிலும் சிறுவர் சிறுமியரின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டுமென்ற, 20அம்சத் திட்டத்தின் 16-வது அம்சத்தை மிகப் பெருமளவில் நிறைவேற்றுவதற்குத் தமிழ் நாட்டின் சத்துணவுத் திட்டம் ஓர் அருட்கொடையாக அமைந்துள்ளது.



இதேபோல வேளாண்மைத் துறையிலும் நெசவாளர், தொழிலாளர் நலிவடைந்தோர் நலனிலும் இந்த அரசு அதிக அக்கறை கொண்டு பல அரிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு ஜூலை முதல் நாள் முதல் 120 கோடி ரூபாய்க்கும் மேலான செலவில்

## மாண்புமிகு முதல்வர்

செயல்படுத்தப்பட்டு வரும் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் பொது மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் நம்பித்தான் நிறைவேற்றுகிறோம். இத்திட்டத்தினால் இன்று ஏறத்தாழ 58 இலட்சம் குழந்தைகள் பலனடைகின்றனர். இவர்களில் 17 லட்சத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் ஆதிதிராவிடக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். சுமார் ஒரு லட்சம் தாய்மார்களுக்கு, குறிப்பாக விதவைத்தாய்மார்கட்கு இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. சாதி சமய மற்ற சமுதாயம் அமைந்திட இத்திட்டம் வழி வகுக்கிறது. மக்களின் பேராதரவின் துணை கொண்டு இது போன்று இன்னும் பல முற்போக்குத் திட்டங்களை செயல்படுத்திட ஒரு அரசு முனையும்போது அதற்கு ஏற்ற அமைதிச் சூழ்நிலை நாட்டில் நிலவ வேண்டும் இந் நிலையில் வறுமையிலும், அறியாமையிலும், வேலையில்லாக் கொடுமையிலும், பசியிலும், சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிற கோடிக் கணக்கான மக்களைக் கவனிக்க முடியாதவாறு, அரசுக்கும், சமுதாயத்திற்கும், தொல்லை கொடுப்போர்தான் இன்று சமுதாயத்தின் பகைவர்கள்.

இன்று நாட்டின் ஒரு சில பகுதிகளில், சற்றும் எதிர்பாராத வன்முறைச் சம்பவங்களை உருவாக்கச் சில சமூக விரோத சக்திகள் முயல்கின்றன. இவைகளைத் தடுக்கவும், மக்களின் உயிர், உடைமைகளைப் பாதுகாக்கவும், அரசின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. என்றாலும், இத்தகைய வன்முறைச் சம்பவங்களுக்கு வேர் எது என்பதைப் பார்க்கும்பொழுது, பொது நலத்தில் அக்கறையற்ற தன்மையும், வதந்திகளுக்கு முக்கிய இடம் தருவதும், திட்டமிட்டு பொய்ச் செய்திகளை உலவ விடுவதும், அதாவது வதந்திகளைப் பரவ விடுவதும் ஆன ஒரு நிலவரம்தான், வன்முறைச் சம்பவங்களுக்குத் தூண்டுதல்களாக அமைந்து விடுகின்றன' கோரிக்கைகளை எழுப்பவும், குறைகளைச் சுட்டிக்காட்டவும், முறையான அமைப்புகளும், மன்றங்களும், இருக்கும் போது, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள, வன்முறையைத் தூண்டிவிடுவது நமது சமுதாய முன்னேற்றப் பயணத்தைத் தடுத்து

# புதிய தமிழகத்தை உருவாக்குவோம்

நிறுத்தும் தடைக்கல் என்பதை உணர வேண்டும். வன்முறையின் தீய விளைவுகளிலிருந்தும், கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், மறியல் போன்ற செயல்களினால் மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்படுகின்ற சேதங்களிலிருந்தும், நாட்டைப் பாதுகாக்கிற கடமையைக் காவல் துறையினரும் அரசும் கைவிட்டு விட முடியாது.

வதந்திகள் ஒரு நாட்டின் மிகக் கொடிய தொத்து நோயாகும். வதந்தி பீதியை உருவாக்கும். நோயற்ற மனித மனத்தில் பீதி குடிபுகுமாயின், அது, அவனை மட்டுமல்ல; அவனது நாட்டையே அழித்துவிடும். எல்லா நோய்க்கும் மருந்து உண்டு வதந்தி— அதனால் பீதி—இந்த நோய்க்கு மருந்தே கிடையாது. எனவே இதை முதலில் ஒழிக்க ஒவ்வொரு மனிதனும் தன்னம்பிக்கை பெற்றாக வேண்டும்.

''தீமையோடு ஒத்துழைக்க மறுப்பதும், நன்மையோடு ஒத்துழைப்பதும் ஒருநாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது'' என்றார் மகாத்மா காந்தியடிகள். அதே பாதையில், அரசின் சமுதாய முன்னேற்ற முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர மக்கள் முன் வர வேண்டும். அது மட்டும் போதாது; நமது மக்களின் உள்ளங்களில் நச்சு விதைகளைப் பரப்பிட முயலும், தீய சக்திகளுடன் ஒத்துழைக்க மாட்டோம் என்கிற முடிவினையும் மக்கள் மேற்கொள்ள வேண்டும். நம்மில் நலிந்தோரை—வறுமை வாய்ப்பட்ட மக்களை நமது உடன் பிறப்புக்களாகக் கருதுவதைவிட சிறந்த மதக் கோட்பாடு, சிறந்த பண்பாடு, வேறு இருக்க முடியாது. அந்தப் பண்பாட்டை நமது உள்ளங்களில் வளர்த்துக் கொண்டால் சமத்துவம் தானாக மலர்ந்துவிடும். நமது நாட்டில் பிறந்த எந்த மனிதனும் வாழ்வதற்கு வாய்ப்பின்றித் திண்டாடும் அவல நிலைக்கு முடிவு கட்ட இந்த முப்பத்து ஆறாவது சுதந்திர—விடுதலைத் திருநாளில் உறுதி ஏற்போம்.

'மனிதனையே கடவுளாக நேசிக்கும் ஆனந்தத்தைப் பற்றி எண்ணிப் பாருங்கள்' என்றார் விவேகானந்தர்.

'ஈசன் இங்கு எனக்கு உடன் பிறந்தார்' என்றார் மகாகவி பாரதியார்.

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றார் பேரறிஞர் அண்ணா.

இந்த மாபெரும் பணியில் நம்நாட்டை அனைத்துத் துறைகளிலும் மேம்படுத்தும் பணியில் நம்மை இன்னும் முழுமையாக ஒப்படைத்துக் கொள்ள உறுதி ஏற்போம்.

நாம் ஆற்றும் கடமைகளில் இருந்துதான் உரிமைகள் பிறக்கின்றன. உரிமையைக் கேட்பதுதான் கடமை என்று எண்ணுதல் கூடாது. கடமையைச் செய்தால் உரிமை நம்மைத் தேடி வரும் என்கிற மகாத்மாவின் மணிவாசகத்தை, மனத்தில் இருத்தி அவரவர் மேற்கொண்ட பணிகளை, குறையின்றி விரைவாகச் செய்து முடிப்போம். பெற்ற சுதந்திரத்தின் பயன்களை, அனைத்து மக்களும் அனுபவிக்க, வறுமையும், அச்சம், நோயும், இல்லாமையும், பேதங்களும் அற்ற புதிய சமுதாயத்தை அமைத்திட மக்கள் அத்தனை பேரும், கடமை உணர்வுடன் பாடுபட உறுதி ஏற்போம்.

கட்டுப்பாடுடன், ஒழுங்குடன், கடமைப் பற்றுடன், நமக்குள்ள பணிகளை ஆற்றி, சமுதாயத்தின் பயணத்தில், தடை ஏற்படுத்த நினைப்போரை ஒதுக்கி—புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை உருவாக்க, நம் உழைப்பை நாட்டின் பொது நலனுக்கு ஒன்றுபட்டு காணிக்கையாக்கிட உங்கள் அனைவரையும் அன்புடன் இருகரம் கூப்பி அழைக்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க.

*(விடுதலைத் திருநாளையொட்டிமாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொலைக் காட்சி—வானொலி ஆகியவற்றில் ஆற்றிய சிறப்புரை 15—8—1982.)*



1918-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் சனிக்கிழமை சென்னைத் தொழிலாளர் சங்கம் திரு. வி. கலியாணசுந்தரனாரின் அருமையான முயற்சியினால் தோற்றுவிக்கப் பட்டது.

'' தியோசாபிகல் சங்க அறிஞரான வாடியா முதலியோர் எனக்குத் தோழராயினர். வாடியாவும் யானுஞ் சேர்ந்து தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்துப் பணி செய்யலானோம்''.

—திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு



## பொதுநலத் தொண்டர்

இதழாசிரியராகவும் நூலாசிரியராகவும் சொற்பொழிவாளராகவும் சீர்திருத்தத் தலைவராகவும் சிறந்த பொதுநலத் தொண்டாற்றியவர் திரு.வி.க.

—தேவநேயப்பாவாணர்

# நமது கடமை

— மாண்புமிகு முதல்வர்



அண்ணா அவர்கள் சொன்னார்கள், வீடு நன்றாக இருந்தால், வளமாக இருந்தால், நாடு வளமாக இருக்கும் என்று. அது போல் தமிழகம் நன்றாக இருந்தால், பல மாநிலங்கள் அதைப் பின்பற்றலாம். அது போல் பல மாநிலங்கள் சீரும் சிறப்புமாக இருக்குமேயானால் இந்திய நாடு வளமோடு வாழ முடியும்.

நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். விரும்புவதை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள். என்று நம்புகிறேன். இது அரசியல் பிரச்சினை அல்ல, சமுதாயப் பிரச்சினை. எப்படி பின்தங்கிய மக்கள் என்று குறிப்பிடுகின்றோமோ, அது போல் பின்தங்கிய மாநிலங்கள் என்று எதுவுமே இருக்கக் கூடாது என்பதை அண்ணாவின் அறவழியில் நின்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சட்டத்தால் மட்டும் யாரையும் ஒன்று படுத்தி விட முடியாது. மனத்தால் உள்ளத்தால், உணர்வால் அவர்கள் ஒன்றுபட்டாக வேண்டும். அப்படி ஒன்றுபட வேண்டிய நிலைமையைப் பொருளாதாரத்தில், சமுதாய அமைப்பில் நாம் சமத்துவத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக்காண்பித்தாக வேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம் குழந்தைகளுக்கு உணவளிக்கிறோம் என்றால் அந்த உணவை உண்ணுகின்ற குழந்தைகள், எந்த ஜாதி என்று பாராமல், எந்த மதம் என்று பாராமல் வயிற்றுக்குப் பசி என்ற நிலையில் வயிற்றை நிரப்பிக் கொள்ள எதையோ சாப்பிடாமல் ஊட்டச்சத்து நிறைந்த உணவை உண்டு களிப்போடு, தெம்போடு கல்வியைக் கற்கின்ற நிலைமை சமத்துவத்தில் வர வேண்டும். என்று நாம் விரும்பினால், நான் வேதனையோடு சொல்கிறேன்- தாழ்த்தப்பட்ட மக்களிலேயே ஒரு சிறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று சொல்ல மாட்டேன், அதற்குத் தலைவராக இருக்கின்ற ஒரு சில தலைவர்கள் எங்களுக்குத் தனியாக உணவு சமையல் கூடம் தேவை என்று கேட்கிறார்கள் என்றால் சமத்துவம் எங்கே எப்படி வர முடியும்.

எங்கள் சேரிக்காக எங்கள் பகுதிக்காக, எங்கள் ஜாதி மக்களுக்காக ஒரு கூடம் உணவு உண்பதற்காக ஓர் இடம் வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றால், நாம் ஒற்றுமைப்படுத்த முயல்கிறோம், அவர்கள் உயர்வடைய



வேண்டும், அவர்கள் தகுதியைப் பெற்றாக வேண்டும், அவர்களும் இந்நாட்டு மக்கள் தான். அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களே தவிர, தாழ்ந்தவர்கள் அல்ல என்று நாம் வற்புறுத்திக் கூறும்போது, அவர்களாகவே எங்களுக்கு இடம் ஒதுக்குங்கள் என்று கேட்டால் நாம் யாரை வற்புறுத்திக் கேட்கப்போகின்றோம்?

சில நேரங்களில்பேசுகிறார்கள் பத்திரிகைகளில் செய்தி வருகின்றது. இந்துக்களுக்கும் அரிஜனங்களுக்கும் அங்கே போராட்டம், அப்படி என்றால் அரிசனங்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் இல்லையா? அவர்கள்தனி மதம், தனி ஜாதியைச் சேர்ந்தவர்களா? இப்படி எழுதுகின்ற நிலைமையை அடியோடு களைந்து நாம் எல்லோரும் ஓர்குலம் என்பதை அண்ணா வழியில் சொல்லியாக வேண்டும், நிறைவேற்றியாக வேண்டும் என்பதை இங்கே நான் அறைகூவலாக அத்தனை மக்களின் உள்ளத்திலும் பதியும் வகையில் முன் வைக்க விரும்புகிறேன்.





நாம் போராட்டத்தில் இறங்கியாக வேண்டும்-முதலில் மனப் போராட்டம். நாம் உயர்ந்தவர்கள் - மற்றவர்கள் தாழ்ந்தவர்களா என்பதைப் பற்றிச் சிந்தித்து இல்லை - அறிவு தெளிந்த நாள் முதல் எழுதப்படிக்கக்கற்றுகொள்வோமேயானால் - அவன் உழைக்கும் தகுதி பெற்றவன் என்றால் இந்த நாட்டில் வாழ சமஉரிமை பெற்றவன் என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்ற அளவில், இந்நாடு வளம் பெற்று வாழ்ந்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்திடும் நிலை பெற்றிட வேண்டும். எந்தப்பிரச்சினை வந்தாலும் சரி, எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் சரி-அமரர் அண்ணாவின் கொள்கைகளை இந்த அரசு எப்படியும் நிறைவேற்றித் தீரும் என்பதை இந்த சுதந்தர நாளில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றே குலம். ஒருவனே தேவன் என்ற அடிப்படைக் கொள்கையில் நாம் ஒன்றுபட்டு வாழ்ந்தாக வேண்டும். எல்லோரும் சொல்கிறார்கள், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று. எல்லோரும் நமக்குச் சொந்தம் எல்லா ஊரும் நமது ஊர்தான் என்று சொல்லிவிட்டு நம்முடைய வீட்டுக்குப் பக்கத்தில் இருப்பவர்களை நம்மவர் என்று ஏற்றுக் கொள்ளநாம் தயங்கினால் இந்த வார்த்தைக்கு என்ன பொருள் என்பதையே நம்மால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுகிறது.

இந்த நேரத்தில் ஒன்றை குறிப்பிடுவேன். இந்தியத் துணைக்கண்டம் வளமோடு வாழ வேண்டுமென்றால் ஒவ்வொரு மாநிலமும் வளம் பெற்றாக வேண்டும். வருகிற செப்டம்பர் 15ந்தேதி, அமரர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் மற்ற பகுதிகளுக்கு அங்கே வாழ்கின்ற வறுமையில் வாடுகின்ற குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இந்த உணவுத் திட்டத்தை விரிவாக்க நாம் திட்டமிட்டு இருக்கின்றோம்.

ஆங்காங்கு உள்ள மதத் தலைவர்களுக்கும், கருத்துவேறுபாடு கொண்ட மற்ற தலைவர்களுக்கும் இந்த சுதந்தர நாளில் விடுக்கின்ற முதல் வேண்டுகோள் இந்தத் திட்டத்திற்கு அனைவரும் ஒத்துழையுங்கள் என்பதுதான். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது தான் உங்களின் கொள்கை. அதனை நிறைவேற்றுவதற்கு அதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கு, எல்லோரும் அமர்ந்து உண்டு, வளர்ந்து வாழ்ந்து இந்த நாட்டுக்குத் தொண்டு செய்கின்ற உணர்வை அந்தப் பசுமையான உள்ளத்தில் களங்கமற்ற வெள்ளை உள்ளத்தில் பதிய வைக்கின்ற முயற்சியை தயவு செய்து தடுப்பதற்குரிய காரியத்தில் யாரும் இறங்க வேண்டாம். அதற்குப் பதிலாக எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லோரையும் கைகூப்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.



சென்னைக் கோட்டையில் விடுதலைத் திருநாளன்று (15.8.82) நாட்டுக் கொடியை ஏற்றி வைத்து மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து....



# தமிழ் முனிவர் திரு.வி.க

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர்

## டாக்டர் சிலம்புச்செல்வர்

சென்னை தொண்டைமண்டல உயர்நிலைப் பள்ளியில் சமரச சன்மார்க்க சங்கத்தாரின் வள்ளலார் விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த விழாவில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. பங்கேற்று உரையாற்றினார். அந்நாளில் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் வல்லத்தரசு அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டிருந்தார். அவர் திரு.வி.க. அவர்களுடன் முரண்பட்டு அதே மேடையில் பேசினார். அதை மறுத்துத் திரு.வி.க பேசினார். அப்போது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. அந்த விழாவில் கலந்துகொண்ட நான் திடீரென்று மேடைமீது ஏறி திரு வி.க. அவர்களை ஆதரித்துப்பேசி அமைதியை நிலைநாட்டினேன். அது 1932 அல்லது 1934ஆக இருக்கலாம். அதுதான் திரு.வி.க. அவர்களை நான் முதன் முறையாகச் சந்தித்த நிகழ்ச்சி.

அதற்குப் பின்னர் அவருடைய நூல்களின் மூலம் தான் அவர்பால் எனக்கு அதிகப்பற்றும் பக்தியும் ஏற்பட்டன. திருநாவுக்கரசு நாயனாரைக் குறித்து 'அப்பர் ஒரு சத்தியாகிரகி' என்று அவர் எழுதிய நூல் என்னை மிகவும் கவர்ந்தது. அதனால் 1941ல் பிறந்த என் தலைமகனுக்கு திருநாவுக்கரசு என்று பெயரிட்டேன்.

நான் அரசியலில் 1927ஆம் ஆண்டில் தான் நேரடியாகப் பங்கு பெற்றேன். அதற்கு முன்பே திரு வி க. அவர்கள் காங்கிரசிலிருந்து விலகிவிட்டார். அதனால் அரசியல் ரீதியாக சுற்றுலாவிலோ பிரச்சாரத்திலோ அவருடன் சேர்ந்து பணியாற்றும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் சமய சம்பந்தமான கூட்டங்களில்-குறிப்பாக சமரச சுத்த சன்மார்க்க மேடைகளில் அவருடன் சேர்ந்து உரையாற்றி அவரது பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறேன்.

அரசியலில் சேர்ந்து பணிபுரியாவிட்டாலும் அவர் எழுதிய 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூல்தான் என்னைக் காந்தியவாதி ஆக்கியது. காந்திய நெறிக்கு அதைப் போன்று விளக்கம் தரும் நூல் வேறொன்றும் தமிழில் இன்று வரை வெளிவந்தது இல்லை.

எல்லாவற்றையும விட அவரது ஒழுக்கம் தான் எனது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அவரைச் சந்தித்துப் பேசிய போதெல்லாம்பழங்கால முனிவர் ஒருவரைச் சந்தித்துப் பேசுகின்றோம் என்ற உணர்வே எனக்கு ஏற்படும்.

அவர், அரசியலிலிருந்து விலகிய பின்னரும் தம் வாழ்க்கையின் கடைசிநாள்வரை, தொழிற்சங்கத் தலைவராக இருந்து வந்தார். பாட்டாளி வர்க்கத்துக்கு ஆற்றும் பணியை அவர் கைவிடவே இல்லை.

1942ல், பக்கிங்ஹாம் - கர்நாடிக் மில் தொழிலாளர்கள் பல வார காலம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது திரு வி. க. வுடன் சேர்ந்து பெரம்பூரில் தொழிலாளர் கூட்டங்களில் நானும் பேசியிருக்கிறேன்.

தமிழும் தேசியமும் பிணைந்திருக்க வேண்டும் என்ற சித்தாந்தத்திற்கு அவர்தான் முன்னோடியாக விளங்கினார். மொழிப் பற்று இல்லாத நாட்டுப் பற்றும், நாட்டுப் பற்று இல்லாத மொழிப் பற்றும் அவருக்குப் புறம்பானவை.

எங்கும், எதிலும் தமிழர் வாழ்க்கையில், தமிழ் தான் முதலிடம் பெறவேண்டும் என்று அவர் விரும்பினார். அவர் காங்கிரசில் இருந்த காலத்தில் அந்த மகா சபையின் தமிழ்நாட்டுக் கிளையைத் தமிழ்வழிப் படுத்த அவர் பெரிதும் முயன்றார்.

நாடு விடுதலை பெறவிருந்த தருணத்திலே மொழிவழி தமிழ் மாநிலம் காணவும், தமிழக வடக்கு, தெற்கு எல்லைகளை மீட்கவும், தலைநகரான சென்னையைக் காக்கவும்ஆங்கில ஆதிக்கத்தைஅகற்றவும் நான்தமிழரசுக் கழகத்தைத் துவக்கினேன் என்றால் அது திரு வி க அவர்களின் தூண்டுதலால் தான். 21.11.46ல் அமைப்புக் கூட்டம் நடைபெற்ற





## தமிழக அரசு வழங்கும் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. விருது

தமிழ்த் தென்றல் என்றும் தமிழ்ப் பெரியார் என்றும் அழைக்கப் பெற்ற திரு.வி.க. அவர்களிடம் பேரன்பு கொண்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அன்னாரது கொள்கையைப் பொன்னேபோல் போற்றிச் செயலாற்றி வரும் தமிழக அரசு ஒரே நேரத்தில் அண்ணா அவர்களையும், திரு.வி க அவர்களையும் நினைத்துப் பார்க்கும் வகையில் சிறந்த தமிழ் எழுத்தாளர் ஒருவருக்கு தமிழ்த் தென்றல் திரு.வி க விருது வழங்கும் திட்டத்தை 1979-ல் அறிமுகப்படுத்தியது. ஆண்டுதோறும் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 15-ல் இந்த விருது வழங்கப்படுகிறது. ரூ 10 ஆயிரம் தொகை கொண்டது இந்த விருது.

1979-ல் புகழ்பெற்ற எழுத்தாளர் மறைந்த ஜெகசிற்பியன் அவர்களுக்கும், 1980-ல் புகழ் பெற்ற எழுத்தாளர் நாரண. துரைக்கண்ணன் அவர்களுக்கும் 1981-ல் பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் அவர்களுக்கும் தமிழ்த்தென்றல் திரு.வி.க விருதினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

1981-ல் மதுரையில் நடைபெற்ற 5-வது உலகத் தமிழ்மாநாட்டையொட்டி, மதுரையில் அமைக்கப் பெற்ற தமிழ்ச்சான்றோர் சிலைகளில் தமிழ்ப் பெரியார் திரு. வி. க அவர்களின் சிலையும் இடம்பெற்றுள்ளது.

அன்னாரது நூற்றாண்டு துவக்க விழாவை சென்னையில் மிகச் சிறப்பாக நடத்தியது தமிழக அரசு.

போது அதில் அவரும் கலந்து கொண்டார். அதன் பின்னர் நாங்கள் நடத்திய பல்வேறு கிளர்ச்சிகளுக்கெல்லாம் அவர் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

இந்தித் திணிப்பை எதிர்ப்பதிலே எங்கள் இருவருக்கும் கருத்து ஒற்றுமை நிலவியது. ஆங்கில ஆதிக்கம் நிலைபெறாத வகையிலும், தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேராத முறையிலும் இந்தித் திணிப்பு எதிர்க்கப்பட வேண்டும் என்பதிலே அவர்தான் எனக்கு வழிகாட்டி.

அவர் ஒரு துறவியைப்போல வாழ்ந்தார். என்றாலும், மார்க்சீயத்தில் தமக்கிருந்த நம்பிக்கை காரணமாகத்தான், தமது வாழ்நாள் முழுவதும் பாட்டாளி வர்க்கத்துடன் தொடர்புகொண்டிருந்தார். சிறைப்படும் அளவுக்கு தொழிலாளர் இயக்கத்தில் பங்கு வகித்தார். விடுதலைப் போராட்டத்தில் கூட அவர் தீவிரம் காட்டியதில்லை. ஆனால் தொழிலாளர் போராட்டத்தில் தீவிரம் காட்டினார். அதன் விளைவாக, அவர் பால் மரியாதை கொண்டிருந்த காங்கிரஸ் ஆட்சியே -அவரை குருவாக மதித்த ஓமந்தூரார் ஆட்சியே அந்தப் பெரியாரை வீட்டுக்காவலில் வைக்கநேர்ந்தது.

திரு வி க. அவர்கள் கொள்கை அளவில் மார்க்சீய தத்துவத்தை ஏற்றிருந்தார் என்றாலும் நடைமுறைப் புரட்சியிலே -வன்முறையை அவர் கட்டோடு வெறுத்தார். அதனால் மார்க்சிய சித்தாந்தங்களை காந்தியப் போர் முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவர் ஓயாது சொல்லி வந்தார்.

திரு.வி.க. அன்பின் வடிவமாகத் திகழ்ந்தார். அவர் பொய் பேசி அறியேன். விளையாட்டுக்காகக் கூட வாய்மையிலிருந்து அவர் பிறழ்ந்ததில்லை. அவர் யாரையும் கடிந்து பேசியதை நான் கண்டதில்லை.

அவரது தமிழ் எழுத்து நடையிலும், பேச்சு நடையிலும் எனக்கு மிகுந்த கவர்ச்சி உண்டு. காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக, தமிழகத்தில் இரு பெரியாரை நான் மிகுதியாக நேசித்து வந்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் ராஜாஜி, மற்றொருவர் திரு.வி.க. ராஜாஜிக்கும் எனக்கும் அடிக்கடி கருத்துப் போர் நிகழ்ந்ததுண்டு; ஆனால் திரு.வி.க.வோடு எனக்குக் கருத்து வேறுபாடு ஏற்பட்டதே இல்லை.

1919ல் காந்தியடிகள் சென்னை நகருக்கு வருகை புரிந்த போது, அவரது ஆங்கிலச் சொற்பொழிவை, தமிழில் மொழி பெயர்த்தவர் திரு.வி.க. அவர்கள்தான். அதன் பின்னர் காந்தியடிகள் சென்னைக்கு வந்த போதெல்லாம் தமது உரையை திரு.வி.க. அவர்கள் தான் தமிழில் பெயர்க்க வேண்டும் என விரும்பினார்.

தமிழ்நாடு, திரு.வி.க. அவர்களைச் சரியான படி போற்றவில்லை என்ற குறை எனக்கு உண்டு. மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசு, அந்தக் குறையைப் போக்கிவிட்டது. தமிழ்த் தென்றல் திரு,வி.க. அவர்களின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாட முனைந்துள்ளது. சான்றோர்களின் பிறந்த நாட்களையும் நினைவு நாட்களையும் கொண்டாடும்அரும்பணியை அரசுடைமையாக்கியுள்ளது ,தமிழகஅரசு. இது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில், புகழ் பெற்ற எழுத்தாளர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் தொகைகொண்ட 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதினை தமிழக அரசு வழங்கி வரும் நிகழ்ச்சி, திரு.வி.க. அவர்களைப் பெருமைப் படுத்தும் செயலாகும். இந்த நல்ல பணிக்காகத் தமிழக அரசைப் பாராட்ட வேண்டும்.

26.8.'82ல் திரு.வி.க. வின் நூற்றாண்டு தொடங்குகிறது. அது 1983ல் தான் முடிவுறுகின்றது. இடைப்பட்ட ஓராண்டுக்காலத்தில் திரு.வி.க. அவர்களின் நூல்கள் அனைத்தையும் புதிய பதிப்பாக வெளியிட அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு.வி.க. அவர்களின் முக உருவம் இடம் பெற்ற அஞ்சல் தலை வெளியிடப்படுவதற்கு நமது அரசு, மத்திய அரசைத் தூண்ட வேண்டும்.

திரு.வி.க. வாழ்ந்த இல்லத்தை வாங்கி அங்கே நினைவாலயம் நிறுவிடவேண்டும். ஏனென்றால் அந்த இல்லம், லோகமான்ய பாலகங்காதர திலகர், டாக்டர் அன்னிபெசண்ட் ,மகாகவி பாரதியார் போன்ற பெருமக்கள் பல முறை தங்கும் பேறு பெற்றதாகும்.

ராயப்பேட்டையில் புகழ் பெற்ற சாது அச்சுக்கூடம் திரு. வி.க. அவர்களின் இல்லத்தில் தான் இருந்தது. அந்தச் சாது இல்லத்திற்கு ஒரு சரித்திரத்தைப் படைத்துவிட்டவர் திரு.வி.க.

திரு.வி.க.வின் விழா, தமிழ் விழாவாக, காந்திய விழாவாக தெய்வபக்தியும் தேச பக்தியும் கலந்த விழாவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த நல்ல நேரத்தில் அந்தத் தமிழ் முனிவருக்குத் 'தமிழரசு' இதழின் மூலமாக அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

# என் பயணம் கல்விப் பயணமே!

(முன் இதழ் தொடர்ச்சி)

நாங்கள் புத்தமதக் கோயிலுக்குச்சென்று துறவியோடு பேசிவிட்டு வந்தோம். நர்சரிப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஆகியவற்றைப் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அவற்றைக் காட்டினார்கள். உயர்நிலைட் பள்ளி, மேல்நிலைப் பள்ளி இரண்டையும் சேர்த்து நடுத்தரப் பள்ளி என்று ஒரே பெயராகச் சொல்லுகிறார்கள். பார்ஸ்டல் ஸ்கூல் போய்ப் போர்த்தோம். பல்கலைக் கழகத்தைப் போய்ப்பார்த்தோம். பல்கலைக்கழகம் பெரும்பாலும் நம்முடைய பல்கலைக் கழகம் போல்தான் உள்ளது. உடற்பயிற்சி ஆசிரியர்களை உருவாக்குகின்ற இடத்தைப் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அதையும் காட்டினார்கள். 'இசைக் கல்லூரியை'யும், கைத்தொழில், ஓவியம், சிற்பங்கள் உள்ள பள்ளி ஒன்றையும் பார்க்க வேண்டும் என்று சொன்னோம். அதையும் காட்டினார்கள். பீங்கான் தொழிற்சாலையையும் சென்று பார்வையிட்டோம். 2,300 ஆண்டு காலத்திற்கு முன்னால் யாங்சிங் ஆட்சியில் நீர்ப்பாசனத்திற்காக அப்போதிருந்த அதிகாரி ஒருவர் ஓர் ஆற்றை இரண்டாகப் பிரிப்பது போல் ஒரு திட்டைப் போட்டுப் பிரித்து அதைக் கொஞ்சம் கொஞ்சமாக வாய்க்கால்களாக மாற்றி அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான நிலங்களுக்கு நீர்ப்பாசனத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அதற்குப் பிறகு

மாண்புமிகு கல்வி அமைச்சர்

## திரு. செ. அரங்கநாயகம்

அவருடைய மகன் அத்திட்டத்தை முடித்து வைத்திருக்கிறார். இரண்டு பேருக்கும் ஒரு கோயிலே அங்கு வைத்திருக்கிறார்கள். அதைச் சென்று பார்த்தோம். கரிகாலன் கட்டிய அணை நினைவிற்கு வந்தது.

2,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கலைக்கு அவர்கள் தருகிற முக்கியத்துவம்

**பீகிங் பல்கலைக்கழகத் துணை வேந்தருடன் தமிழகக் கல்விக் குழுவினர்களான மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம், பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் மு. நாகநாதன் பேராசிரியர் க. அ. நடராசன், பேராசிரியர் டி. எம். சீனிவாசன், கல்வித்துறைச் செயலாளர் திரு. சி. இராமதாஸ் மற்றும் பீகிங் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்**





**சீனாவின் மாமனிதர் மறைந்த திரு. மா சேதுங் அவர்களின் உடல் பாதுகாக்கப்பட்டு வரும் நினைவு இல்லம் முன்பு தமிழகக் கல்விக் குழுவினர்.**

உலகத்திலேயே வேறு எங்கும் பார்க்க முடியாதது. கம்யூனிஸ்ட் சைனா என்று சொல்லுகிறோமே தவிர அங்கு எதை எடுத்தாலும் கலைவண்ணம் காணப்படுகிறது. ஒரு ஓட்டலுக்குச் சென்றாலும் அங்கு ஒரு செயற்கைப் பூங்காவைச் செய்து அழகாக வைத்திருக்கிறார்கள். எங்களுக்கு ஒரு மீனை வைத்தார்கள். அந்த மீனிலேயே கலையழகைக் காட்டியிருந்தார்கள். அதையே ஒரு மலை போல் அல்லது கலைச்சிற்பம் போல் வைத்திருந்தார்கள். இதைச் சாப்பிடுவதா, பார்த்துக் கொண்டே இருப்பதா என்று தெரியவில்லை, இங்கு கலைக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப்போல வேறு எங்கும் நாங்கள் பார்த்ததில்லை.

## பெண்களுக்குப் பாதுகாப்பு

சைனாவிலே நாம் ஓட்டலிலே போய்த் தங்கினால் தைரியமாகத் தங்கி, படுத்து உறங்கி ஒரு நகரத்திலிருந்து அடுத்த நகரத்திற்கு போய் வரலாம். அங்கு எந்தவிதமான தொந்தரவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜப்பானிலும் அடிப்படித்தான். ஜப்பானில் பெண்கள் தனியாக எங்கே வேண்டுமானாலும் போய் வரக்கூடிய அளவுக்குப் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. எங்கே ஜப்பான்? எங்கே நாம்? அப்படிப் பாதுகாப்பு நம்முடைய நாட்டில் இருக்கிறதா என்று நினைத்துப் பாருங்கள். சிக்கயநாயக்கர் கல்லூரியில் மாணவர்கள் 10 பேரை கைது செய்திருக்கிறோம். தேர்தலுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமே கிடையாது. பஸ்ஸை நிறுத்தி, பஸ்ஸிற்குள் புகுந்து அங்கிருந்தவர்களிடத்தில் தேர்வு சம்பந்தமான நோட்டீசைக்கொடுத்து பெண்களைத் தொட்டு, சொல்லக்கூட முடியாத விதத்தில் அவர்களிடத்தில் நடந்து கொண்டு, இவ்வளவு பெரிய தவற்றை தைரியமாகச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மாணவர்களாக இருக்கட்டும், வேறு யாராகத்தான் இருக்கட்டுமே. இப்படி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இங்கே இருக்கிறது. அங்கே ஆயிரம் மடங்கு உயர்ந்த நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஒரு உயர்ந்த நிலையை அந்த நாடு கண்டிருக்கிறது. நம்நாடு அப்படி இப்படி என்று சொன்னார்கள். ஆனால் இது போன்று நடப்பதைப் பார்க்கும்பொழுது இந்த நாட்டில் பிறந்தவர் என்று சொல்லக்கூட வெட்கமாக இருந்தது. எந்த நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறதோ அந்த நாடுதான் முன்னேற முடியும். அடிப்படையே அதுதான். அது இல்லை என்றால் அது நாடே இல்லை.

## அந்த நாட்டில் அச்சமில்லை—அச்சமில்லை

நான் அங்கே இருந்தபோது உத்தரப் பிரதேச முதலமைச்சர் பி. சி. சிங் ராஜினாமா செய்தார்கள். ஏன்? அவர்களால் முதலமைச்சராக இருக்க முடியவில்லை. ஏன்? போலீசை வைத்துக் கொண்டு சகல அதிகாரத்தையும் வைத்துக் கொண்டு, மத்திய போலீஸ் அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு சாதாரண கொள்ளைக்காரர்களை அடக்கி மாகாணத்தை ஆள முடியாமல் ராஜினாமா செய்திருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் ஆகிய நான்கு மாநிலங்களைக் கொள்ளைக்காரர்கள் ஆளுகின்ற அளவிற்கு விட்டுவிட்டு மற்றவர்களைப் பார்த்து வீரம் பேசுவதால் என்ன பயன்? இங்கு ஜாதிக்கலவரம், மதக் கலவரம் போன்று பல்வேறு தவறுகள் நடக்கின்றன. ஆனால், அங்கே சென்று பார்க்கிற போது இப்படிப்பட்ட தவறுகள் கிடையாது. ஏன்? சீனா ஒரு கம்யூனிஸ்ட் நாடு என்று சொல்லிவிடுகிறார்கள். அமெரிக்கா சென்ற ஆண்டுதான் சென்று வந்தேன். அங்கே உள்ளே சென்று வெளியே வருகிறவரை ஒரே அச்சந்தான். வெளியே வந்த பிறகுதான் ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது. அவ்வளவு அச்சத்தோடு செல்ல வேண்டியிருக்கிறது. 50 டாலர்களை வைத்துக் கொண்டு அங்கே தனியே

நடமாட முடியாது. தங்கச் செயினைப் போட்டுக் கொண்டு தனியாகப் போக முடியாது—உயிர் போய்விடும். ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் ஒரு இரவைத் தைரியமாகக் கழிக்க முடியாது. அமெரிக்காவில் எந்த ஊருக்குப் போனாலும் அச்சமின்றி வர முடியாது. ஆனால் அதே நிலை சைனாவில் இல்லையே. அது ஏன்?

**லுக் ஈஸ்ட்**

ஜப்பானில் கல்வி அமைச்சரை சந்திக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரிடத்தில் பேசிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்—இதுவரை இங்கே இருந்தவர்களெல்லாம் 'லுக் வெஸ்ட்' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். இனிமேல் இங்கே இருப்பவர்களை 'லுக் ஈஸ்ட்' என்று சொல்ல வேண்டும். நாங்கள் அப்படி இருக்கிறோம் என்று சொன்னார்கள்.

**ஷிப்பிங் நியூஸ்**

ஒவ்வொரு ஊருக்குப் போனாலும் பத்திரிகை வாங்கிப் படிப்பது வழக்கம். பொதுச் செய்திகள், வ்யாபாரச் செய்திகள், 3ஆம் பக்கம், 4ஆம் பக்கம் அல்லது 8ஆம் பக்கம் 'ஷிப்பிங் நியூஸ்' செய்தி ஒன்றைப் போடுகிறார்கள். டோக்கியோவில் வாங்கினால் 3ஆவது, 4ஆவது பகுதி 'ஷிப்பிங் நியூஸ்' யாங்காங், தாய்லாந்தில் வாங்கினாலும் 'ஷிப்பிங் நியூஸ்' இருக்கிறது. டோக்கியோ, சிங்கப்பூரில் வாங்கினாலும் அப்படித்தான். ஆயிரம் மைல்களுக்குக் கடற்கரை உள்ள இந்த நாட்டில் பத்திரிகை வாங்கிப் பார்த்தால் அதன் கடைசிப் பக்கத்தில் மட்டும் அந்தமான் மலேசியாவிற்குப் போகிற கப்பல் என்றைக்குப் போகிறது என்பது மட்டும்தான் போட்டிருக்கும். இந்தியாவில் கப்பல்துறை வளரவில்லை. வர்த்தகம் வளரவில்லை. இங்கு கப்பல்துறை கெட்டதற்கே முக்கிய காரணம் மத்திய சர்க்கார் அதிகாரம்தான் என எழுதியிருக்கிறார்கள். இந்நாட்டில்தான் கப்பல் தொழில் வேறு நாட்டைவிடச் சிறப்பாக இருந்திருக்க வேண்டும்.

**நம் கப்பலோட்டிய பெருமை எங்கே?**

உலகத்தில் இருக்கிற அத்தனை நாடுகளிலும் கரையோரம் கப்பலோட்டியபோது தமிழ்நாட்டில் ஆழ்கடலில் கப்பலோட்டியிருக்கிறோம். கப்பலிலே போய்த்தான் பல நாடுகளை வென்று வந்திருக்கிறோம். அப்படியிருந்த ஒரு நாடு இன்று கப்பல் துறையில் ஒரு தென்கொரியா அளவிற்குக்கூட வளரவில்லை. சிங்கப்பூர் அளவுக்குக்கூட வளரவில்லை. டோக்கியோவைப் போன்றுகூட வளர முடியவில்லை. நாம் எங்கே போய் எல்லோருக்கும் வேலை தருவது?

**மீன் பிடிப்பும் மீன் வளர்ப்பும்**

அங்கிருந்தவர்கள் சிலரிடம் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு உண்மையைச் சொன்னார்கள். என்ன உண்மை என்றால் இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பிறகு நாம் பிடிப்பதற்கு மீனே இருக்காது. இப்பொழுது மீன் இருக்கிறது. பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அப்புறம் அவர்கள் என்ன செய்வார்கள் என்று தெரியாது. அவர்கள் 9 மாதம் மீன் பிடிக்கிறார்கள். மீதி 3 மாதம் என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு மீனை வளர்ப்போம் என்று சொன்னார்கள். அதாவது 'ஃபிஷ் கல்டிவேஷன்'. அவர்கள் பிடிக்கிற மீன்கள் ஒரே மாதிரியான மீன்கள். மீனை வளர விடுகிறார்கள். பிறகு மீன் முட்டையை எடுத்து அதைப்போட வேண்டிய இடத்தில் போட்டு, அதை வளர்க்கும் செயலில் ஈடுபடுகிறார்கள். ஆகவே ஒரு பக்கம் மீன் பிடிக்கிறார்கள். ஒரு பக்கம் மீன் வளர்க்கிறார்கள்.

**ஆனால் நாம் என்ன செய்கிறோம்?**

நம்முடைய கடற்கரையில் கட்டுமரத்தில் போய் 4 பேர் மீன் பிடிப்பார்கள். எது கிடைத்தாலும் விட மாட்டார்கள். இவர்களை மீறிக்கொண்டு விசைப்படகிலே ஒரு 4 பேர் செல்வார்கள். அவர்களும் எது கிடைத்தாலும் விடமாட்டார்கள். அவர்களுக்கும் தெரியாமல் தாய்லாந்திலிருந்து 4 பேர் இங்கு

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்களுடன் சீனாவிலுள்ள இந்தியத் தூதர் திரு. பாஜ்பாய் தம் துணைவியாருடன்



வந்து மீன் பிடித்திருக்கிறார்கள். இப்படி போட்டி போட்டுக் கொண்டு மீன் பிடிப்பதால் கூடிய விரைவில் கிழக்குக் கடற்கரையில் மீனே இருக்காது. நாம் என்ன புத்திசாலித்தனமாக காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறோம்? அந்நாட்டவர்கள் எவ்வளவு ஒழுங்காகத் தொழிலை வளர்க்கிறார்கள்?

**யார் இந்த நிலைக்குக் காரணம்?**

"இந்த நாடு நன்றாக இருந்தாலும் அதற்கு நீங்கள்தான் காரணம். மோசமாக இருந்தாலும் அதற்கு நீங்கள் தான் காரணம்" என்று கன்பியூஷியஸ் சொன்னதை நான் ஆசிரியர்களுக்குச் சொல்ல வேண்டியுள்ளது. கல்வித் துறையிலேதான் இந்தக் குறைபாடுகளுக்கு அத்தனைக் காரணமும் இருக்கின்றது. இன்று தவறு செய்வதற்குக் காரணமாக இருக்கின்றவர்களைத் தயாரிப்பதே கல்வித்துறைதான். இனிமேலாவது தவறு செய்பவர்களைத் தயாரிக்காமல், நல்லவர்களை, வல்லவர்களை, இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன் படக்கூடிய வகையிலே கல்வித்துறை தயாரிக்க வேண்டும்.

**நாம் போதிப்பதும் அவர்கள் போதிப்பதும்**

நாம் பள்ளிகளிலே பூகோளம் சொல்லித் தருகிறோம். கணக்குச் சொலலித்தருகிறோம். தமிழைச் சொல்லித் தருகிறோம். ஆனால் அவர்கள் சீன மொழியைச் சொல்லித் தருகிறார்கள். நம் நாட்டில் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறோம். ஜப்பானிலும் இரண்டாவது கட்டாய மொழியாக ஆங்கிலத்தை வைத்திருக்கிறார்கள். நாம் ஆங்கிலத்தைப் பாடமாக வைத்துக் கொண்டிருக்கிறோம்; அவர்கள் ஆங்கிலத்தினை ஒரு சக்தியாக மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். ஒரு மொழியை எப்படிப் படிக்க வேண்டுமோ அப்படிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எதை, எதை எப்படி நடத்த வேண்டுமோ அப்படி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டி. வி. யுனிவர்சிட்டி வைத்து காலையிலிருந்து மாலை வரை ஏதாவது ஒன்றைப் பற்றி படித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள பள்ளிகளைப் பார்க்கும்போது இங்குள்ள பள்ளியைப் போல்தான் உள்ளது. ஐ. டி. ஐ. நம் நாட்டிலும் நன்றாக இருக்கிறது. அதில் எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால் ஒரே ஒரு குறைபாடு உள்ளது. ஓவியத்திற்கும் கலைக்கும் அங்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். நாம் கொடுப்பதில்லை. ஓவிய ஆசிரியர்களுக்கு மதிப்புத் தருவதில்லை. நம் டிராயிங் மாஸ்டர்களை அழகான பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்லுவோமே—அதைப்போல் நினைக்கிறார்கள்.

அங்கு உடற்பயிற்சி வகுப்பு நடக்கிறது. அப்போது உடற்பயிற்சியை நன்றாகக் கற்றுக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு உடற்பயிற்சி வகுப்பு நேரத்தில் ஆங்கிலமோ, கணிதமோ கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது வேறு ஏதாவது நடக்கும். உடற்பயிற்சி வகுப்புக்கும் நாம் மதிப்புத் தருவதில்லை. உடற்பயிற்சி ஆசிரியருக்கும் நாம் மதிப்புத் தருவதில்லை. ஆனால் அவர்களுக்கு அங்கே சிறந்த இடத்தைத் தந்திருக்கிறார்கள். அங்கு பள்ளிகளில் உடற்பயிற்சி நேரத்தைத் தவிர மேலும் ஒரு மணி நேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதையெல்லாம் நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், இங்கே இருப்பதைத் தான் சீனாவில் பார்க்கிறோம். ஆனால் அங்கே இவைகளுக்கெல்லாம் ஆதரவு கிடைக்கிறது. வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற பாடங்களின் மூலமாக நம்முடைய சிந்தனையை, செயலாற்றலை நன்றாக வளர்க்க முடியும். வெறும் மனப்பாடம் செய்து பெறும் அறிவைப்பற்றி நமக்குத் தெரியும். தலைமை ஆசிரியர்கள் சில பள்ளிகளிலே நல்ல தன்மைகள் வருவதற்கு ஒரு பாடத்தைச் சொல்லித்தர நடவடிக்கை எடுத்தால் அது பொதுமக்களுக்குப் புரிவதில்லை. அதுதான் நம் குறைபாடு. இதில்தான் நம்முடைய போராட்டத்திற்கான காரணம் இருக்கிறது.

அதுமட்டுமல்ல. இந்நாட்டில் இசைக்கும் ஒரு நல்ல முக்கியத்துவம் தருகிறார்கள். எல்லாவற்றையும் விட 'பொலிடிகல் எஜுகேஷன்' என்ற ஒன்றைத் தருகிறார்கள். இதற்கு மூன்று பாடவேளைகள் வைத்திருக்கிறார்கள். நம் நாட்டிலும் இப்போது 11,12, ஆம் வகுப்புகளுக்கு மாணவர்களுக்கு 'பொலிடிகல் எஜுகேஷன்' சொல்லித் தருகிறார்கள். அதில் தேசபக்தியைப் பற்றிச் சொல்லித் தருகிறார்கள். நம்முடைய குறைபாடுகள் எங்கே இருக்கின்றன?



நாம் கணிதம் சொல்லித் தருகிறோம். விஞ்ஞானம் சொல்லித் தருகிறோம். மற்ற எல்லாப் பாடங்களிலுமே நாம் வல்லவர்கள் தான். இருந்தாலும் நாம் முன்னேற முடியவில்லை. சைனாவும் மற்ற கீழை நாடுகளும் முன்னேறுகின்றன என்றால் அதற்கு என்ன காரணம்? இங்கே இருக்கிற ஒவ்வொருவரும் தான் வேலைக்குப் போய் சம்பாதித்து, தான் முன்னேற வேண்டும் என்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோமே தவிர அந்நாட்டவரைப்போல் தான் படித்து, சமுதாயத்தை முன்னேற்றி அதன் மூலம் தாமும் முன்னேற வேண்டும் என்று நாம் நினைப்பதில்லை - நம்முடைய குழந்தைகளுக்கும் சொல்லித் தருவதில்லை. இன்னும் சொல்லப்போனால் தேசபக்தி என்பது என்ன என்றே நாம் சொல்லித் தருவதில்லை. வார்த்தைகளைத்தான் பயன்படுத்துகிறோமே தவிர நம்மிடம் அந்த உணர்வு இல்லை. வ. உ. சிதம்பரனார் வெள்ளைக்காரனை எதிர்த்துக் கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார். ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். ஆகவே அவர் சிறந்த தேசபக்தர். திருப்பூர் குமரன் கொடியேந்திப் போர் செய்தார். பெரிய தேசபக்தர். பகவத்சிங் வெள்ளையர்களை எதிர்த்துப்போராடினார். சிறந்ததேசபக்தர். வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடியவர்கள்தான் தேசபக்தர்கள் என்று சொல்லிச் சொல்லி என்ன நிலைக்கு வந்திருக்கிறோம் தெரியுமா? வெள்ளைக்காரர்களை

எதிர்த்துப் போராடுவதுதான் தேச பக்தி. ஆகவே போராடுவதற்குப் பயன்படுவதுதான் தேச பக்தி போராட்டத்திற்குப் பயன்பட்ட தேசபக்தியில் ஈடுபட்டவர்கள் உதவித்தொகை வாங்கியிருந்தால் பாவாயில்லை, ஒய்வு ஊதியம் வாங்கி விட்டார்கள். தேசபக்தியும்ஓய்வு எடுத்துக் கொண்டது. தேசபக்தி என்பது சமாதான காலத்திற்கும் அல்லது விடுதலை அடைந்துவிட்ட பிறகும் தேவையானது. இன்றைக்குப் பள்ளியில் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களும் தேசபக்தர்கள் தான். வயலில் வேலை செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளும் தேசபக்தர்கள்தான். மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு எதையும் செய்யவேண்டும். இப்படி இந்த எண்ணத்தை வளர்த்திருந்தால் இங்கு உள்ள தவறு ஏற்பட்டிருக்காது. கல்லூரியில் படிக்கின்ற ஒரு மாணவன் தவறாக நடக்க முடியுமா? அவன் தவறாக நடந்தாலும் மற்றவர்கள் அவர்களை நடக்க விடுவார்களா? மத்தியப் பிரதேசத்தில் 10 பேர் சேர்ந்து கொண்டு துப்பாக்கியை வைத்துக் கொண்டு ஒரு ஆட்சிக்கு எதிராக ஒரு ஆட்சியை நடத்த முடியுமா? மக்கள், ராமன் ஆண்டால் என்ன?ராவணன் ஆண்டால் என்ன என்று நினைப்பதால்தான் கொள்ளைக்காரர்கள் ஆள முடிகிறது.

நம்முடைய நாடு என்ற உணர்வு, நம்முடைய நாட்டிற்காகப் பாடுபட வேண்டும் என்ற உணர்வு நம்மிடம் இருக்குமேயானால் இன்றைக்கு நம்முடைய முன்னேற்றம் ஜப்பானையும் மிஞ்சும். ஆனால் ஒன்று. நாம் நம்முடைய 'மூளையை'ப் பயன்படுத்தாமல் இருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் நம் மூளை சக்தியில்லாத மூளை என்று சொல்வதற்கில்லை. ஒரு கதை சொல்லுவார்கள். ஜெர்மென், சைனா, அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா ஆகிய எல்லா நாட்டு மக்களின் மூளையையும் ஏலம் விட்டபோது எல்லாவற்றையும் விட இந்தியனுடைய மூளைதான் அதிக விலைபோயிற்றாம். அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து பார்த்ததில் மற்றைய நாட்டு மக்களின் மூளைகளெல்லாம் செலவழிக்கப்பட்டிருந்தன. நம் நாட்டு மக்களின் மூளை பயன்படுத்தப்படாமல் இருந்தது என்றார்கள்.

அங்கு நாலு பேர் சேர்ந்தவுடன் அறிவாளியாகி விடுகிறார்கள். நாலு பேர் ஒன்று சேர்ந்தால் பெரும் காரியங்களையும் சாதித்து விடுகிறார்கள். இங்கே நாலு பேர் ஒன்று சேர்ந்தால் பெரும் தகராறு வந்து விடுகிறது. யார் யாரைக் கெடுப்பது, எப்படிக் கெடுப்பது என்ற பொறாமைதான் வளர்கிறது. யாரையும் நம்ப முடியாது என்ற நிலை வளர்கிறது. அங்கே இப்படி இல்லை.எப்படி என்று கேட்டதற்கு அவர்கள் சொல்லுகிறார்கள்;''நாங்கள் யாரையும் ஏமாற்ற மாட்டோம்'' இங்கு தேச பக்தி என்று சொல்வதுபோல அங்கே 'நேஷனல் ப்ரைட்' என்று சொல்கிறார்கள். நாம் ஒருவரை ஏமாற்றினால் தங்களுடைய கௌரவம், நாட்டின் கௌரவம் கெடுகிறது என்று நினைக்கிறார்கள். இங்கே யார் அதை நினைக்கிறார்கள்?

நான் இந்தியாவில் இருந்தவரை தாய்லாந்தைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அங்குபோய்ப் பார்த்தவுடன் தான் தெரிகிறது; தாய்லாந்து ஒரு ஆண்டிற்கு 7 சதம் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் நம் நாட்டில் 4 சதம் குறிவைத்து 2.5சதத்தைக்கூடப் பிடிக்கத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். அங்கே மக்களுக்கு இருக்கக்கூடிய பொதுவான குணம், ''ராஜ விசுவாசம்''. ராஜா மீது ஒரு தனி விசுவாசம்' ஆகவே, அவர்கள் இன்று சிறந்ததொரு முன்னேற்றப் பாதையைக் கடந்து கொண்டிருக்கிறார்கள்.

மேலை நாடுகளுக்குச் சென்று தெரிந்து கொண்டதைவிடக் கீழைநாடுகளுக்குச் சென்று தெரிந்து கொண்டு வந்தது என்னைப் போன்றவர்களுக்கு ஏற்புடையதாக அமைந்துள்ளது. ஒரு மாணவரை உருவாக்கும்பொழுது இந்தச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய வகையில் பயிற்றுவிக்க வேண்டும். அறிவு வீணாகப் போகின்ற அளவுக்கு நம் கல்விமுறை இருக்கக் கூடாது. மாணவனைச் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியவனாகத் தயாரிக்க வேண்டும் என்பதுதான் முக்கியமான அடிப்படை. தாங்கள் சமுதாயத்திற்குப் பயன்படவேண்டும் என்ற எண்ணத்தையும், பண்பாட்டையும் மாணவர்களது உள்ளத்தில் வளர்ப்பது மிக அவசியம்.

## சமுதாயக்கல்வி

மேலைநாடுகளில் காண முடியாத வெவ்வேறு வகையான அரசியல் அமைப்புகளைக் கொண்ட கலாச்சார அடிப்படையில் நாம் பார்ப்பது, அடிப்படையாகப் பார்ப்பது மக்களின் தேசபக்தி. தேசபக்தி என்ற அடிப்படையிலே மக்களுக்கு அந்தப் பண்பாட்டை வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையிலே இங்கு கல்வி தரப்படுமானால் சீனாவைவிட, ஜப்பானைவிட, தென்கொரியாவை விட முன்னேறிய ஒரு நாடாக நம் நாடு நிச்சயம் ஆகும் என்பதில் யாருக்கும் சந்தேகம் எழத் தேவையில்லை. நல்லதும் கெட்டதும் நம் கையிலேதான் இருக்கிறது. இந்த அரசு வந்தவுடனே நாம் தந்த ஆதரவு, நாம் அதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொன்னதுபோல் இந்தியாவில் யாரும் அதைச் சொல்லியிருக்க முடியாது. இன்றைக்குக் குறைபாடுகள் இருக்குமேயானால் போதுமான அளவிற்கு நாம் அவ்வாதரவைப் பெற்றுக் கொள்ளவில்லை, உணர்ந்து செயல்படவில்லை என்றுதான் ஆகிறது. சைனாவிற்குப் போய் நாம் இதைக் கற்றுக் கொள்ளவில்லை. 'மாரல் எஜுகேஷன்' என்று மாற்றி சமுதாயக் கல்வி தர வேண்டும் என்று சொல்லி அதை 11வது 12வது வகுப்பிற்குப் பாடத்திட்டம் போட்டுத் தந்திருக்கிறோம். ஆனால் கல்வித்துறையை எந்தவகையில் பயன்படுத்துகிறார்கள். பொது மக்கள் அதை எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்களுடைய உணர்வை அறிந்து கொண்டு இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறோம். இதன் பலன் தெரியச் சில நாட்களாகும். நம்முடைய கையிலேதான் முன்னேற்றம் இருக்கிறது. அனைத்து முயற்சிகளையும் செய்து நல்ல முன்னேற்றம் நம் நாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். நாமும் உயரவேண்டும், நம் நாடும் உயர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்வதற்கு இந்த வாய்ப்பை நான் பயன்படுத்திக் கொள்கிறேன். இத்தகைய உணர்வுகளைப் பற்றிப் படிக்கின்ற நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், விவாதியுங்கள், கலந்து பேசுங்கள், சரியென்று தோன்றும் நல்ல காரியத்தைத் தொடர்ந்துசெய்யுங்கள்அவ்வாறுசெய்வதையே மக்களுக்கு நீங்கள் செய்யும் பணியென நினையுங்கள்.





# மக்கள் மனச்சான்றை மலரச் செய்தவர்

## கா. திரவியம்
### தலைமைச் செயலாளர்

சீரான கருத்துக்களைச் செம்மையான தமிழில் பெய்து ,பேச்சிலும் எழுத்திலும் சிறப்பானதொரு பாணி வகுத்துக் கொண்ட திரு. வி. க. அவர்கள் பாடல்களும் இயற்றியுள்ளது, அவருடைய பல்வகை ஆற்றலுக்குச் சான்றாகும். ''பாட்டென்பது சொல்லடுக்கன்று; அணிச் செறிவன்று; யாப்புக்கட்டுமன்று. இயற்கையோடு இரண்டற இயைந்த மனத்தினின்றும் விரைந்தெழும் மகிழ்ச்சியின் பொங்கல் பாட்டாகும் ''என்று அவரே பாட்டின் இலக்கணத்தைப் பகர்கிறார். அவசியத்தைக் கருதியும் அமைதியை நாடியும், அவர் அவ்வப்போது பாட்டுகள் ஆக்கியதுண்டு. அவற்றில் சில 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்' என்னும் தலைப்பில் 1931 ஆம் ஆண்டில் நூல்வடிவில் வெளியாயின.

''சாதிநில மொழிநாடு சமயவெறிச்
சண்டையெலாந் தாண்டி தாண்டி
நீதியிலே விளங்குகின்ற நின்மலமாய்
நித்தியமாய் நிறையாய் அந்தம்
ஆதிநடு வில்லாத அகண்டிதமாய்
ஆனந்த அறிவாய் நின்று
போதலொடு வரவற்ற பூரணமே
சுதந்திரமே போற்றி போற்றி''

என்ற வாழ்த்தில், சன்மார்க்க மலர் கொண்டு சுதந்திர தெய்வத்தைப் பூசிக்கின்றார்.

'பாரதநாடு' என்ற தம் பாட்டில், வாழையடி வாழையாக, கலைப் பாரம்பரியத்தையும் வரலாற்றுச் சிறப்பையும் வளப்படுத்திவந்த தோன்றல்கள் வாழ்ந்து வளர்ந்த நாடு என்ற பெருமையை வகையாகக்கூறி,

''வானவருந் தொழுதேத்தும் வளம்பெருகு நாடு
வாழ்விழந்தே இதுகாலை சாடுகின்றநாடு
ஊனமிலா உரிமைபெற ஊக்கமிகு நாடு
உத்தமரை அளிக்கின்ற ஒருபாரதநாடே'

என்று, அவல நிலையிலிருந்து மீண்டு, எழுச்சி பெறவிழையும் இந்திய நாட்டின் நிலையைப் பாடுகிறார். ''தாயின் கட்சி' என்ற பாடல், இந்தியத் தாய்தன் இழிநிலை கண்டு புலம்பும் தவிப்புப் பாடல். நலமுற்ற ஜப்பான் நாயகி, சீருடை அமெரிக்கச் செல்வி கலைவினைகள் ஆக்குஜெர்மன் மாது, கவின் பிரான்சுத் திருமகள் என்று எல்லா நாட்டுத் தேவிகளும் ஏற்றமுடன் கொலு வீற்றிருக்கின்றனர்.''என்னாட்சி கதிர்மறைதல் எப்பொழுதுமில்லை.. எங்கும் எனதாணை- உன்னலத்தின் பொருட்டாக உன்னையுமேயாளும் ஒரரசி'' என்று ஆணவ இறுமாப்புடன் கூறுகிறாள், ஆங்கிலேய அணங்கு. அந்த அவையிலே தன் அன்னையைக் காணாது, அலமருகிறான், இந்தியன். 'எங்கே என் தாய்', என்ற ஏக்கக் குரலுக்கு எதிரொலியாக அன்னையின் அழுகுரல் கேட்கிறது.

''படியினிலே இல்லாத பாழான சாதி
பகுப்புடனே, தீண்டாமை,பாவையர்தம் அடிமை,
கொடிய இவை குடிகொண்டு கொடி
கொடியுாய்ப் படர்ந்தே
கொல்லவுடன் பிறப்பன்பைக் குலைத்த
தென்றன் வாழ்வே''

என்று, கடையில் புகுந்த இகல் சாதிப் பூச்சி இரத்தம் குடிக்க, என்புருவாய்க் கிடக்கும் தாய் ஏங்கி அழுவதாகச் சோகச் சித்திரம் தீட்டுகின்றார் திரு. வி. க. எழிற்சபையில் அன்னை எழுந்தருளச் செய்ய, நாட்டு மக்கள் தேட்டமுடன் தொண்டாற்ற, அழைக்கின்றார் கவிஞர்.

''செம்மைவினை யாற்றுதற்குச் சேர வாரும்;
தீண்டாமை பெண்ணடிமை சிறுமைச் சாதி
வெம்மைதரு நோய்களைய விரைந்து வாரும்
விழுமியசு தேசியத்தை விதைக்க வாரும்
அம்மைசம தர்மவர சாட்சி நாடி
அன்பார்ந்த சோதரரே! அணைவீரின்னே!''

''சுதந்திர நாமாவளி' என்ற கதம்பக் கிண்ணியிலும்,

''சாதிப் பேயை யோட்டுவமே
சமநிலை யெங்கும் நாட்டுவமே''

என்று அழைக்கின்றார்.

''சுதந்திர வாழ்வே சுவைவாழ்வு
அல்லாத வாழ்வெல்லாம் அவவாழ்வு''

என்று அரசியல் நெறியினை அறிவுறுத்துகிறார் திரு. வி. க.

தூய்மை வழுவாதநடை; துடிப்புமிக்க பாடல், வேதனை குமுறிய போதும் வெறுப்புக்கு இடம் தராத பாங்கு; ஆத்திரம் பீறிட்ட நேரத்திலும், அமைதி கலையாத தன்மை. கருத்துக்களில் திண்மை; ஆனால், சொல்லிலே மென்மை. அழுத்தமான உணர்ச்சிகளை வெளியிடும்போதும், அடக்கமான பாணி. பகைவர்களைச் சாடும் போதும், தகைமை பிறழாத தன்மை. இலட்சிய உறுதியிலும் இனிமை குறையாத இயல்பு. வேகத்திலும் விளக்கம் பெறும் விவேகம். இனிய பண்புகள் பொருந்தி, அறம் ஆட்சி செலுத்தி, அன்பு ஆட்கொள்ளும், ஆர்வமிக்க தேசியப் பாடல்கள் மூலம் திரு. வி. க மக்களின் மனச்சான்றினை மலரச் செய்தார்.

**ஆதாரம் :** தேசியம் வளர்த்த தமிழ்



# திரு. வி. க. இயற்றிய நூல்கள்



1908 கதிரைவேற் பிள்ளை சரித்திரம்
1909 திருமந்திரம்-பார்வை இட்டது
1907 பெரிய புராணம் (குறிப்புரையும் வசனமும்)
1915 அருணாசல புராணம் (சில சேர்த்துப் பதிப்பித்தது)
1915 குசேலோபாக்கியானம்—குறிப்புரை (முதல் 2 அத்தியாயங்கட்கு மட்டும்)
1919 தேசபக்தாமிர்தம்
1921 (திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் முதல் திருமுறை யும், அரும்பதவுரையும், சரித்திரக் குறிப்பும்.)
1921 மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்
1921 என் கடன் பணி செய்து கிடப்பதே
1922 சைவ சமய சாரம்
1923 நாயன்மார் திறம்
1923 பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டும் பத்திரகிரியார் புலம்பலும் (விருத்தியுரை)
1923 மகாபாரதம் (வில்லிபுத்தூரார்)
1925 தமிழ்நாடும் நம்மாழ்வாரும்
1925 சைவத்தில் சமரசம்
1925 இன்ப வாழ்வு
1927 முருகன் அல்லது அழகு
1928 பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை.
1928 தமிழ்த் தென்றல் அல்லது தலைமைப் பொழிவு.
1929 கடவுள் சாட்சியும் தாயுமானாரும்
1929 தமிழ் நூல்களில் பௌத்தம்
1929 சைவத் திறவு
1930 இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்
1930 சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து
1931 நினைப்பவர் மனம்
1932 இமயமலை அல்லது தியானம்
உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்
முருகன் அருள்வேட்டல்

1932 காரைக்காலம்மையார் திருமுறை-குறிப்புரை
1933 சமரச சன்மார்க்க போதம்
1934 சமரச தீபம்
1934 சமரச சன்மார்க்கத் திறவு
1935 தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு-1.
1935 சித்த மார்க்கம்
1937 நாயன்மார் வரலாறு
1938 முடியா? காதலா? சீர்திருத்தமா?-5
1938 திருமால் அருள்வேட்டல்
1939 திருக்குறள் விரிவுரை—பாயிரம்
1939 திருக்குறள் விரிவுரை-இல்லறவியல்
1940 இந்தியாவும் விடுதலையும்
1942 பொதுமை வேட்டல்
1942 உள்ளொளி
1944 திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்
1944 ஆலமும் அமுதமும்
1945 கிறிஸ்துவின் அருள்வேட்டல்
1945 புதுமை வேட்டல்
1947 சிவனருள் வேட்டல்
1948 கிறிஸ்து மொழிக் குறள்
1949 பரம் பொருள் அல்லது வாழ்க்கை வழி
1950 இருளில் ஒளி
1950 இருமையும் ஒருமையும்
1951 அருகன் அருகே அல்லது விடுதலை வழி
1951 பொருளும் அருளும் அல்லது மார்க்ஸியமும் காந்தியமும்
1951 சித்தந்திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்
1951 முதுமை உளறல்
1953 தமிழ்க்கலை
1953 வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்

தொகுப்பு : சிறுவை நச்சினார்க்கினியன்



# முன்னேற்றப் பாதையில்...








- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் இறக்குமதி செய்யப்பட்ட ஆஸ்பெஸ்டாஸ் இழைகளையும். உயர்தர அரசு சிமெண்டையும் சேர்த்து, நவீன தொழில் நுட்பத் திறனைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.
- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள் எந்தக் காலத்திற்கும் ஏற்றவை. மேலும் நீடித்து உழைக்கின்றன.
- அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகளுக்கு அதிக பராமரிப்பு தேவையில்லை.

## "தரமிக்க அரசு சிமெண்ட்" தயாரிப்பாளர்கள் அளிக்கும் "அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் தகடுகள்"

சிமெண்ட் தொழிற்சாலைகள்:

1. ஆலங்குளம் தொழிற்சாலை
   இராமநாதபுரம் மாவட்டம் பின்கோடு: 626127
2. அரியலூர் தொழிற்சாலை,
   திருச்சி மாவட்டம் பின்கோடு: 621704

ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட்
தகடுகள் தொழிற்சாலை,
தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ்
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்
பின்கோடு: 626127

ARASU ASBESTOS TANCEM

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிட்.**
735, அண்ணா சாலை, சென்னை-600 002.,
தொலைபேசி: 812711

**அரசு ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்ட தகடுகள் உள்ளும் புறமும் ஒரே மாதிரி உறுதியானவை.**

EP. DIPR

# தமிழ்த் தென்றல்



**முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்**

தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் தமிழ்த் தொண்டு, தொழில் தொண்டு, சமயத் தொண்டு, அரசியல் தொண்டு, சமூகத் தொண்டு ஆகிய ஐவகைத் தொண்டும் தன்னலங்கருதாது செய்துவந்த தமிழகத்தின் தனிப் பெருந்தலைவர்.

பிற்காலத்தில் இத்தனையிலிருந்தும் ஓய்வு எடுத்துக் கொண்டு இராயப்பேட்டையிலுள்ள அச்சகத்தில் தன் தமையனார் உலகநாத முதலியார் அவர்களுடன் இருந்து எழுத்துப் பணி புரிந்த பொழுது நான் அடிக்கடி அவர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வதுண்டு.

மாறுபட்ட கட்சியினரிடத்தும் மாறுபட்ட கொள்கையுடையவர்களிடத்தும் சிறிதும் வெறுப்படையாமல் மனம் திறந்து பேசி மகிழ்ச்சியடையும் பெருங்குணத்தை அவரிடம் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

'தேசபக்தன்' என்று ஒரு தினசரியை நடத்தி அதன் ஆசிரியராக இருந்து அதன் தலையங்கங்களில் சிக்கலான செய்திகளைக்கூட எளிய தமிழில் முதன் முதலாக எழுதி வெளியிட்ட பெருமை அவருக்கு உண்டு.

அக்காலத்தில் அரசியல் கூட்டங்களில் பல தலைவர்கள் ஆங்கிலத்திலேயே பேசுவது வழக்கம். அத்தகையோரை மீறி நல்ல தமிழில் அரசியல் மேடைகளில் பேசி பொதுமக்களின் உள்ளங்களைக் கவர்ந்து பெரும் பாராட்டுதலைப் பெற்றவர் திரு.வி.க. அவர்கள்.

புதுமையான கருத்துக்களைக் கொண்ட சிறந்த நூல்கள் பலவற்றை அழகிய 'தமிழ் மொழியில் எழுதி அவர் தமிழ் மக்களுக்கு வழங்கியிருப்பது பெரிதும் பாராட்டுதலுக்குரியது. அவற்றில் மிகச் சிறந்து விளங்குவது ''பெண்ணின் பெருமையும், ''காந்தியடிகள் வரலாறும்'.

அக்காலத்தில் தமிழகத்தை அரசாண்ட ஆங்கிலேயர்கள் திரு.வி.க. அவர்கள் மீது தேசத் துரோகக் குற்றத்தைச் சாட்டினர். அப்பொழுது நீதிக்கட்சியின் தலைவர்கள் சர். பி. தியாகராஜ செட்டியார் அவர்களும் சர்.பி.டி.ராஜன் அவர்களும் கவர்னர் அவர்களிடம் தூது சென்று வாதாடி குற்றச் சாட்டிலிருந்து நீக்கிய செய்தி இன்னும் என் நினைவில் உள்ளது.

ஒருமுறை குற்றாலத்தில் நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டோம். திரு.வி.க. அவர்கள் அருகிலுள்ள வ.வே.சு.ஐயரைப் பார்க்கச் சென்ற போது என்னையும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தியபோது அவர் சொல்லிய சொற்களைக் கண்டு நான் பெரிதும் வியந்தேன். அச் சொற்கள்- ''இவர் திருச்சி இளைஞர், விசுவநாதம், ஈ.வெ.ராவின் தொண்டர். நாயக்கருக்கு செல்லுமிடமெல்லாம் இப்படிப்பட்ட நல்ல இளைஞர்கள் கிடைத்து விடுகிறார்கள். நமக்குக் கிடைப்பதில்லை. என்ன செய்வது? '' என்பதுதான்.

''பெரியாரைக் கொலை செய்யும்படி மறைமலையடிகள் தூண்டினார்'' என்று அடிகளார் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. அதைக் கண்டு பெரிதும் கவலைப்பட்டு பல்லாவரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் மறைமலையடிகளிடம் ஒரு கடிதத்தை வாங்கச் செய்து அதைப் பெரியாரிடம் காட்டி அவ்வழக்கைத் திரும்பப் பெறச் செய்ததற்கு முதற் காரணமாயிருந்து என்னைத் தூண்டியவரும் திரு.வி.க. அவர்களே யாவார்.

திரு.வி.க. அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள தன்னுடைய வரலாற்று நூலில் என்னைப் பற்றி நீண்டதொரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அது அவர் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அமைந்திருக்கிறது.

பிறகு வயது முதிர்ந்து நடை தளர்ந்து கண் பார்வை குறைந்து, செயல் இழந்து அவரது இல்லத்தில் இருக்கும்போது பல முறை சென்று அவர்களைப் பார்த்திருக்கிறேன். அத்தனை தடவையிலும் டாக்டர் மு.வ. அவர்கள் திரு.வி.க. உடனிருக்கக் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

ஒரு தடவை நான் திரு.வி.க. அவர்களிடம் சென்ற பொழுது டாக்டர் மு.வ. என்னிடம் கூறினார். ''ஐயா அவர்கள் இப்பொழுதும் ஒரு நூல் எழுதியிருக்கிறார்கள். அந்நூலுக்கு ''படுக்கைப் பிதற்றல்'' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது உலகை நோக்குமின், உலகை நோக்குமின் என்று தொடங்கப் பெற்றிருக்கிறது'' என்றும் கூறினார்கள்.

தமிழ்ப்புலவர்கள் தமிழகத்திலிருந்து தமிழ் மக்களுக்கென எந்த இலக்கியங்களைச் செய்தாலும் அந்நூல்களில் முதற்பாட்டில் முதலடியில் முதற் சொல்லாக உலகத்தை வைத்துச் செய்யும் ஒரு மரபை திரு.வி.க அவர்களின் படுக்கைப் பிதற்றலிலும் கண்டு வியந்தேன்.

மற்றுமொருமுறை காணச்



# மொழிபெயர்ப்பாளர் திரு.வி.க

18.3.1919-ல் அரக்கோணம் இரயிலடியில் பம்பாய் மெயில் வந்து நின்றது. மகாத்மாவைச் சந்திக்கிறார் திரு.வி.க. தலைவர் விஜயராகவாச்சாரியார் அளித்த அறிமுகக் கடிதத்தை மகாத்மாவிடம் தருகிறார்.

மகா. : தேசபக்தன் எம்மொழிப் பத்திரிகை?

திரு.வி.க. : தமிழ்ப் பத்திரிகை

மகா. : நீங்கள் பட்டதாரியா?

திரு.வி.க. : யான் பட்டதாரியல்லன்; மெற்றிகுலேஷன் வரை ஆங்கிலம் பயின்றவன்: எனது ஆங்கில அறிவு மொழிபெயர்ப்பளவில் பயன்பட்டு வருகிறது. தொழிலாளர் கூட்டங்களில் பெஸண்ட் அம்மையார், வாடியா முதலியோர் பேச்சுக்கள் என்னால் மொழி பெயர்க்கப்படும்.

மகா. : என் பேச்சை மொழி பெயர்ப்பீரா?

திரு.வி.க.: தொழிலாளர் சார்பில் கூடுங் கூட்டத்தில் யானே மொழி பெயர்ப்பாளனாக இருப்பேன்.

மகா. : நீங்கள் மொழிபெயர்ப்பாளரா என்றார். பின்னர் திரு.வி.க.வைக் காணும்போதெல்லாம் மகாத்மா காந்தி அடிகள் ''மொழி பெயர்ப்பாளரே'' என்று அழைப்பது வழக்கமாகியது.

**ஆதாரம்: திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு**



சென்ற பொழுது கூனிக்குறுகி தரையில் முடங்கிக் கிடந்தார்கள். அப்பொழுதும் டாக்டர் மு.வ. அவர்களை அங்குக் கண்டேன். 'காலமெல்லாம் தமிழுக்குத் தொண்டு செய்துள்ள இந்தத் தமிழ் உடல் தங்கியிருக்க ஒரு சொந்த வீடு இல்லை. வாடகை வீடு. அதிலும் வீட்டைக் காலி செய்யும்படி வீட்டுக்காரர் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்திருக்கிறார். என்ன செய்வதென்று தெரியவில்லை. நாமெல்லாம் சேர்ந்து நிதி திரட்டி ஒரு வீடு வாங்கி வைப்பது நலமாகும்' என்று டாக்டர் மு.வ. கூறினார்.

அப்படியே செய்வோமென்று செட்டி நாட்டரசருக்கும், மதுரை கருமுத்து தியாகரார்ச செட்டியாருக்கும், சர். பி. டி. ராஜனுக்கும் டபிள்யூ.பி.ஏ., சௌந்திர பாண்டிய நாடார் அவர்களுக்கும் நான்கு கடிதங்களை அங்கிருந்தே எழுதி அனுப்பி திருச்சி வந்து சேர்ந்தேன்.

சிலநாட்கள் கழித்து கருமுத்து அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. உடைத்துப் பார்த்தேன், அவர் திரு.வி.க. அவர்களுக்கு அனுப்பியிருந்த பெருந்தொகைக்குரிய காசோலை ஒன்றும் அவர் அதை ஏற்க மறுத்து திரு. செட்டியாருக்கேதிருப்பி அனுப்பிவைத்து எழுதியிருந்த கடிதத்தின் நகலும் இருந்தது. திரு.வி.க. கடிதத்தில் குறிப்பிட்டிருந்த சொற்றொடர் என்ன தெரியுமா?

''நான் வாழ்நாளெல்லாம் செய்யாத ஒரு தவறை இக் கடைசி நாளில் செய்யும்படி என்னை வற்புறுத்த மாட்டீர்களென நம்புகிறேன்'' என்பதுதான். இதை நான் டாக்டர் மு.வ.வுக்கு அறிவித்தேன். அவரும் என்னைப் போலவே இம் முயற்சியைக் கைவிட்டு விட்டார்.

கடைசியாக ஒருமுறை நான் கண்டபொழுது திரு.வி.க. அவர்கள் படுக்கையில் அசைவின்றிக் கிடந்தார். ''கி.ஆ.பெ. வந்திருக்கிறார்'' என்று டாக்டர் மு.வ. அவர்கள் காதருகில் சென்று உரக்கக் கூறினார். திரு.வி.க கையை அசைத்து உட்காரச் சொன்னார். நான் அவரருகில் சென்று அவரது கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு,

'ஐயா!

நாட்டுக்கு என்ன சொல்லுகிறீர்கள்? மொழிக்கு என்ன சொல்லுகிறீர்கள்? மக்களுக்கு என்ன சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டேன். அதையே அவர் மிகவும் ஓசை குறைந்த சொற்களால் திரும்பக் குறிப்பிட்டு,

''நாடு இருக்கிறது... மொழி இருக்கிறது... மக்கள் இருக்கிறார்கள்.. நீங்களும் இருக்கிறீர்கள்... பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள். நாங்கள் கண் கலங்கினோம்.

இப்பொழுது இவ்வாறு சொல்ல யார் இருக்கிறார்கள்' என்று எண்ணும் பொழுது உள்ளம் வேதனையையே அடைகிறது. என் செய்வது? செய்வது ஒன்றுமில்லையென்றாலும் வாய்திறந்து வாழ்த்தவாவது செய்யலாம் அல்லவா?

வாழட்டும் திரு.வி.க. புகழ்!

வளரட்டும் திரு.வி.க. மரபு!

# கவிஞர்கள் பார்வையில் திரு.வி.க

## தனித்தமிழின் கனிச்சுவை

திரு.வி.கலியாணசுந் தரனாரின்
செந்தமிழ்க்கட் டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல் லறிஞர்களும்
'அறிவுபெற்றார்; இளைய சிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே; வடசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித் தனவே யன்றோ?

உணர்வெழுப்ப மெய்ப்பாடும், உடனிசையும்
மொழிச்சுரப்பும் ஒன்றாய்த் தோன்றிக்
கணகணெனக் கவிதையொளி செயுமென்பார்;
அ:தேபோல் மொழி பெயர்ப்பும்
துணைநூலும் இல்லாமே தனிநூல்கள்,
கட்டுரைகள் புணர்ப்பார் தம்மில்
மணவழகர் தமக்குநிகர் மணவழக
ரேஎன்பேன் இந்நூற் றாண்டில்!

காய்ச்சிவைத்த பசும்பாலில் கழுநீரைத்
கறந்ததுபோல் நன்றில் தீதைப்
பாய்ச்சிவைத்துப் பிழைப்பாரும், பாழ்பட்ட
தமிழர்களும் வாழும் நாட்டில்
பேச்சுவைத்த தோடுகனி பிழிந்துவைத்துச்
சுந்தரர்வாய் பேச வைத்து
மூச்சுவைத்துத் தமிழர்களை முடுக்கியஇத்
தலைமுறையை வாழ்த்து கின்றேன்.

—பாவேந்தர் பாரதிதாசன்



## தமிழருக்காகத் தனித் தொண்டாற்றியவர்

சீலம் நிறைந்த செம்மனக் குன்றாம்
ஒழுக்கம் உயர்ந்த உத்தம சீலர்
முதலியார் பெருமையை முற்றிலும் அறிந்தேன்
தமிழ்நாடு தந்த தலைவர்கள் தம்முள்
காந்தீ யத்தின் உட்பொருள் கண்ட
சிலருள் மிகவும் சிறப்பு வாய்ந்தவர்
... ... ...
'தேச பக்த' னில் அவர் செய்த சேவையும்
'நவசக்தி' மூலமாய் நாட்டிற் குழைத்ததும்'
புகழ்ந்தால் அதுபெரும் புத்தக மாகும்
தமிழிலே எண்ணித் தமிழிலே பேசித்
தமிழருக் காகவும் தனித்தொண் டாற்றுவார்'

—நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம்



## அப்பரைப் போல அருட்பணி செய்தவர்

தேசத்தை யெழுப்பத் தேசபக்த''னுடன்
சீரிய ''நவசக்தி'' யளித்தோன்
மாசிலாத் தமிழில், வளர்புது நடையில்,
மறுவறு மிலக்கியஞ், செய்தோன்
பேசுதற் கினியோன், பெண்மையின் வீரன்,
பிறர்துயர் தனதெனத் தீர்க்கும்
ஆசையே மிக்கோன் அப்பரைப் போல
அருட்பணி செய்தவ னிவனே''.

—யோகி சுத்தானந்தபாரதி






# தாய் அரவணைக்கும்

ஆ. மருதவிநாயகம்

கோவை மாநகரில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தில் கட்டப்பட்டுள்ள அங்காடிகள் கட்டடத்தில் 'தாய்' இணையகத்தின் விற்பனைப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகில் 'தாய்' இணையகத்தில் பவர் டீலர்கள், டிராக்டர்கள் வழங்கும் விழா 30-7-82 அன்று மாலை 6.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத் தலைவர் திரு. கா. லியாகத் அலிகான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தாய் இணையகத்தின் நிர்வாக மேலாளர் திரு. வெ. கருப்பன், இ. ஆ. ப. அவர்கள் வரவேற்பு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது : ரூ. 400 இலட்சம் முதலீட்டில் தமிழகத்தில் துவக்கப்பட்ட 'தாய்'' நிறுவனம் கடந்த ஆண்டு ரூ. 1,600 இலட்சம் அளவிற்கு விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவில் சட்டமன்ற கொறடா திரு. மணிமாறன் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தார்கள்.

'' தாய் '' இணையகத்தின் தலைவர் திரு. லியாகத் அலிகான் அவர்கள் உரையாற்றுகையில், தாய் இணையகம் விவசாயிகளுக்கு மகத்தான சாதனையை உருவாக்கி வருவதாகவும்; உடுமலைப்பேட்டை காஞ்சிபுரம், வேலூர் ஆகிய இடங்களில் டிராக்டர் உதிரிபாக விற்பனைக் கூடம் துவக்கப்பட இருப்பதாகவும், உடுமலைப் பேட்டை, தேனீ, விழுப்புரம், சேலம் ஆகிய இடங்களில் பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை உருவாக்கப்படவிருப்பதாகவும், மேட்டூர், தஞ்சை ஆகிய இடங்களில் ஜெரேனியத்திலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலைகளும், தருமபுரியில் சவ்வரிசித்தொழிற்சாலையும், சேலத்தில் மரவள்ளிக் கிழங்குத் தொழிற்சாலையும், புதுக்கோட்டையில் உமியிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகள் விரைவில் உருவாக்கப்பட இருக்கின்றனவென்றும், சனோலா எண்ணெய் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விற்பனை செய்யப்பட இருப்பதாகவும், தருமபுரியில் உள்ள எண்ணெய் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பரிசீலனையிலிருப்பதாகவும் தெரிவித்தார்.

பவர் டீலர்கள், டிராக்டர்களை விவசாயிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் வழங்கி மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் உரையாற்றுகையில் ''தாய்'' நிறுவனம் குழந்தைகளை அரவணைக்கின்ற தாயைப்போல விவசாயப் பெருங்குடியினரை அரவணைக்கின்ற தாயாக இயங்குவதாகவும், மேல்மட்ட விவசாயிகள் பெற்று வந்த நவீன விவசாயக் கருவிகளை, இத்தாய் இணையகத்தின் மூலம் நடுத்தர, ஏழை விவசாயிகளும், பெற்று மகிழ்வதாகவும், இந்த இணையகம் வர்த்தக நோக்கத்தோடு இயங்காமல், சேவா நோக்கத்தோடு செம்மையாக இயங்குவதாகவும், இவ்விணையகத்திற்கு மத்திய அரசின் உதவி மிகுதியாகக் கிடைக்க வேண்டுமென்றும், விவசாய மறுமலர்ச்சிக்குத் தாய் நிறுவனம் வெகுவாகப் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## நாமக்கல்லில்...

நாமக்கலில் உள்ள வசந்தபுரம் என்னும் இடத்தில் 1977 ஜூலை மாதம் பிண்ணாக்கிலிருந்து



எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1978-ம் வருடம் பணிகள் முடிவுற்று உற்பத்தி துவக்கப்பட்டது. இதன் மொத்த மூலதனம் 30 இலட்ச ரூபாயாகும்.

நவீன இயந்திர வசதிகள் மூலம் தரமான எண்ணெய்யையும் பிண்ணாக்கையும் பயன்படுத்தி ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3,000 டன் பிண்ணாக்கு பிழியும் திறன் உடையது. எதிர்பாராத வகையில் ஆலையில் நிறுவப்பட்ட கொதிகலன் சரிவர இயங்காமல் போனதால், அதன் பின்பு உற்பத்தி சுமார் இரண்டாண்டு காலம் இயங்காமல் இருந்தது. துரிதப்படுத்தப்பட்டு, தமிழக அரசின் விடா முயற்சியினால், பல இடர்களுக்கு இடையில் இந்த ஆலை மறுவாழ்வு பெற்று 11-6-1982 அன்று மலர்ந்தது. இந்நாள், அக்ரோ இணையக வரலாற்றில் ஒரு பொன்னாள். இதன் துவக்கத்தினால் 50 பேர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பும், 100 பேர்களுக்கு மேலாக மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

ஐரோப்பிய, ஜப்பான் நாடுகளில் மிகுந்த வரவேற்பு இப்பிண்ணாக்கிற்கு உள்ளது-எனவே ஏற்றுமதி மூலம் குறிப்பிடத்தக்க அந்நியச் செலாவணி சட்டும் நல்வாய்ப்பு உள்ளது.

இதன் மூலம் இந்திய நாட்டில் ஏற்றுமதி வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் தோன்றிடும் என்று நம்பப்படுகின்றது.

# தாய் தொடர இருக்கும் பணிகள்....

உடுமலைப்பேட்டை, தேனி, விழுப்புரம், சேலம் ஆகிய இடங்களில் பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் 10 ஜின் வீதம் நிறுவப்படும். இதன் மூலம் 300 பேர்களுக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும். இவைகளுக்கு காட்டன் (பருத்தி) தர காட்டன் கார்ப்பரேஷன் சம்மதம் தெரிவித்துள்ளது.

## சோப்புத் தொழிற்சாலை

சோப்புத் தொழிற்சாலை மேட்டூர் தஞ்சை ஆகிய இடங்களில், இயந்திரம் உபயோகிக்காமல் கையில் செய்யப்படும் 'தாய்' சோப்புத் தொழிற்சாலை நிறுவப்படும். இதன் மூலம் 30 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். சேலத்தில் மரவள்ளிக்கிழங்கு தொழிற்சாலை நிறுவப்படும்.

புதுக்கோட்டையிலுள்ள 90 இலட்ச ரூபாய் செலவிலான அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் புணர்க்குளம் தொழிற்சாலை செப்டம்பர் மாதம் தனது உற்பத்தியைத் துவக்கும். அதற்கான பாய்லர் அடுத்த மாதம் பொருத்தப்படும்.

தரமான பூச்சி கொல்லி மருந்துகளை எங்கள் அக்ரோ நிறுவனம் செய்து விநியோகித்து வருகிறது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மீன்வலை உற்பத்தி அதிகரித்துள்ளது. ஏழை மீனவர்களும் பயன்பெறும் வண்ணம் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறோம்.

கடந்த ஆண்டு உறுதியளித்ததை நிறைவேற்றும் வகையில் 'கடோலா' என்ற பெயரில் கடலை எண்ணெய்யையும் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளோம். கொழுப்புச் சத்துக் குறைந்த சனோலா எங்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நான்கு மாவட்டங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளோம்.

வெளிமாநிலத்திற்கு விற்பனை செய்வதைக் குறைத்துள்ளோம். எண்ணெய்விலையைக் குறைக்கும் பொருட்டு பாலிதீன் பைகள் மூலம் (இந்தியாவிலேயே முதன் முதலாக) எண்ணெய் விற்பனை செய்கிறோம்.

சமீப காலத்தில் உர உற்பத்தி குறைந்தமையால் சற்றுப் பற்றாக் குறை இருந்தாலும் விவசாயிகளுடைய தேவை நிறைவு செய்யப்பட்டது. எதிர் காலத்தில் இத்தகைய குறை ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, ஆந்திர மாநிலம் கோவூரில் நிறுவப்பட



கடந்த 16.7.'82-ம் நாளன்று ஈரோட்டில் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம் விழாவில் அதன் தலைவர் திரு கா. லியாகத் அலிகான் தலைமையில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சு. முத்துச்சாமி அவர்கள் விவசாயிகளுக்குரிய டிராக்டருக்கான சாவியை வழங்கினார். அருகில் தாய் இணையக மேலாண்மை இயக்குநர் வே. கருப்பன், இ.ஆ.ப., பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ. ந. தியானேஸ்வரன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்

உள்ள பூச்சி கொல்லி மருந்துகளுக்குத் தேவையான மூலப் பொருள் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேசன் ரூ. 26 இலட்சம் முதலீடு செய்ய உள்ளது.

சூரிய காந்தி உற்பத்தியைப் பெருக்கிட குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது.

நேரடியாகவும், மறைமுகமாகவும் நிறைந்த வேலைவாய்ப்புக்களை உருவாக்கி வருகிறோம். கடந்த காலங்களில் இதனுடைய பணிகள் ஒரு குறிப்பிட்ட மக்களை மட்டும் சென்றடைந்தது. மாண்புமிகு முதல்வர் அவர்களது கட்டளைப்படி, தற்போது ஏழை, நடுத்தர விவசாயிகளிடமும் எங்கள் திட்டங்கள் சென்றடைந்து பயன் கொடுத்து வருகின்றன.

தர்மபுரி எண்ணெய்த் தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்காக வீடுகட்டும் திட்டம் தீவிர பரிசீலனையில் உள்ளது.

தொழிலாளர்களுக்கான நூல் நிலையம், மனமகிழ் மன்றம் விளையாட்டுத் திடல் ஆகியவை கடந்த மாதம் துவக்கி வைக்கப் பட்டுள்ளன. அலுவலர்கள், தொழிலாளர்கள் நலனையும் கவனித்து, அவர்களது திறமையான பணிகள் மூலம் விவசாயிகளின் தேவையையும் நிறைவு செய்திடும் இந்தத் தமிழ்நாடு அக்ரோ நிறுவனம் அடுத்த ஆண்டு 19 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் இலாபம் சட்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# திசைமாறிய மீனவர்கள்



சென்னை, செங்கற்பட்டு பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் 50-க்கு மேற்பட்டவர்கள் 16-7-82 அன்று அதிகாலையில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றவர்கள் 17-7-82 அன்று வரை கரை திரும்பவில்லை என்று 18-7-82 அன்று சென்னை காவல்துறை கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து (Control Room) மீன்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செய்தி தெரிவிக்கப்பட்டவுடன், சென்னையிலுள்ள கடல் வணிகத்துறைக்கும் (Mercantile Marine Department) திருவொற்றியூரிலுள்ள உதவிப் பொறியாளர் (வொயர்லஸ்) மற்றும் மாநிலத் துறைமுக அலுவலருக்கும் காணாமல் போன மீனவர்களையும் கட்டுமரங்களையும் தேடும் பொருட்டும் மீட்புப் பணிக்கும் உடனடியாக ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. இதைத்தவிர, மீன் துறை அலுவலர்கள் சென்னை மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சம்மேளனத்தின் படகுகளையும் மீன்துறைக்கு உரிய படகுகளையும் கடலுக்கு அனுப்பி காணாமல்போன மீனவர்களையும் கட்டுமரங்களையும் தேடிக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், கடல் பாதுகாப்புப் படையினரிடம் உள்ள அதிவேகப் படகில் மீன்துறை ஆய்வாளர் ஒருவரையும், திருவொற்றியூர் மீனவர்கள் இருவரையும் காணாமல் போன மீனவர்களைத் தேடும் பொருட்டு அனுப்பப்பட்டது.

கீழ்க்கண்ட மீனவர் குப்பத்தைச் சேர்ந்த மீனவர்கள் சென்னைக்கு வடக்கேயுள்ள ஆழ்கடலுக்குச் சென்று 'கோலா' மீன் பிடிக்க ( Flying Fish ) 16-7-82 அதிகாலையில் சென்றவர்கள் ஆவார்கள்.

திருவொற்றியூர் குப்பத்திலிருந்து 30 மீனவர்கள், பலகைத் தொட்டி குப்பத்திலிருந்து 20 மீனவர்கள், காசி விசாலாட்சிக் குப்பத்திலிருந்து 4 மீனவர்கள், காசி விசுவநாதர் கோயில் குப்பத்திலிருந்து 8 மீனவர்கள் நடுவூர் குப்பத்திலிருந்து 55 மீனவர்கள், தொண்டையார் குப்பத்திலிருந்து 6 மீனவர்கள், சிங்கார வேலர் படையாச்சி சாலையிலிருந்து 3 மீனவர்கள், 33 கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் சென்றனர்.

17-7-82 அன்று வர வேண்டிய மேற்கண்ட மீனவர்களில் 67 மீனவர்கள் மட்டும் கரை திரும்பாததால் இந்த மீனவர்கள் ஆந்திரா கடற்கரைப்பகுதிக்கு வழி தவறிச் சென்று விட்டார்களோ என்று கருதி ஆந்திரா கடற்கரைப் பகுதியில் தேடும் பணிக்கு ஈடுபடுத்தப்பட்டது. காணாமல்போன மீனவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மீட்டு வருவதற்காக மீன்துறை நடவடிக்கை எடுத்ததன் பேரில் 18-7-82 மற்றும் 19-7-82 அன்று செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த விரங்கம் கடற்கரைப் பகுதியில் 35 பாகம் முதல் 100 பாகம் வரையில், (1 பாகம் என்பது ஏறத்தாழ 10 கிலோ மீட்டர்) தூரம். காணாமல் போன மீனவர்கள் சிலர் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

16-7-82 அன்று அதிகாலையில் கோலா மீன்பிடிக்கச் சென்று சென்னை மாவட்ட மீனவர்கள் கூட்டுறவு சம்மேளனத்தின் படகின் உதவியால் மீட்கப்பட்டார்கள். 19-7-82 அன்று சென்னை (கிழக்கு மண்டலம்) கடல் பாதுகாப்புப்படையினரால் 14 மீனவர்கள் மீட்கப்பட்டார்கள். மற்றும் அன்றைய தினமே 19 மீனவர்கள் தானாகவே கரை திரும்பினார்கள். கடல் பாதுகாப்புப் படையினர் மீட்கப்பட்ட மீனவர்களுக்கு உணவும் நீரும் வழங்கினார்கள். 20-7-82 அன்று இரவு 7 மீனவர்கள் கரை திரும்பினார்கள். 21-7-82 அன்று எஞ்சிய 3 மீனவர்களும் கரை திரும்பி விட்டார்கள். ஆக, காணாமல்போன 67 மீனவர்களும் தேடிக் கண்டுபிடித்து நல்ல முறையில் கரை சேர்க்கப்பட்டார்கள்.

காணாமல்போன மீனவர்கள் கரை திரும்பாமல் கடலில் தவிக்கின்றார்களோ என்று இவர்களைத் தேடும் பொருட்டு தமிழக அரசுக்குச் சொந்தமான ''செட்டாக்'' ஹெலிகாப்டர் பயன்படுத்தப்பட்டது. கிருஷ்ண பட்டணம் வரை ஹெலிகாப்டர் தேடியபின் மீனவர்கள் யாரும் கடலில் தவிப்பதாகத் தெரியவில்லை என்று கருதி திரும்பியது.

இதைத் தவிர மீன்துறை அலுவலர்கள் காணாமல்போன மீனவர்கள் குப்பத்திற்கு நேரடியாகச் சென்று விசாரணை செய்து காணாமல்போனதாகக் கூறப்பட்ட அத்தனை மீனவர்களும் நல்லபடி கரை திரும்பி விட்டார்களா என்று கணக்கெடுத்து பின்னர் காணாமல்போன மீனவர்கள் எவருக்கும் உயிரிழப்பு ஏதுமில்லைஎன்று தெரிவித்தனர்.

# திரு.வி.க குறித்து தமிழ் அறிஞர்கள்



## மறவா நாட்கள்

“காந்தியவர்கள் இந்திய அரசியலில் நியாமமும் துணிச்சலும் புகுத்திய காலம் இருபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன். அப்போது தென்னாட்டில் எதிர்ப்பை விட்டு விட்டுப் பொறுப்பை எடுத்துக் கொண்ட நான்கைந்து தலைவர்களில் ஒருவர் ஸ்ரீமான் திரு.வி.க. அவர்கள். பகைமையும் ஆகுலமும் போய் அமைதியும் நோன்பும் சாதனங்களான அதிசயத்தைக் கண்ட நாட்கள்-ஆங்கிலப் பிரசங்கங்கள் போய்த் தமிழன்றி வேறு பேச்சுத் தெரியாத பாமரர்களிடையே வேலை துவக்கிய புரட்சி நாட்கள் - தொழிலாளர்களைத் திரட்டிச் சங்கம் நிறுவும் அபாய நெறி, முதல் முதலில் தோன்றிய நாட்கள் -அப்போது சுகமான பள்ளித் தொழிலை விட்டு அரசியல் அலைகடலில் புகுந்தவர் ஸ்ரீமான் திரு.வி.க. அக்காலத்தில் வேலை செய்த அரசியல் தொண்டர்களுக்குத்தான் தெரியும். திரு.வி.க உள்பட எங்கள் சிலருக்குள் வளர்ந்த அன்பும் கட்டுப்பாடும் கூட்டுறவும்; பிறகு எவ்வளவோ சம்பவங்கள் நடைபெற்று விட்டன. ஆயினும் அவருடன் கூடி நாங்கள் சிலர் அந்நாட்களில் செய்த தொண்டில் கண்ட மகிழ்ச்சியை என்றும் மறக்க முடியாது.

—முதறிஞர் ராஜாஜி



ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திரிகாசிரியர் ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும், தீரமும், நேர்மையும், கலங்காமையும், பாரபக்ஷமின்மையும், அவசியம் நேர்ந்த போது காட்டிய நிர்த்தாக்ஷிணியமும் பத்திராசிரியர்த் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின. அவருடைய அருங்குணங்களில் சிலவேனும் என் வியாசங்களில் தோன்றுமாறு தமிழணங்கு திருவருள் புரிவாளாக.

—வ. வே. சு. ஐயர்



## சக்தி வாய்ந்த பேச்சாளர்

திரு. வி. க. வின் பேச்சு மிகவும் சக்தி வாய்ந்தது. அந்தக் காலத்தில் அவர் பேசுகிறார் என்றால்தான் கூட்டம் வரும். நாடெங்கும் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்தார். அந்தக் காலத்தில் தமிழில் பேசுவதற்கு ஆளே கிடையாது. திரு. வி. க. அவர்கள்தான். தமிழில் மிக அருமையாகப் பேசுவார். அவரை முன்மாதிரியாக வைத்து அவருடைய நடையில் பலர் பேச வேண்டும் என்கிற அளவுக்கு அவர் பேச்சால் மக்களுக்கு உணர்ச்சி உண்டாயிற்று.

தந்தை பெரியார்



## புதுமுறை எழுத்து நடை கண்டவர்

தமிழ் இலக்கிய உலகில் நம் திரு.வி.க. சிறு சிறு வாக்கியங்களால் திருந்திய கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக எழுதும் புதுமுறை எழுத்து நடை கண்டவர். எழுத்து நடையில் திரு.வி.க. நடையென்ற ஒரு சிறப்பு நடையும் நிலவுகிறது. ''மனிதவாழ்க்கையும் காந்தியடிகளும்'', ''பெண்ணின் பெருமை'', 'முருகன் அல்லது அழகு' முதலிய நூல்கள் பயிலுந்தோறும் இன்பவொளி வீசி நிற்கின்றன.''

திரு ஔவை சு. துரைசாமி





## தோழிற் சங்கத் தந்தையும் தாயும் அவரே

திரு.வி.க. அவர்கள் சிறந்த தேசத் தலைவராகவும் தெய்வ பக்தராகவும் தமிழ்ப் பக்தராகவும் சிறந்து விளங்கியவர்.

தமிழ்நாட்டில் தொழிற்சங்க இயக்கத்தின் தந்தையாகவும், தாயாகவும் விளங்கியவர். காந்தி அடிகளின் அகிம்சை, எளிமை, சத்தியம் ஆகியவைகளை வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர்..

—பெருந்தலைவர் காமராஜ்



## தன்னலமற்ற தமிழ்த் தொண்டர்

திரு.வி.க. யாரோடும் இகலின்றி அன்போடு பழகும் குணமுடையவர். தம் கல்வியின் பயனாகத் தமிழ்நாட்டு ஏழைகளாகிய தொழிலாளர் நலங்களைப் பாதுகாப்பதில் இடையறாது உழைத்து வந்தார். அதனால் தமிழுலகம் எய்திய பயன் மிகவாகும். இந்த நூற்றாண்டில் பலவகையாலும் தமிழ்நாட்டிற்கு அருந்தொண்டு ஆற்றியவர்களுள் இவர் தலைசிறந்தவர் என்னலாம்.

—பண்டிதமணி கதிரேசனார்



## பொது நோக்குடைய சமய அறிஞர்.

தமிழ்ப்பெரியார் திரு.வி.க. ஏறத்தாழ நாற்பத்தைந்து ஆண்டுகள் தமிழன் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட பெரியார் ஆவர். இவர் முதல்தர எழுத்தாளர்; இனிய - எளிய செந்தமிழ் நடை எழுதுவதில் இணையற்றவர்; அங்ஙனமே பேசுவதிலும் பெயர் பெற்றவர்; தொழிலாளர் தலைவர்; எச்சமயத்தாரும் பாராட்டத்தக்க பொதுநோக்குடைய சமய அறிஞர்.

—டாக்டர் மா. இராசமாணிக்கம்



## தமக்கென வாழாதவர்

தமிழுக்கும் தமிழ் எழுத்தாளர் குலத்துக்கும் தந்தையாக இருந்தார்; தொழிலாளர் குலத்துக்குத் தாயாகி விளங்குகிறார். எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய திறத்தினால் அந்தணர் திலகமாகத் திகழ்ந்தார்; ‘என் கடன் பணி செய்துகிடப்பதே’ என்ற திருவாக்கை வாழ்க்கையில் கடைப்பிடித்து நடந்தார். தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழ்ந்தார்: அன்பே சிவம் என்ற உண்மையில் வாழ்க்கையெல்லாம் திளைத்திருந்தார்.

—கல்கி

# தமிழ்த் தென்றல் திரு. வி. க

## பல்வகைத் தோற்றங்கள்



1912



1914



1936





1918



1924







# இரைப்பை-குடல்-மலக்குடல் அறுவை மருத்துவம்

சென்னையில், பல்கலைக் கழகம்தோன்றுவதற்கு முன்னாலேயே தோன்றிய மூத்த பெருமை உடையது அரசு பொது மருத்துவ மனை. இராணுவச் சிப்பாய்களின் சிகிச்சைக் கென்றே மிகச் சாதாரண அளவில் துவக்கப் பெற்றதுதான், இன்று ஏறத்தாழ முந்நூறாண்டுக்காலமுதிர்ச்சிபெற்றும் வளர்ச்சிபெற்றும் திகழ்கிறது.

நம் உடம்பில் எத்தனை உறுப்புகள் உண்டோ, நமக்கு எத்தனை வகையான நோய்க்கூறுகள் வருவதுண்டோ, அவ்வளவுக்குமான தனித்தனிச் சிகிச்சைப் பிரிவுகள் சென்னைஅரசுப் பொதுமருத்துவமனையில் உண்டு.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை மெய்ப்பிப்பதில் அத்தனைப் பிரிவுகளுமே போட்டிபோட்டுக்கொண்டு செயல்பட்டு வருகின்றன. நோய் நாடி நோய் முதல்-நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும் திறமைமிக்க மருத்துவ நிபுணர்கள் ஒவ்வொரு பிரிவுக்கும் தலைமை வகிக்கிறார்கள்; அவர்களின் கீழே அங்கம் வகிக்கிறார்கள்.

ஒவ்வொரு மருத்துவப் பிரிவிலும் - நம் நாட்டிலே மட்டுமின்றி, அமெரிக்கா ரஷ்யா போன்ற வியத்தகு விஞ்ஞான நேர்த்திபெற்ற நாடுகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட, பெரும் பொருள்விலைமதிப்புடைய நூதன மருத்துவக் கருவிகள் நோயறிவதற்காகவும், சிகிச்சையளிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில், சென்னை-அரசுப்பொது மருத்துவமனையிலே சிறப்புற்று விளங்கிடும் ஒவ்வொரு பிரிவும் பற்றித் தொடரவிருக்கும் மருத்துவக் கட்டுரை அணிவகுப்பின் முதலாவது கட்டுரை இது.

'இரைப்பை-குடல்-மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதி (Surgical Gastro entarology and proctology Department) இங்கே படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

டாக்டர் திரு. ந.ரங்கபாஷ்யம் தலைமையில் திறம்பட இந்தப் பிரிவு இயங்கி வருகிறது.

உதவி மருத்துவர்களாகத் திரு. து. ஞானப்பிரகாசம், திரு. நடனசபாபதி, திரு. சண்முகம், திருமதி ஸ்ரீகுமாரி, திரு. திருவதனன் ஆகியோர் அயராது இப்பிரிவில் இயங்கி வருகிறார்கள்.

இவர்கள் தவிர—

ஏழு பட்ட மேற்படிப்பு மாணவர்களும், 8 பயிற்சி மருத்துவர்களும் துவளாது துணை புரிகிறார்கள் அவர்களுக்கு.

இரைப்பையில், குடல் பகுதியில், மலக்குடல் பகுதியில் எத்தகைய இடர்ப்பாடுகள் வந்தாலும் சரி, அவை யாவும் இந்த மருத்துவப் பிரிவிலே நிவர்த்திக்கப்படுகின்றன. ஆழ்ந்த பரிசோதனை, அவசியமானால் அறுவைச் சிகிச்சை என்ற வகையில் இந்தப் பிரிவின் இயக்கம் அமைந்துள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள உடல் பகுதிகளில் யாருக்கு என்ன குறையானாலும் சரி; நாளொன்று போவதற்குள் நான்பட்ட பாடனைத்தும் தாளம் படுமோ தறிபடுமோ என்று தவித்துப்புலம்ப வேண்டிய அவசியமே இல்லை. நேரே இந்த மருத்துவப் பிரிவுக்கு வந்து விடலாம்.

இரைப்பை - குடல் -மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதிக்குத் தொடர்புடைய

—பி. எல். இராசேந்திரன்

endoscope Room' எனப்படும் நோயறியும் நூதனக் கருவிகள் உள்ள அறைக்குச் செல்கிறோம்.

டாக்டர் து. ஞானப்பிரகாசம் அங்குள்ள அளவற்ற விலைமதிப்புடைய அயல்நாட்டுக் கருவிகள் இயக்கப்படும் விதம்பற்றி நமக்கு விளக்குகிறார். செவிலியர் திருமதி அருந்ததி அவருக்குத் துணைபுரிகிறார். 'இரைப்பை நோக்கி' எனப்படும் (Upper G I Endoscope) ஒரு நூதன மருத்துவ நோயறி கருவி பற்றி நமக்கு விளக்கப்படுகிறது. ஒரு மீட்டர் 6 சென்ட்டி மீட்டர் அளவுடையதும் எண்ணற்ற 'Glass Fiber' ஆல் ஆனதுமான நீளக்குழல் ஒன்று காட்டப்படுகிறது. அதன் நுனியில் மின்விளக்கு!

''இரைப்பையில் ஏதாவது கோளாறு என்றால், வாய்வழியாக இதை நோயாளிக்குள்ளே செலுத்தி அங்குள்ள நோய்க்கூறு பற்றி அறிய முடியும். ஈரல் இறுக்கி நோய், குடலில் இரத்தக் கசிவு ஏற்படல், குடலுக்குள் கட்டி ஏற்பட்டு அதனால் ஏற்படும் துன்பங்கள் ஆகியவற்றை அறிய இந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது.'' என்று தனது விளக்கத்தை மருத்துவ மாணவர்க்கு வகுப்பு நடத்துவது போலத் தொடர்கிறார் டாக்டர்.

டாக்டர் ரங்கபாஷ்யம் அது தொடர்பான வேறு சில விவரங்களைச் சொல்லுகிறார்.

''சரியான புரதச்சத்து உணவில் இல்லாமல் தொடர்ந்து சாப்பிடும் காரணமாகவும் வேறு சிலவற்றாலும் ஈரல் கெட்டுவிடும்; இது தொடர்பானதுதான் ஈரல் இறுக்கிநோய். குடலில் இரத்தம் தேங்கி உறைந்து சிலருக்குக் குடலில் முடிச்சு உண்டாகிவிடும். இரத்த வாந்தி எடுப்பார்கள். இப்படிப்பட்ட இரைப்பை-குடல் தொடர்பான நோய்களை இதன்மூலம் அறிய முடியும். குடலில் ஏற்படும் கட்டியை இந்த அப்பர் எண்டாஸ்கோப் நுனியில் ஊசி பொறுத்தி, அதன் மூலமே மருந்தைச் செலுத்திக் கரைத்துவிட முடியும். அல்லது சிறிய வாயுடைய வேறொன்றைப் பொருத்தி அந்தக் கட்டி புற்றுநோய் தொடர்பானதா என்றறிய, பரிசோதனைக்காகக் கொஞ்சம் அந்தக் கட்டியிலிருந்து திசுவைப் பிய்த்து வெளியே எடுத்துக்கொள்ளவும் செய்யலாம்.''

'அப்பர் என்டாஸ்கோப்' மூலம் நோயாளி பரிசோதிக்கப்படுகிறார்.



டாக்டர் ந.ரங்கபாஷ்யத்தின் இந்த விளக்கத்தை, அந்தக் குழலின் நுனியில் ஊசியைப் பொருத்தியும், கவ்வும் தன்மையுள்ள சிறுவாய் ஊசி பொருத்தியும் நமக்கு காட்டுகிறார் டாக்டர் து. ஞானப்பிரகாசம்.

இவர் இந்தக் கருவிகளை இயக்குவது பற்றி சண்டிகாரிலேயே போய்ப்பயிற்சிபெற்று வந்திருக்கிறார்.

சென்னையைச் சேர்ந்த நோயாளியான சிவா என்பவரின் வாய் வழியே இந்தக் குழல் செலுத்திக் காட்டப்படுகிறது. அந்தக் குழலின் அடிப்பாகத்தில் இணைக்கப்பட்டுள்ள கண்ணாடி வழியே, அதுசெல்லும் உள்வழிகளை நம்மால் காண முடிகிறது.

உடலுக்குள், பாதிக்கப்பட்ட பகுதியைப் படம் பிடித்துக் கொள்ள பிரத்யேகக் காமிரா பொருத்திக் கொள்ளும் வசதியும் இதில் உள்ளது. விரிவான ஆராய்ச்சிக்கு இப்படிப்படம் பிடிப்பது பெரிதும் உதவும்.

இதே போல 'மலக்குடல் நோக்கி(Lower GI endoscope)ஒன்றும் இருக்கிறது. இதுவும் அதைப் போலவே ஒரு மீட்டர் 50 சென்டி மீட்டர் நீளமுள்ள மெல்லிய குழாய்தான்.

மலப்புற வழிமூலம் இதை உடலுக்குள் செலுத்தி பெருங்குடல் முழுவதையும் பார்க்க முடியும்.

குடலுக்குள் வீணான சதை வளர்ச்சி அல்லது கட்டி இருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். உள்ளுக்குள்ளேயே அந்தக் கட்டியை, அளவான மின்சாரம் செலுத்தி வெட்டியெடுத்துவிடலாம். கட்டி மட்டுமல்லாமல் குடலில் நாம் சாப்பிடும் மாமிச உணவின் எலும்புத் துண்டு, மீன்முள் அல்லது தவறி விழுங்கப்பட்டுவிட்ட நாணயம் போன்றவற்றையும் உயிருக்கு ஆபத்தில்லாமல் வெட்டி யெடுத்துவிடலாம்.

இதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் 'Electro Surgical Unit' எனப் படுகின்றன. மேலே கூறிய கருவிகளின் விலை பல இலட்சம் ரூபாய்கள் என்றால் இதன் விலை 45 ஆயிரம் ரூபாய்.

குடலுக்குள் எங்காவது புண் ஏற்பட்டு அதனால் இரத்தக் கசிவு இருக்குமானால் புண்பட்ட பகுதியைத் தீய்த்து இக்கருவிமூலம் இரத்தக் கசிவை நிறுத்தி விட முடியும். பித்த நீர்க் கசிவையும் இதன் மூலம் தவிர்க்கமுடியும்.

இந்த ஒப்பற்ற கருவிகள் எல்லாமே, ஜப்பான் நாட்டு 'ஒலிம்பஸ்' தயாரிப்புகள் ஆகும்.

''சென்னை-அரசு பொதுமருத்துவமனையில் உள்ள இந்த அரிய உயிர் காக்கும் கருவிகள். தென்னிந்தியாவிலேயே இங்கே தவிர

வேறு எங்கும் இல்லை; இவை யாவும் இந்த இரண்டு மூன்று ஆண்டில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் உதவியோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களால் தருவிக்கப்பட்டவை யாகும் என்கிறார் டாக்டர் ந. ரங்கபாஷ்யம்.

'இரைப்பை, குடல், மலக்குடல் இயல் அறுவைச் சிகிச்சைப் பகுதி' என்றொரு புத்தகத்தைத் தமிழிலேயே எழுதி வெளியிட்டிருக்கிறார்கள் டாக்டர் திரு. ந. ரங்கபாஷ்யமும், டாக்டர் திரு. து. ஞானப்பிரகாசமும்.

இவர்களது மருத்துவப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் வார்டுக்குச் செல்கிறோம். அங்கே, ஒரு கால் முழுவதும் அடியோடு நீக்கப்பட்டுப் படுக்கையில் இருக்கும் ஒரு சிறுவனின் மருத்துவ அறிக்கை நம் கண்ணில் படுகிறது. பாலசுப்பிரமணியம், வயது 16, ஆத்தூர், சேலம் மாவட்டம்.

''எதனால் டாக்டர் இந்தச் சிறுவனுக்கு இப்படி?''

''காலில் புற்று நோய். இடுப்பில் அது தொடர்புடைய எலும்பு வரை நீக்கியாக வேண்டும். இல்லாவிட்டால் உயிருக்கு ஆபத்தாகி விடும்.....''

''சிறுவர்களுக்குக் கூடவா புற்றுநோய் வரும்?''

''பிறக்கிற குழந்தைகளுக்கே இருக்கிறது சார்...'' என்று கூறிவிட்டு டாக்டர் ரங்கபாஷ்யம் தொடர்கிறார்.

''இந்தக் கேஸ்கூட புதுவையில் கொண்டு போய்ப் பார்க்கப்பட்டு அங்கு முடியாமல் இங்கு வந்ததாகும். கடந்த இரண்டாண்டில் இப்படிப்பட்ட சிகிச்சைகள் ஒன்பதை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறோம். இதுவரை இந்தச் சிகிச்சை முறை லண்டனில்தான் செய்யப்பட்டு வந்தது.''

இரைப்பை, குடல், மலக்குடல் அறுவைச் சிகிச்சைப் பகுதியில் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் அறுவைச் சிகிச்சை செய்யப்படுகின்றன. இதன்படி, வாரத்தில் சுமார் 50 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

அறுவைச்சிகிச்சை அரங்கினுள் அதற்கான தனி உடை, குல்லாய், காலணி (Over Shoe) சகிதம் நம்மை அழைத்துச் செல்கிறார்கள்.

அங்கே ஒரு பெண்மணி மயக்க நிலையில் மல்லாந்திருக்கிறார். ஆண்-பெண் டாக்டரி



**சிறுநீர்க் குழாயும், மலக்குழாயும் இணைந்ததற்கு அறுவைச் சிகிச்சை**

**புற்றுநோய் காரணமாக இடுப்பெலும்போடு கால் நீக்கப்பட்ட சிறுவன்**



**மூலநோய்க்கு நடக்கும் அறுவைச் சிகிச்சை**



கள் சிலர் அவரது பிறப்பு உறுப்பில் ஏதோ அறுவைச் சிகிச்சையில் ஆழ்ந்திருக்கின்றனர். டாக்டரிடம் விவரம் கேட்கிறோம்.

கள்ளக்குறிச்சியைச் சேர்ந்த பாஞ்சாயி என்ற அந்த 30 வயதுப் பெண்மணிக்கு மலக் குடலில் ஏதோ சிரமம் ஏற்பட்டு, மலவழியும் சிறுநீர்வழியும் இணைந்து விட்டிருக்கிறது. இதனால் மாதவிலக்குக் காலங்களில் பெரும் அவதிக்கு ஆளாகியிருக்கிறார். இதைச் சரிப் படுத்துவதே சிகிச்சை (Recto Veginal Fistula) முதலில் சில காலம் அந்தப் பெண்ணின் மலக்குடல் அடிவயிற்றின் இடதுபுறத்திற்குத் திருப்பி விடப்பட்டு, வயிற்றில் துவாரம் செய்து அதன் மூலம் மலம் வெளியேற வகை செய்துள்ளனர். இதில் ஒரு துன்பம் என்ன வென்றால், தன்னையறியாமலேயே மலம் வெளிப்படும். இதனால் இடதுவிலாவில் சிறிய பை ஒன்று இணைத்துள்ளனர். ஆனாலும் துர்நாற்றத்தை அவரோ மற்றவர்களோ சகித் துக்கொள்ள வேண்டுமே!

மலக்குடலின் கெட்டுப்போய்ச் சுருங்கிய சதைப் பகுதி நீக்கப்பட்டு, மற்ற பாதிப்புகள் சிகிச்சை மூலம் செம்மைப்படுத்தப்பட்ட பின் திரும்பவும் அதை மலப்புறவாசலில் இணைப் பாக வைத்துப் பொருத்துகிறார்கள். 'Stapler Gun' என்ற கருவி மூலம் இவ்வாறான பொருத்தும் பணிகள் நிகழ்த்தப்படுகின்றன. 'Alloy' என்கிற கலப்பு உலோகப் பொருள் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

''இது போன்ற சங்கடம் உடலில் எத னால் ஏற்படும்?''

''புற்றுநோய் காரணமா, தொற்று நோய் காரணமா (infection), டி.பி. காரணமா, பால்வினைநோய் (Sexual Transmission disease) காரணமா என்பது இனிமேல்தான் கண்ட றியப்படும். அப்படிப்பட்ட தொந்தரவு களால் மலக்குடல்சுருங்கிஇப்படிப்பட்ட துன் பங்கள் நேரும்.''

அடுத்து இன்னொரு பெண்மணிக்கு நடத்தப்படும் மூலநோய் அறுவைச் சிகிச்சை யைப் பார்க்கிறோம். நாம் கேட்குமுன்பே விளக்கமளிக்கிறார் டாக்டர்.

மூலம் (Piles) என்பதே இரத்தக் குழாயின் முடிச்சுதான். இதில் முதலாவது, இரண்டாவது மூன்றாவது நான்காவது கட் டம் என நான்கு கட்டங்கள் உண்டு. முதலி ரண்டு கட்டங்களில் மூலம் என்றால் 'ஸ்டேப் லர் கன்' (Stapler Gun) மூலம் 'ரப்பர்பேண்ட்' போட்டே அதை அறுந்துவிழச் செய்துவிட லாம். சிரமமில்லாமல் ஊசிபோட்டும் சிகிச்சை செய்து விடமுடியும்.

மூன்றாவது, நான்காவது கட்டத்தில், மூலம் மலப்புற வழிக்கு வெளியே நீட்டிக் கொண்டு வந்து விடும். இரத்தம் வடியும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் அறுவைச் சிகிச்சை அவசியமாகிறது.

இவ்வளவு விவரங்களையும் தெரிந்து கொண்டு, தலைமை மருத்துவர் டாக்டர் ந. ரங்கபாஷ்யத்தோடு அவரது தனி அறைக்குச் செல்கிறோம். தான் கவனிக்கும் -அல்லது கவ னித்த நோய்கள் பற்றிய 'ஸ்லைடு' (Slides) களைப் போட்டுக் காட்டி அந்தந்தப் படங்கள் பற்றிய விளக்கங்களையும் தெரிவிக்கிறார் அவர்.

''இப்படிப்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை செய்துகொள்வதென்றால் ஏராளமாகச் செல வாகும் என்கிறார்களே, மெய்தானா?'' என்கி றோம்

''அரசாங்க மருத்துவமனையில் எப்படி சார் நீங்கள் சொல்லுவது போல் செலவா கும்?'' என்று சிரித்தவாறே நம்மைக் கேட்கிறார்'' அவர். ''எந்த நோயாளி யானாலும் ஆரம்ப சிகிச்சை சரியாக இருக்க வேண்டும். அது சரியில்லாத பட்சத்தில் உபாதை முற்றிய பின்தான் பெரும் பாலான 'கேஸ்'கள் எங்களிடம் வருகின்றன. தகுந்த உபகரணங்கள் இருப்பதாலும், திற மைமிக்க உதவியாளர்கள் இருப்பதனாலும் எங்கள் சிகிச்சை வெற்றிகரமாக முடிகிறது. ஆரம்பச்சிகிச்சை சரியாக இருக்கவேண்டும் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், சில நாட்களுக்கு முன்னால் பானுமதி என்பவர் தஞ்சை மாவட்டத்திலிருந்து இங்கே எங்களிடம் சிகிச்சை பெற வந்தார். அடிக்கடி இரத்தப்போக்கு இருப்பதாகக் கூறினார்கள். இதேபோல் அவர் வேறு எங்கோ மருத்துவரி

டாக்டர் ரங்கபாஷ்யம் தன் உதவியாளர்களுடன்



# உங்களுக்குத் தெரியுமா ?

அந்தமான், நிக்கோபர்-மற்றும் லட்சத் தீவுகள் உட்பட இந்திய கடற்கரையின் நீளம் மொத்தம் 7,000 கிலோ மீட்டர்.

இத்தகைய நெடிய கடற்கரையில் கப்பல்களை வழிநடத்த 1947-ல் 17 கலங்கரை விளக்குகள் மட்டுமே இருந்தன.

தற்போது நமது நாட்டில் 144 கலங்கரை விளக்குகள் ஒரு கலங்கரை கப்பல், 13 பனி மட்ட சமிக்ஞை கருவிகள், 12 ரேடியோ பீகன் கருவிகள் 12 டெக்கானோலிகேட்டர் செயின் நிலையங்கள், 6 ரேகன்கள், 20 நங்கூர் விளக்குகள், 6 படகுகள் மற்றும் 2 கலங்கரை விளக்கு டெண்டர்கள் கப்பல் போக்குவரத்துக்கு உதவுகின்றன.

இந்திய கடற்கரை கல்கத்தா, ஜாம்நகர், பம்பாய், கொச்சி, சென்னை மற்றும் போர்ட் பிளேர் ஆகியவற்றைத் தலைமையகமாகக் கொண்ட ஆறு கலங்கரை விளக்க மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கலங்கரை விளக்கு மற்றும் கலங்கரை கப்பல்கள் ஒரு தற்சார்பு அமைப்பாகும்.

இந்தியத் துறைமுகங்களிலிருந்து செல்லும் கப்பல்களுக்கு டன்னுக்கு ரூ 1.50 வீதமும், இந்திய கடற்பகுதி வழியே செல்லும் கப்பல்களுக்கு டன்னுக்கு ஆறு காசு வீதமும், வசூலிப்பதன் மூலம் இந்தத் துறை வருவாய் ஈட்டுகின்றது.

இந்தத் துறையின் ஆண்டு வருமானம் ரூ. 600 இலட்சம்.

ஆறாவது திட்டத்தில் புதிய கலங்கரை விளக்குகளுக்காக ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டுக்கான ஒதுக்கீடு ரூ. 6. 57 கோடி.





புற்றுநோய் கண்ட காலும், அது நீக்கப்பட்ட பின்பும்

டம் கூற, அந்தப் பெண் சொன்னதைக் கேட்டு அவர்கள் எழுதிய மருத்துவக் குறிப்பு என்னிடம் காட்டப்பட்டது. அதைப் பார்த்தால் புற்று நோய்த் துவக்கம்போல் எழுதப்பட்டிருந்தது. கடைசியில் இங்கே அந்தப் பெண்ணைப் பலவகையிலும் பரிசோதித்துப் பார்த்தால், எழுதப்பட்டிருந்த மருத்துவக் குறிப்புக்கும் அந்தப் பெண்ணுக்கும் சம்பந்தமே இல்லை. அந்தப் பெண்ணில் எல்லாமே சரியாக இருந்தது. மாதவிலக்கு சிறிது தள்ளிப் போய், இரண்டொரு நாள் அதிகம் இருந்திருக்கிறது. அவ்வளவுதான். மனப்பீதிவேறு. இப்படிப்பட்ட முறையற்ற ஆரம்பப் பரிசோதனையால் எங்களுக்கும் கஷ்டம் அவர்களுக்கும் கஷ்டம் அல்லவா? இப்படி அவர்கள் செய்கிற வீண் செலவுகளுக்கும் எங்களுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லையே!''

சிறு நீரகத்தில் புற்றுநோய் கண்டால் அது தொடர்பான சதைப் பகுதிகளை அடியோடு நீக்கிவிடும் அறுவைச் சிகிச்சை ஒன்று உண்டு. அதன் பிறகு, நம் நிதானமில்லாமல் சிறு நீர் போகும் சங்கடம் இருந்தது. அத்தகைய அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, சிறு நீர் போவதை நம் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முடியும் என்று செய்து காட்டி டாக்டர் ந.ரங்கபாஷ்யம் தயாரித்த மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரையொன்று அனைத்துலக மருத்துவ மேதைகளால் ஏற்கப்பட்டு ('Journal of the Royal College of Surgeons of Edinburgh' ஏட்டிலும் வெளியிடப்பட்டுள்ளது.

# தமிழ்ப் பெருமான் பாரதியும்





# தமிழ்த் தென்றல் திரு.வி.கவும்

சிறுவை நச்சினார்க்கினியன்

"தமிழர் மறந்தாலும், தமிழ் மறவாத இப்புலவர் பெருமான் பாக்கள் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு அவியாது, வளர்ந்து தமிழக முழுவதும் இருள கற்றி, ஒளிரச் செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது'' என்கிறார் டாக்டர் எஸ்.சோமசுந்தர பாரதியார். மகாகவி பாரதியாரைப் போற்றி திங்கள்போல திசை விளக்கிக் கொண்டிருக்கும் பாரதிக்கு நூற்றாண்டு விழா எங்கணும் எடுத்து அஞ்சலி செலுத்தி மகிழ்கிறோம். மக்கள் கவிஞராய், அனைத்துலகத் தமிழ்க் கவிஞராய், நாட்டுக் கவிஞராய், வரலாற்றுக் கவிஞராய், பெண்ணுரிமைக் கவிஞராய், புதுமைக் கவிஞராய், சமுதாயச் சீர்திருத்தக் கவிஞராய், இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பையைக் களைந்தெறியும் புரட்சிக் கவிஞராய்த் திகழ்ந்தவர் பாரதியார். இவர் பிறந்தது 11.12.82-ல் இக்கவிஞரை 26.8.83 ல் பிறந்த தமிழ்த்தென்றல் திரு.வி.க அவர்கள் ''தமிழ்ப் பெருமான்'' என விளித்து பெருமைப்படுகிறார்.

தமிழ்ப் பெருமானும் தமிழ்த் தென்றலும் சம காலத்தவர். வயதின் வேறுபாடு சுமார் ஒன்பது மாதந்தான். இத் தமிழ்த் தென்றலுக்கும் நூற்றாண்டு விழா நடக்க இருக்கிறது. இருவரும் தேச பக்தர்கள்; இருவரும் பத்திரிகை ஆசிரியர்கள்; இருவரும் கவிஞர்கள்; இருவரும் இறைநாட்டம் உடையவர்கள், இருவரும் பெண்ணுரிமைக்குப் போர் புரிந்தவர்கள்; இருவரும் சிறந்த சீர்த்திருத்த வாதிகள்; திரு.வி.க. தொழிற் சங்கத்தில் அதிகக் கவனம் செலுத்தினார். மொழி வல்லுனராயும் விளங்கினார்கள். இருவரும் சாதி, சமய, சாத்திரச் சந்தடி, கோத்திரக் குப்பைகளைக் களைந்தெறியப் பாடுபட்ட சமூகநலச் சிற்பிகள்.

பாரதியார் ''சுதேசமித்திரன்'' அலுவலகத்தில் பணி செய்தபோது இராயப்பேட்டைப் பகுதியில் சில நாள் குடியிருந்தார். எனவே பாரதியும் திரு.வி.க.வும் கலந்து உரையாட பலமுறை வாய்ப்பு ஏற்பட்டது. இரு தேச பக்தர்களும் நோய உறவாயினர். அச்சமயம் அரசியல் கருத்துக்களைத் தமிழில் வடித்து மக்கள் புரிந்து கொள்ளத்தக்கவகையில் தம் ''தேசபக்தனை'' நடத்தி வந்த காலம். தேசபக்தனில் அரசின் கண்ணோட்டம் நெருங்கிய முறையில் இருந்தது. அரசு அஞ்சிய காலம் திரு.வி.க. அவர்கள் பாரதியைப் பற்றி, அவர் தம் தேசப் பற்றினைப் பற்றி தம் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிடத் தவறவில்லை. முதல் குறிப்பில்,

''1907 ஆம் ஆண்டில் திலகர் பெருமான் தலைமையில் அமிதவாதப் பிரசாரம் நாடு முழுவதும் நடைபெற்றது. பிரசாரத்திற் கென்று, தென்னாட்டிலும் ஒரு கூட்டம் திரண்டது. அக் கூட்டத்தவருள் குறிக்கத் தக்கவர் வி.ஒ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சுப்ரமணியபாரதியார், ஸ்ரீநிவாசாச்சாரியார், சுரேந்திரநாதத் ஆர்யா, சக்கரைச்செட்டியார், எஸ்.துரைசாமி ஐயர், ஹரி சர்வோத்தம ராவ் முதலியோர். காலவேகம் என்னைப் பத்திரிகை படிக்கச் செய்தது. அரவிந்த கோஷால் நடத்தப் பெற்ற,''வந்தேமாதரம்'' என்ற வீரஞ்செறிந்த பத்திரிகையை படிக்கப் படிக்க ஊக்கம் பிறக்கும்; நாட்டு விடுதலை வேட்கை எழும். அந்நாளில் தமிழில், 'இந்தியா'' என்றொரு பத்திரிகை ஸ்ரீநிவாசாச்சாரியார், சுப்ரமணிய பாரதியார் முதலியோரால் நடத்தப் பெற்றது. தென்னாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை அப்பத்திரிகைக்கு உண்டு.''

ஒரு சமயம் பாரதியார் அவர்கள் புதுவையைப் புகலிடமாகக் கொண்டபோது,

திரு.வி.க.தாம் நடத்திவந்த ''தேசபக்தன்'' இதழில், பாரதிக்காகப் பரிந்து பேசுவதைக் கவனிப்போம்.

''அந்நாளில் தேசபக்தர் சிலர் புதுவையைப் புகலிடமாகக் கொண்டனர். அவருள் இங்கே குறிக்கத்தக்கவர் இருவர். ஒருவர் வ.வே.சு. ஐயர்; மற்றொருவர் சுப்பிரமணிய பாரதியார். இருவரும் பிரிட்டிஷ் எல்லையில் உலவும் உரிமையுடையவராய் இருத்தல் வேண்டும்' என்ற கிளர்ச்சியைத் 'தேசபக்தன்' தொடங்கினான். கிளர்ச்சி வெற்றியடைந்தது. புதுவையினின்றும் வ.வே.சு.ஐயரும், பாரதியாரும் *(1920 பிப்ரவரியில்)* வெளிவந்தனர்.

மீண்டும் பாரதிக்கு ஒரு தடை ஏற்பட்டது. அத்தடையை நீக்க திரு.வி.க. தம் 'தேசபக்தனின்' வாயிலாக கிளர்ச்சி செய்தார்.

''சுப்பிரமணிய பாரதியாருக்குச் சில தடைகள் கடலூரில் கிடத்தப்பட்டன என்று ஓர் அரசியல் கிள்ளை ''தேசபக்தனுக்கு' அறிவித்தது. தேசபக்தன், பாசுபதம் எழுந்தது. தடைகள் உருவெளியாயின. கவிஞர் சென்னை சேர்ந்தனர். யான் பாரதியாரை டிராம்வே தொழிலாளர் சங்கத்தில் கண்டேன். பாரதியார் நாவினின்றும் சக்திப்பாட்டு வீறிட்டது.

இராயப்பேட்டையில் திரு.வி.க. அவர்கள் பாலசுப்ரமணிய பக்தஜன சபையை நண்பர்களுடன் அமைத்து அங்கே சைவ சமய அறப்பாளறிய இலக்கியச் சுவையுடன் நடத்திவந்த காலம். ஒருநாள் பாரதியார் பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை பஜனையில் கலந்து மகிழ்வதைத் திரு.வி.க. தமக்கே உரிய பூரிப்பில் திளைத்துப் பாரதியாரைத் ''தமிழ்ப்பெருமான்'' என விளித்து மகிழ்கிறார்.

''ஏப்ரல் ஆறாம் நாள் மலர்ந்தது. அடிகளின் ஆத்ம சக்தி மனங் கமழ்ந்தது. முன் ஏற்பாட்டின்படி காலையில் இராயப்பேட்டையிலுள்ள பஜனை கோஷ்டிகளும் மற்றவர்களும் தேசபக்தன் நிலையம் போந்தார்கள். அவர்களுடன் சுப்பராய காமத்தும் யானும் ஊர்வலம் வந்தோம்; பிற்பகல் ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் ''குகானந்த நிலையத்தை' அடைந்தோம். சுப்பிரமணிய பாரதியார் பஜனை கோஷ்டியில் எங்கேயோ கலந்து வந்தார். அவரைக் கண்டதும் செவி அவரது பாட்டை விரும்பியது. பாரதியாரைப் பாடுமாறு கேட்டேன். தமிழ்பெருமான், ''முருகா முருகா...'' என்றும் பாடத் தொடங்கினார். பாட்டு-தமிழ்ப் பாட்டு தேனினும் இனிய முருகன்பாட்டு படத்திலுள்ள ஓவிய முருகனை நகரச் செய்தது. ஓவிய உருவம் வீறுடன் வெளிவருவது போன்ற தோற்றம் உண்டாயிற்று. அன்பர் மெய்கள் அரும்பின; விதிர் விதிர்த்தன; சிலர் மயங்கினர். சிலர் விழுந்தனர்; சிலர் கண்ணீர் உகுத்துத் தம்மை மறந்தனர்; எல்லோரும் ஆனந்தப் பரவசமாயினர், பாரதியார் சித்திரப் பதுமையானார். பாட்டுக்கும் ஓவியத்துக்கும் உள்ள ஒருமைப்பாட்டை யான் கண்ணாரக் கருத்தாரக் கண்டேன்.''

ஒருசமயம் திரு.வி.க. அவர்கள் புதுவையில் ''சிலப்பதிகாரம்'' பற்றி விரிவுரை நிகழ்த்துகிறார். அச் சொற்பொழிவுக்குப் பாரதியாரும் பாரதிதாசனும் சென்றுள்ளனர். திரு.வி.க.வின் சொற்பொழிவைக் கேட்ட பாரதியார் உள்ளம் பரவசம் அடைந்து பேரின்ப வெள்ளத்தில் திளைத்திருப்பதைப் பாவேந்தர் பாரதிதாசன் கவிதை மூலம் சுவைப்போம்.

''புதுவையிலே கலியாண சுந்தரனார்
ஆற்றிய சொற் பொழிவில், தூய
மதுவையள்ளி மலர் தேக்கி வண்டு கட்கு
விருந்தாக்கி மயக்கு தல்போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகாரச் சுவையை
நடையழகைப் புகலும் போதில்
**இதுவையா பேச்சென்பேன்; பாரதியார்**
**கைகொட்டி எழுவார், வீழ்வார்!''**

இங்ஙனம் இரு தேசபக்தர்களுக்கிடையே நீண்டதோர் உறவு தென்றல் கமழ தமிழ்ப் பெருமானை கட்டிப் பிணைத்தது.

# திரு.வி.க

## படித்த பள்ளிகள்

ஆரியன் பிரைமரி பாடசாலை
இராயப்பேட்டை (1891)

வெஸ்லி கல்லூரி, இராயப்பேட்டை
(1894)

## பணியாற்றிய நிலையங்கள்

ஸ்பென்சர் கம்பெனி — கணக்கர்
(1907-8)

வெஸ்லியன் மிஷன் பள்ளி — ஆசிரியர்
ஆயிரம்விளக்கு 6 ஆண்டுகள்
(1910–1916)

வெஸ்லி கல்லூரி — தமிழ்ப் பேராசிரியர் $1\frac{1}{2}$ ஆண்டு
இராயப்பேட்டை
(1916 ஜூன்—1917 டிசம்பர்)

## பயன்படுத்திய நூலகங்கள்

**தந்தையாரின் தகரப் பெட்டியில் இருந்த நூல்கள்**

**வெஸ்லி பள்ளி நூல் நிலையம்**

**திருக்குறள் சிதம்பர முதலியார் நூல் நிலையம்**

**கன்னிமாரா நூல் நிலையம்**

**தியாசாபிகல் நூல் நிலையம்**

**அன்னிபெசண்ட் அம்மையார் தந்த நூல்கள் கொண்ட தம் நூல் நிலையம்**

**வெங்கடராமய்யர் (தேசபக்தனில் பணியாற்றியவர்) நூல் நிலையம்**

**இயற்கை நூல் நிலையம்**

# மனைவியால் பெற்ற மாண்பு

மு. முத்துக்காளத்தி

உள்ளம் விரிவடைவதற்கும், உலகம் முழுவதையும் நேசிப்பதற்கும் மனிதனை ஆயத்தமாக்கும் அடிப்படையை அமைத்துக் கொடுப்பது திருமணமாகும். தனி வாழ்க்கையில் இது ஒரு திருப்பு மையமாக அமைகிறது.

பாறையையும்பண்படுத்தும்ஆற்றல் கல்யாணத்துக்கு உண்டு. இது திரு. வி. கலியாணசுந்தரனார் வாழ்க்கையிலும் உண்மையாயிற்று.

துடுக்கும் மிடுக்கும் நிறைந்த முரட்டுச் சிறுவனாக விளங்கி, ''சொல்லுக்குச் சொல்லும் கல்லுக்குக் கல்லும் மல்லுக்கு மல்லும்'' விடும்வாலிபனாகவளர்ந்த திரு.வீ.க.வின் வாழ்க்கை, அன்பும் பண்பும் நெகிழ்வும் மிக்க வாழ்க்கையாக எப்படி மாறியது? இந்த அற்புதத்தைச் சாதித்தது எது? திரு.வி.க.வே கூறுகிறார் கேளுங்கள்: ''என்னை உண்ண எழுந்த விலங்கியல்பு எப்பொழுது குலைந்தது?.... யான் பெற்ற கல்வி கேள்விகள் மட்டும் எனது விலங்கியல்பை ஒடுக்கவில்லை. அவை ஒரோ வழித்துணை நின்றிருக்கும். இல்வாழ்க்கையும் நல்லோர் கூட்டுறவும் பலதிறத் தொண்டுகளும் எனது விலங்கியல்பை ஒடுக்குதற்குப் பெருந்துணையாய் நின்றன என்று எனது அநுபவம் அறிவிக்கின்றது. விலங்கியல்பை ஒடுக்குதற்கு இல்வாழ்க்கை ஒரு பெருங் கருவி என்று வலியுறுத்துகிறேன். அவ்வாழ்க்கையை நன்முறையில் அறிவுறுத்திய திருவள்ளுவர் வாழ்க''.

துறவறத்தைப் பெரிதாகப் போற்றிவரும் நாடு நம்முடையது. துறவு பூண்டொழுகியவர்கள் இல்லறத்தைப் பழித்தும் இழித்தும் பேசியது உண்டு. இதிலிருந்து மாறுபட்டு, வள்ளுவப் பெருந்தகை இல்லறத்திற்கும் துறவறத்திற்குரிய சிறப்புக் கொடுத்து இரண்டையும்போற்றினார். ஆனால் திரு.வி.க.வோ திருவள்ளுவரையும் விட ஒருபடி மேலே போய்த் துறவறத்தைவிட இல்லறமே சிறந்தது என்பதை எந்த இடத்தும் எடுத்தியம்பத் தயங்கவில்லை. பெண்மையைப் போற்றிப் பெண்ணின் பெருமையை நிலைநாட்டினார். தாய்க்குலத்தின் தியாக வாழ்வைத் தரணியெங்கும் பரப்பினார்.

*1912*-ஆம் ஆண்டில் திரு.வி.க.வின் இல்லற வாழ்க்கை தொடங்கியது. அவருக்கு வாய்த்த துணைவியார் கமலாம்பிகை அம்மையார், கணவருடன் கருத்தொருமித்த காதல் வாழ்க்கை வாழ்ந்து, இல்லறத்தை நல்லறமாக்கினார். அதில், திளைத்து எல்லையற்ற மகிழ்வெய்தினார், திரு.வி.க. ஆயின், அது நெடிது நாள் நீடிக்கவில்லை. திருமணமானதும் ஆண் குழந்தை ஒன்று பிறந்து ஒரு வாரத்தில் இறந்தது. அடுத்து ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஓராண்டு இருந்து பெற்றோரை மகிழ்வித்தது. பிறகு பெற்றோரைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு மறைந்துவிட்டது. இப்படி இடிதாக்கியதுபோல அடுத்தடுத்து இரு குழந்தைகளைப் பறிகொடுத்த கமலாம்பிகை உள்ளம் நைந்தார். கலங்கினார். உருகினார். அதனால், அவரது உடல் நலம் குன்றியது. நாளுக்குநாள் உருக்குலைந்து வந்தார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் கிடந்தார். *1918*-ஆம் ஆண்டில் அவரது ஆவி பிரிந்தது. இவ்வாறு ஆறே ஆண்டுகளில் திரு.வி.க.வின் இல்வாழ்க்கை முடிவுக்கு வந்துவிட்டது.




மனைவி மறைந்தார். ஆயின் திரு.வி.க. மனைவியை மறந்துவிடவில்லை. மனைவியின் பொன்னுடல்தானே போயிற்று? அவரது புகழுடம்பைத் தன்னுள் அடைக்கலமாக்கிக் கொண்டார் அண்ணல் திரு.வி.க. கமலாம்பிகைக்குத் தந்த உள்ளத்தை இன்னொரு பெண்ணுக்குத்தர விருப்பமின்றி, மறுமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார். மாண்புறு மனைவியை மனத்துள் வைத்துப் போற்றினார். அதற்குக் காரணம் இதுதான்:

''என் ஆருயிர் அமுதம் கமலாம்பிகை என்னுடன் வாழ்ந்து, என் மனத்தைப் பல வழியாலும் பண்படுத்திப் பெண்ணின் பெருமை முதலிய செல்வங்களை எனக்கு வழங்கி மறைந்தனள். என் வாழ்க்கைத் துணைக்குயான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்? ஏழை என்ன நன்றி செலுத்தவல்லேன்? பெண்ணின் பெருமை விளங்க - இவ்வுலகில் நன்கு விளங்கப் பாடுபட உறுதி கொண்டேன்; அதற்கென்று என் வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளேன்'' என்று கல்மனமும் கசிந்துருகக் கனிவுடன் கூறுகிறார் திரு.வி.க.

பொறுமையென்னும் நகையணிந்து பெருமை கொள்வது பெண்மையல்லவா! அது பூரணமாகப் பொலிந்த கமலாம்பிகை, திரு.வி.க.வை எவ்விதம் மாற்றிவிட்டார்!

''கமலாம்பிகைக்குச் சகிப்புத் தன்மை அதிகம். அதை யான் பன்முறை காணும் வாய்ப்புக்களை வாழ்க்கையில் பெற்றேன். சகிப்புக்கு மூலம் பொறுமை... சின்ன வயதில் எனக்குப் பொறுமை பெரிதும் கிடையாது. திருமணத்துக்குப் பின்னர் யான் பொறுமையாளன் என்றுபலரால் போற்றப்பட்டேன். என்பால் பொறுமை பொலிவது உண்மையானால் அஃது எனது இயற்கையினின்றும் அரும்பியதாகாது. அது கமலாம்பிகையினின்றும் என்பால் இறங்கிக் கால்கொண்டதென்று யான் சொல்வேன்.''

வாழ்க்கையில் திரு.வி.க. பல நூல்களைப் படித்தவர்; பெரி

யோர் பலருடன் பழகியவர்; கல்வி கேள்விகளில் வல்லவர்; திருக்குறளைக் கரைத்துக் குடித்தவர். இப்படிப்பட்ட சிறப்பொன்றும் கமலாம்பிகை அம்மையாரிடம் கிடையாது. எனினும் அவரால் திரு.வி.க. நன்மையடைந்தார்; அனுபவம் பெற்றார். பண்பட்டார். இதைப்பற்றித் திரு.வி.க. எவ்வளவு பெருமிதம் அடைந்திருந்தால், 'அவள் திருக்குறள் படித்தவள் அல்ல. அவளே எனக்குத் திருக்குறளாக விளங்கினாள்' என்று பெருமையோடு குறிப்பிடுவார்? அன்பில் தோய்த்து நன்றிப் பெருக்கோடு திரு.வி.க. தமது இல்வாழ்க்கை பற்றி எழுதிய எழுத்து ஒவ்வொன்றும் பொன் எழுத்து; எந்த மனைவிக்கும் கிட்டாத பேறு; எந்தக் கணவனும் பின்பற்றத்தக்க முன்மாதிரி.

''யான் திருக்குறள் படித்தவன். என்பால் பிடிவாதம், வன்மம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் நிறைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது. அவள் திருக்குறள் படித்தவள் அல்ல. எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனை வாழ்க்கையில் ஈடுபடத் திருக்குறள் நுட்பம் விளங்குவதாகிறது. திருவள்ளுவர் உள்ளத்தை உணர்தற்கு மனை வாழ்க்கை இன்றியமையாதது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று. யான் பின்னாளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெருந்துணையாய் நின்றது''

பாரதப் பெண்கள் மரபு எப்பொழுதும் கணவனைப் போற்றி அவனை இப்பிறவியில் அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எனவும், இத் தொடர்பு எல்லாப் பிறவியிலும் தொடர வேண்டும் எனவும் பிரார்த்திப்பதாகும். திரு.வி.க.வைக் கைத்தலம் பற்றிய கமலாம்பிகை அம்மையார் அவ்வாறே எண்ணியிருப்பார், மகிழ்ந்திருப்பார், இறைவனுக்கு நன்றி சொல்லியிருப்பார் என்பதில் ஐயமில்லை. அதில் திரு.வி.க.வின் பெருமை மிளிரவில்லை. மற்ற கணவர்களைப் போல் அல்லாமல், மனைவியை மாணிக்கமாகப் போற்றிய விதத்தில் திரு.வி.க. நமது உள்ளங்களில் மிக உயர்ந்த இடத்தைப் பெற்றுவிடுகிறார். அதற்குக் காரணம் அவருக்கு வாய்த்த உத்தமமான மனைவியின் உன்னதப் பண்புகளும், அவற்றின் காரணமாக அவரது உணர்வும் உள்ளமும் பண்பட்டுப் புனிதம் பெற்றதுமே யாகும்.

## பத்திரிகை ஆசிரியர் - திரு. வி. க.

1917—டிசம்பர் 7 ... ''தேசபக்தன்'' பத்திரிகாசிரியராதல்

1920—ஜூலை 22 ... ''தேசபக்தன்'' ஆசிரியர் பதவி நீத்தல்

1920—அக்டோபர் 22 ... ''நவசக்தி'' பத்திரிகை தொடங்குதல்.

1941-ல் திருமதி இராதாமணியம்மையாருக்கு ''நவசக்தி'' பத்திரிகையைத் தருதல்.


"DESABA
Telephone No. 903.
Post Box No. 653.
Registered No. M. 1315.
தேசபக்தன்
(தினப்பதிப்பு)
நவசக்தி
"NAVASAKTI"

## திரு.வி.க. ஆற்றிய படத் திறப்புகள்

ஞானியார் சுவாமிகள்—1942

கோ. வடிவேல் செட்டியார்—(முக உருவம்)

நாகம்மையார் (தந்தை பெரியார் முதல் மனைவி)

திராவிட நாடு—1948.

## அறத்துப் பாலின் விளக்கம்



திரு.வி.க.வின் தனி வாழ்க்கை திருக்குறளின் அறத்துப்பாலுக்கு ஒரு விளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு; துறவறம் உண்டு; ஊழ் வலியும் உண்டு. திரு. வி. க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர். அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு.

—டாக்டர் மு. வரதராசன்

# திரு.வி.க சில நினைவுகள்



தமிழ், கல்வி, சமயம், தொழில், சீர்த்திருத்தம் முதலிய பல துறைகளிலும் திரு. வி. க. ஆற்றிய தொண்டு வியத்தற்குரியது. அவர் ஒரு தமிழ்ப் பேரறிஞர்; சொற் பெருக்காளர்; தமிழுக்குப் புதுநடை படைத்த புலவர்; அரசியல் வல்லுநர்; சமயப் பொதுமையாளர்; தொழிலாளர் தலைவர்; சமுதாயச்சீர்திருத்தச் செம்மல்.

இப்பெருந்தகையாரைஎண்ணும்போது நேரில் கண்ட சில நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருகின்றன.

1926-ஆம் ஆண்டில் சென்னை ஆழ்வார்பேட்டையில் பரோபகார சங்கத்தின் ஆண்டு விழா தமிழ்ப்பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் மாளிகையின் முன்னிடத்தில் நடைபெற்றது. அவ்விழாவில் பா. வே. மாணிக்க நாயக்கர் ''மக்களும் மாக்களும்'' என்ற பொருள்பற்றிச் சொற்பெருக்காற்றினார். அக்காலத்தில் ஆழ்வார்பேட்டை வயல்களும் தோட்டங்களும் சூழ்ந்து, ஒரு சிற்றூராகக் காட்சி அளித்தது. அவ்வூரில் பெரும்பாலும் விவசாயிகளும் தொழிலாளர்களுமே வாழ்ந்து வந்தனர். அவர்களில் பலர் எழுத்தறிவில்லாப் பாமரர்கள். அவர்களுக்குள் அடிக்கடி வெட்டுக் குத்துச் சண்டைகள் நடைபெறும். பா. வே. மாணிக்க நாயக்கர், அவர்களுடைய போக்கை உணர்ந்தே ''மக்களும் மாக்களும்'' என்ற பொருள் பற்றிப் பேசினார். விழாவுக்குத் திரு. வி. க. தலைமை வகித்தார். இரண்டு பேரறிஞர்களின் சொற்பொழிவைக்கேட்கச் சென்னையில் பல இடங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்திருந்தனர். மக்களுக்குரிய பண்புகளையும் மாக்களின் இயல்புகளையும் திரு. வி. க. தமக்கேயுரிய நடையில் விளக்கிப் பேசினார். பா. வே. மாணிக்க நாயக்கர் தம் சொற்பொழிவில் இன்னும் விரிவாகப் பல சான்றுகளுடன் மக்கள் பற்றியும் மாக்கள் பற்றியும் பேருரை ஆற்றினார். இருபேரறிஞர்களின் உரைகளைச் செவிமாந்தியவர்களில் பலர், ''நாங்கள் இங்கு வரும்போது மாக்களாக வந்தோம்; இப்போது மக்களாகத் திரும்பிப் போகிறோம்'' என்றார்கள். மக்களுள் ஏறத்தாழ எல்லோரிடத்தும் மாக்கள் இயல்புகளே நிறைந்திருக்கின்றன என்பதை இவ்விரு அறிஞர்களின் உரை பலர் உள்ளத்திலும் ஆழப் பதிவித்தது என்பதை இது உணர்த்துகின்றது.

டாக்டர். தா.ஏ.ஞானமூர்த்தி

நான் இராயப்பேட்டையிலுள்ள திரு. வி. க. அவர்களின் இல்லத்திற்குச் சென்று எம் கலைப்பணிப் பயிற்சிக் கழகத்தின் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க வேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டேன். அவர் சிறிதும் தயங்காமல் இசைந்தார். 'தாங்கள் வருவதற்கு வண்டி அனுப்புகிறேன்' என்றேன்.

''எனக்கு வண்டி தேவையில்லை. இரண்டுகல் தொலைவுதானே; நான் நடந்தே வந்துவிடுவேன்'' என்றார். 'இவ்வளவு பெரியவர் நடந்து வருகிறேன் என்று சொல்கிறாரே' என்று என் உள்ளம் நினைந்து நெகிழ்ந்தது.

ஆண்டு விழா திரு. வி. க. தலைமையில் நடைபெற்றது. ஒன்பது மணிக்கு முடிந்தது. திரு. வி. க. புறப்பட்டார். கூட்டத்திற்குச் சிலர் மோட்டார் வண்டிகளில் வந்திருந்தனர். அவர்களில் ஒருவரை அணுகி திரு. வி. க. அவர்களைத் தம் வண்டியில் ஏற்றிச் செல்லுமாறு வேண்டிக் கொண்டேன். அவர் மிக்க ஆர்வமுடன் இசைந்தார். ஆனால் திரு. வி. க. தாம் நடந்து போக விரும்புவதாகவே கூறி, நடந்தே சென்றார். பிறரிடத்து எத்தகைய சிறு உதவியும், பெற விரும்பாத அவருடைய பேருள்ளத்தை எண்ணி வியந்தேன். உண்மையில் அவர்பால் எனக்குப் பக்தி பெருகிற்று.

**திரு. வி. க.வும் பெரியாரும் :**

ஈரோட்டில் திராவிடக் கழக மாநில மாநாடு நடைபெற்றது. அம்மாநில மாநாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். இம்மாநாடு நடந்துகொண்டிருந்தபோது அங்குத் திரு.வி.க. வந்தார். மேடையிலிருந்த பெரியார் திரு. வி. க. வருவதைப் பார்த்து விட்டார். உடனே அவர் மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து, திரு.வி.க வை அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்று மேடையில் அமரும்படி செய்தார். மாநாட்டின் நிகழ்ச்சி அதுவரை தடைபட்டது. அங்கு இலட்சக்கணக்கான மக்கள் கூடியிருந்தும், பெரியார் திரு.வி.கவை அழைத்துச் சென்று மேடையில் அமர்த்தும் வரை முழு அமைதி நிலவியது. வயதில் திரு.கு.வை விடப் பெரியார் பெரியவராய் இருந்தும், தாம்மேடையிலிருந்து இறங்கி வந்து திரு. வி. க.வை அன்போடு அழைத்துச் சென்றது அவருக்குத் திரு. வி. க. விடம் இருந்த பெருமதிப்பை உணர்த்துகின்றது.

திரு.வி.க. அவர்களை நினைக்கும்போது அவர் தமிழகத்துக்கு ஆற்றிய அரும்பெருந்தொண்டுகளும் அவர்தம் அளப்பரிய இனிய பண்புகளும் உள்ளத்தில் உந்திக் கொண்டு வருகின்றன. அவர் நன்னெறிகளை அறிவுறுத்தியதோடன்றித் தம் வாழ்க்கையிலும்மேற்கொண்டொழுகினார். அந்நன்னெறிகள் வழி நின்றொழுகுதலே நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.



# தமிழ்த்தென்றல் திரு.வி.க.

## வாழ்க்கைக் குறிப்புகள்

**1883**

ஆகஸ்டு 26ஆம் நாள் -ஞாயிற்றுக் கிழமை துள்ளம் கிராமத்தில் திருவாரூர் வே.விருத்தாசலனாருக்கும் சின்னம்மாளுக்கும் 6-வது மகனாகப் பிறந்தார் திரு.வி.க.

**1890**

துள்ளம் கிராமத்திலிருந்து இராயப்பேட்டைக்குக் குடியிருப்பை மாற்றுதல்

**1891**

இராயப்பேட்டை ஆரியன் பிரைமரி பாடசாலையில் தொடக்கக் கல்வி பயிலல்

**1894**

வெஸ்லி கலாசாலையில் சேர்தல், சில மாதங்களுக்குள் மருந்தின் பத்திய முறிவால் கால் கைகள் முடங்குதல்.

**1894—1898**

படிப்புக்கு ஓய்வு

**1898**

மீண்டும் வெஸ்லி கலாசாலையில் சேர்தல். 1898-1904 வரை பயின்றார். மெற்றிக்குலேஷன் வகுப்பு (ஆறாம் படிவம்) வரை படித்தார்.

**1901**

டிசம்பரில் கதிரைவேற் பிள்ளையவர்களை முதன் முதல் சந்தித்தல்

**1901—1906**

கதிரைவேலரின் மாணாக்கராய்ப் பயிற்சி பெறுதல்

**1903**

பாலசுப்பிரமணிய பக்த ஜன சபை தொடங்குதல்

**1904**

கதிரைவேற் பிள்ளை வழக்கில் எழும்பூர் மன்றத்தில் சான்று கூறுதல். மெற்றிக்குலேசன் தேர்வுக்குச் செல்லத் தேர்ந்தெடுக்கப்படாமை, பள்ளிக் கூடப் படிப்பின் முடிவு.

**1905**

தந்தையார் மறைவு

**1906**

இராயப்பேட்டை 'கமர்ஷியல் ஸ்கூ'லில் சேர்ந்து ''புக்கீப்பிங்'' பயின்று தேர்வு பெறுதல்

**1907**

ஆசிரியர் கதிரைவேற் பிள்ளை மறைவு. கடற்கரையில் விபின் சந்திரபாலர் சொற்பொழிவுகளைக் கேட்டல்.

**1907—1908**

ஸ்பென்ஸர் கம்பெனியில் எழுத்தராய் வேலை பார்த்தல்

**1908**

கதிரைவேற்பிள்ளை வரலாறு இயற்றுதல். திருவல்லிக்கேணிச் சிவனடியார் திருக்கூட்டம் என்றொரு சைவ சபை தோன்றியது. அதன் முதல் தலைவர் திரு.வி.க.

**1908—1910**

மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியாரிடம் சித்தாந்த சாத்திரம் பயிலுதல்

திரு.வி.க. தமையனார் உலகநாத முதலியாரும் நண்பரும் சேர்ந்து ''உமாபதி குருபிரகாசம் பிரஸ்' தொடங்கினர். பெரிய புராணம் விசேடக் குறிப்புரை சஞ்சிகையாக வெளியிடப்பெற்றது.

திருவல்லிக்கேணி சிவடிை திருக்கூட்டச் சார்பில் பெரிய புராணம் முதல் காண்டம் பிரசங்கம் செய்து முடித்தல்.

**1908**

ஜஸ்டிஸ் சர்.டி, சதாசிவ ஐயரவர்களின் நட்புப் பெறுதல்.

**1910**

தியோசாபிகல் சங்க அறிஞராகிய அன்னிபெசன்ட் அம்மையாரைச் சந்தித்தல். பின்னர் 'தேசபக்தன்' ஆசிரியராய் இருந்தபோது அம்மையார் அவர்கள் பலவகை நூல்களும் சஞ்சிகைகளும் வழங்கினார்கள். அம்மையாரின் ஆங்கிலச் சொற்பொழிவுகளில் மூழ்கிப் பரவசமடைந்தார் பலமுறை.

**1910—1916**

ஆயிரம் விளக்கு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிதல்.

**1911-டிசம்பர்**

சைவ சித்தாந்த மகாசமாஜத்தில் முதன் முதல் சொற்பொழிவாற்றல்

**1912-செப்.13**

திருச்சி கிருஷ்ணசாமி முதலியாரின் புதல்வி கமலாம்பிகை அம்மையாரை மணந்தார். திருமணத்தில் கிறிஸ்துவ ஜபமும் நிகழ்ந்தது. அஷ்டாவதானம்

கலியாணசுந்தர முதலியார் போன்றோர் வாழ்த்தினர்.

**1912—1918**

சிறப்பான இல்லறம் நடத்துதல்

**1912-டிசம்பர்.**

காஞ்சியில் மணம்பூண்டி குமாரசாமி பிள்ளையின் நட்புப்பெறுதல்

**1913**

பட்டினத்தார் பாடல்களுக்கு உரை எழுதுதல்

வேலூரில் நடந்த சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழாவில் தவத்திரு ஞானியார் அடிகள் தலைமையில் பேசுதல். ஞானியார் பேச்சைக் கேட்ட திரு. வி. க. தமிழ்நாட்டிலும் கிளாட்ஸன்கள், சுரேந்திரர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணினார்.

**1914**

சுப்பராய காமத் சந்திப்பு. எஸ்.சீனிவாச ஐயங்கார் நட்பு

**1915**

சென்னைப் புதுப்பாக்கத்திலே "ஸ்ரீ சிவ சுப்பிரமணிய பக்தஜன சபை" என்றொரு சபை தோற்றம். அதன் முதல் தலைவர் திரு.வி.க.

**1916 ஜூன்**

வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழ் ஆசிரியராதல்

**1917**

காஞ்சியில் பி.பி. வாடியாவின் ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்தார். இத்தொடர்பு பின்னர் தொழிலாளர் சங்கங்களில் உரம் பெற்றது.

**செப்.**

அரசியல்துறையில் கன்னிப் பேச்சு பின்னர் சில நாட்களுள் 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற அமைப்பு ஜஸ்டிஸ் கட்சியை மாய்க்கத் தோன்றியது.

**நவம்பர்;**

சென்னை மாகாணச் சங்கச் செயலாளர்களுள் ஒருவராதல்.

**1917 டிசம்பர் 5**

வெஸ்லி கல்லூரித் தமிழாசிரியர் பதவியிலிருந்து விலகல்

**டிசம்பர் 7**

"தேசபக்தன்" பத்திரிகாசிரியராதல்

**டிசம்பர். 8**

மூதறிஞர் ராஜாஜி அவர்களை முதன் முதலில் சேலத்தில் சந்தித்தல்.

**1918-ஏப்.27 சனிக்கிழமை**

இந்தியாவிலேயே முதல் முதல் 'சென்னைத் தொழிலாளர் சங்கம்' பிறந்தது. இச் சங்கத்தின் திறப்புக்கு சென்னை மாகாணச் சங்கம் வழிகோலியது. திரு. பி. பி. வாடியா தலைவரானார். திருவாளர்கள் திவான்பகதூர் கேசவப் பிள்ளையும் திரு. வி. க.வும் சிலரும் துணைத் தலைவர்களாயினர்.

**1918 செப்1.**

ஓருயிர் ஈருடலென வாழ்ந்த மனைவி கமலாம்பிகை அம்மையார் மறைவு

**1919-பிப்.28**

"தேசபக்தன்" இதழின் ஈடுகாணம் பறிமுதல் செய்யப்படுதல்

**மார்.18**

அண்ணல் காந்தியடிகளை முதன் முதலில் அரக்கோணம் ரயிலடியில் பம்பாய் மெயிலில் வந்து கொண்டிருந்தபோது சந்தித்தார். தலைவர் விஜயராகவாச்சாரியாரின் அறிமுகக் கடிதத்துடன் சென்றார்.

**1919 ஏப்ரல் 6**

சத்தியாகிரக நோன்பு நாள்

**ஜுன் 2**

லார்ட் வெலிங்டன் தேசியப் பத்திரிகை ஆசிரியர்களை வரவழைத்து எச்சரிக்கை வழங்குதல். அச் சந்திப்பில் வெலிங்டன் திரு.வி.க.வை நோக்கி, "உங்களுடைய எழுத்தில் கொதிப்பு அதிகம்" என்றார்.

**1919 அக்டோபர்.11**

சென்னை மாகாணச் சங்க இரண்டாம் ஆண்டு மாநாடு நடந்தபோது வரவேற்புத் தலைவராய் அமைந்த தந்தை பெரியார் அவர்களின் நட்பைப் பெறுதல்.

**டிசம்பர் 17**

லோகமான்ய பாலகங்காதர திலகர் அவர்களை முதன் முதலாகச் சந்தித்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை. சுப்பராய காமத்தும் உடன் சென்றனர்.

**1920-ஜனவரி 11**

அமிர்தசரஸில் கூடிய காங்கிரசில் கலந்து கொண்டு திரும்பிய அன்னி பெசன்ட் அம்மையாரைத் தொழிலாளர் சார்பில் வரவேற்று சென்னை சென்ட்ரல் ரயிலடியிலிருந்து லார்ட் கோவிந்ததாஸ் அரண்மனை வரை ஊர்வலமாக அழைத்துச் சென்று கேசவப் பிள்ளை தலைமையில் வரவேற்பளித்தார்.

**1920 ஜூலை-4**

மத்திய தொழிலாளர் சங்கம் பிறப்பு

**ஜூலை22**

"தேசபக்தன்" ஆசிரியர் பதவியிலிருந்து விலகல்

**அக்டோபர். 22**

"நவசக்தி" இதழ் தொடங்குதல். முதல் இதழ் வெளிவந்தது. வாரப் பதிப்பு 'நவசக்தி' வெளிவர, தொழிலாளர்கள் ஆளுக்கு ஒரு ரூபாய் விதம் 5,000 ரூபாயும் சில நண்பர்கள் சுமார் 2000- ரூபாயும் அளித்தனர். இதற்கென அச்சுக் கூடம் அமைக்கப்பட்டது. அதற்குச் 'சாது அச்சுக் கூடம்' எனப் பெயரிடப் பட்டது.

**நவம்பர்.11**

தொழிலாளர் இயக்கத் தலைவர் மீது பக்கிங்காம் கர்நாட்டிக் ஆலைகளை நடத்திவரும் பின்னி நிறுவனம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது, வேலை நிறுத்தம் நிகழ்ந்ததற்காக.

**1921-ஜனவரி. 27**

பஞ்சாயத்துத் தீர்ப்பின்படி பக்கிங்காம் மில் கதவடைப்பு நீங்கி அனைவரும் வேலைக்குச் சென்றனர்.

**1921-ஜூன் 20**

ஒரு கிளையின் பொருட்டு முழு மில் தொழிலாளரையும் தண்டித்தது தவறு எனத் திரு.வி.க. முந்திய நாள் 19.6.21ல், பெருங்குரல் எழுப்பியதன் பயனாக பக்கிங்காம் மில் தொழிலாளர் மீண்டும் வேலை நிறுத்தம் செய்தனர்.

**ஜூலை 5**

லார்ட் வெல்லிங்டன் அழைப்பின்பேரில் திரு.வி.க. வெலிங்டனை மாலை 6 மணிக்குச் சந்தித்தார். ஏற்கெனவே அங்கு வி.சக்கரைச் செட்டியார் முதலியோர் இருந்தனர். 'பக்கிங்காம் மில் குழப்பத்திற்குக் காரணம் நீங்களே. யான் உங்களை எச்சரிக்கை செய்யவே





அழைத்தேன்'' என்றார் வெலிங்டன்.

ஆகஸ்ட் 9.

போலீசாரால் தொழிலாளர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன.

ஆகஸ்ட். 10

எய்லிங் கமிட்டி விசாரணை

ஆகஸ்ட்.29

உணவின்றி பட்டினியால் வாட்டமுற்றுக் கிடந்த தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

டிசம்பர்: வேலை நிறுத்த முடிவு

1925 நவ.21, 22

காஞ்சிபுரத்தில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் மாநாட்டுத் தலைமை. வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் பற்றிய தீர்மானம் நிராகரிக்கப்படுதல், தந்தை பெரியார் முதலியோர் வெளியேற்றம்.

1926-டிசம்.9

தென் இந்திய ஜீவரட்சா பிரசார சபை தோற்றம். ஆதன் பிரசாரகர் ஜீவ பந்து ஸ்ரீபாலுடன் சில இடங்களுக்குப் பலி நிறுத்தப் பிரச்சாரத்திற்குச் செல்லல்.

1927-பிப்ரவரி 25

தோழர் சாபூர்ஜி சக்லத்வாலா பிரிட்டிஷ் பார்லிமெண்ட் உறுப்பினர். இந்தியர். ஆங்கில மாதை மணந்தவர். அவர் சென்னைத் தொழிலாளர் சங்கத்தில் பேசியபோது சந்திப்பு

1928 அக்டோபர்.9

தமையனார் உலகநாதர் மகன் பால சுப்பிரமணியன் மறைவு

1931

சென்னைத் தொழிலாளர் சங்கத்திற்கு ஒரு சொந்த நிலையம் கண்டு அதனைத் திவான்பகதூர் கேசவப் பிள்ளை திறந்து வைத்தார்.

1933

மாமண்டூரில் உழவர் வேலை நிறுத்தம்.

1934 டிசம்பர்

திருவதிகையில் கூடிய சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தல்.

1939

காங்கிரஸ் ஆட்சியில் மில் வேலை நிறுத்தம்.

1940

திருவொற்றியூரில் பலி நிறுத்தப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு, வெற்றி காணல்.

1941

திருமதி இராதாமணி அம்மையாருக்கு 'நவசக்தி' இதழினை நடத்துமாறு அளித்தல்.

1943-ஏப்.14

சென்னைத் தொழிலாளர் சங்க வெள்ளி விழா

ஆகஸ்டு 24

திரு.வி.க. அறுபது ஆண்டு நிறைவு

1943 டிசம்பர் 27,28,29

மதுரையில் சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டு விழா; திரு.வி.க தலைமை.

டிசம்பர்30,31

காரைக்குடி இந்து மதாபிமான சங்க வெள்ளி விழாத் தலைமை. சொ. முருகப்பா விருந்தினை ஏற்றல். அங்கும் மணி விழாச் சிறப்பு.

1944 பிப்.12

திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு நூல் வெளியீடு.

1945-1946

தமிழ்த் திருமணங்கள் நடாத்தி வைத்தல்.

1947 மார்ச் 11

பக்கிங்காம் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம்

மார்ச் 29

அந்தோணிப்பிள்ளை சிறைப்பட்டார் திரு.வி.க. மீண்டும் மில் தொழிலாளர் சங்கத் தலைமைப்பதவி ஏற்றல்.

ஜூன் 9

திரு.வி.க. இல்லத்தில் போலீசார் காவல்.

டிசம்பர் 7

திரு.வி.க. இல்லச் சிறைவாசம் நீக்கம். தமிழாசிரியர் துக்க வார இறுதிக் கூட்டம்: மொழியாசிரியர் மாநாடு.

1948 ஆகஸ்ட்.14

சென்னை மாகாணத் தமிழ் ஆசிரியர் மாநாட்டில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் படத்திறப்பு.

1949

கண்ணில் படலம். ஒரு கண் பார்வை மறைதல். - 'பரம்பொருள் அல்லது வாழ்க்கை வழி' நூல் எழுதுதல்.

1953 ஆகஸ்ட்.24

முதல் செப்டம்பர் 16 வரை சென்னை மாநிலம் முழுவதும் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடுதல்.

1953 செப்டம்பர்.13

இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையார் திரு. வி. க. மணி மண்டபம் நிறுவத் தீர்மானம் நிறைவேற்ற, ஒப்புதல் அளித்தல்.

1953 செப்டம்பர்.17

இரவு 7.45 மணி. இயற்கையில் இரண்டறக் கலத்தல்.

1953 செப்டம்பர். 18

காலை 12 மணி முதல் 3 மணி வரை சென்னைத் தொழிலாளர் சங்கத்தில் [கூளை] அவரது திருஉடலை பொது மக்கள் பார்வையிடல்

பிற்பகல் கூளையிலிருந்து மயிலை மயானத்திற்கு ஊர்வலமாகத் திருவுடல் வருதல். தந்தை பெரியார் ஊர்வலத்தை நடத்திச் சென்றார். சென்னை அண்ணாசாலையில் 4 மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்தது. மகளிர் அணி நூற்றுக் கணக்கில் திரண்டது குறிப்பிடத்தக்கது.

1953 செப்டம்பர். 18

இரவு 7 மணிக்கு மயிலை மாநகர் மயானத் திடலில் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பொன்னுடல் எரியூட்டப் பெற்றது.

**தொகுப்பு:**

**சிறுவை நச்சினார்க்கினியன்**



# மாங்காட்டில் ஒரு மகிழ்ச்சித் திருவிழா

ஆதி திராவிட மக்கள் திராவிடர் அல்லாதோர்இடையே ஒற்றுமை உணர்வை வளர்க்க ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாரதி சொன்னதை நினைவுபடுத்தும் வகையில் தமிழகம் முழுவதும் 5 ஆயிரம் கோவில்களில் கூட்டு வழிபாடும்-பொது விருந்தும் சுதந்தர தினத்தன்று நடந்தன. அதே கூட்டு வழிபாடும்-பொது விருந்தும் சென்னையை அடுத்த மாங்காட்டிலும் சிறப்பாக நடந்த .

இந்த விழாவையொட்டி மாங்காடு மாவிலை, தென்னைஓலை தோரணங்கள் - அலங்கரிக்கப்பட்டு எழுச்சிக்கோலம் பூண்டு, இருந்தது.மக்கள் முகம் மலர்ந்து மகிழ்ச்சியுடன் விழாவில் கலந்துகொண்டனர்.

சுதந்தர நன்னாளில் மாங்காட்டில் ஒரு மங்களகரமான நிகழ்ச்சியாக இது நடந்தது. சின்னஞ்சிறிய ஊரான மாங்காடு ஊரில் எங்கும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது.

வேறு எந்த விழா நிகழ்ச்சிகளுக்கும் இல்லாத தனிச் சிறப்பு இந்த நிகழ்ச்சிக்கு இருந்தது.

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில், 15.8.82 அன்று ''பொதுவிருந்து'' கோலாகலமாக நடைபெற்றது

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில் நடந்த இந்தப் பொதுவிருந்தில், ஆதிதிராவிட உடன் பிறப்புகளுடன், மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்றும் பல்லாயிரக்கணக்கானவர்களும், சாதி வேறுபாடு இன்றி, சமமாக அமர்ந்து விருந்து உண்டார்கள். சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், தயிர்சாதம், வடை, பாயசம், பழம், அப்பளத்துடன் விருந்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் மாங்காடு வருகை தந்தும்,மங்கள இசையுடன் கும்ப மரியாதையுடன் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எச்.ஜே. ராமச்சந்திரன் இ.ஆ.ப. அவர்கள், பரம்பரை அறங்காவல் குழுத் தலைவர் திரு மணலி ராமகிருஷ்ண முதலியார் ஆகியோர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களும்

**நிகழ்ச்சித் தொகுப்பு : ஜி. ஆனந்தன்**

**பின்பக்க அட்டை சொல்லும் செய்தி**

அவர்களது துணைவியார் திருமதி வி.என். ஜானகி அம்மையார் அவர்களும்ஓய்வு ஊதியம் பெறும் முதியோருக்கு இலவசமாக வேட்டிகளையும் சேலைகளையும் வழங்கினார்கள்.

அப்போது அந்த முதியோர்கள் ''அய்யா நீங்கள் நல்லா இருக்கோணும்!'' என்று மனம் குளிர வாழ்த்தி அகமகிழ்ந்தனர்.

பிறகு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களும், மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களும், மற்றவர்களும், மிகச் சிறந்த முறையில் அற்புதமாக அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடைக்கு வந்தனர்.

கூடியிருந்த மக்கள் வெள்ளம் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அவர்களை வரவேற்றது. இறைவணக்கத்துடன் விழா சீரோடும் சிறப்போடும் துவங்கியது.

அறநிலையத்துறை ஆணையாளர் திரு. சண்முகசிகாமணி இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயப் பரம்பரை அறங்காவலர் திரு மணலி ராமகிருஷ்ண முதலியார், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறைஅமைச்

சர் அவர்களுக்கும் பொன்னாடையும், பட்டாடையையும் அணிவித்து மகிழ்ந்தார்.

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்துக்காக தமிழகத்திலுள்ள 64 ஆலயங்கள் சார்பில் 148 உணவுக் கூடங்கள் கட்ட ரூ.59 இலட்சத்து 20 ஆயிரத்துக்கான காசோலையை வெள்ளித் தட்டில் வைத்து மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார். அதேபோல வெள்ளியினால் செய்த ஆலயம், வெள்ளியினால் செய்த உணவுக் கூடம் பொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றும் முதல்வரிடம் அளிக்கப்பட்டன.

இந்த இனிய விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பேசுகையில், ''குறுகிய காலத்தில் இத்தனைச் சிறப்பாக இந்தவிழாவினை நடத்திய அனைவரையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன். சாதி, மத வேறுபாடின்றி அனைவரும் ஒன்று என்ற உயரிய இலட்சியத்தின் அடிப்படையில் கடந்த ஆண்டு முதல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பொது விருந்து(சமபந்தி)திட்டத்தினைக் கொண்டு வந்தார்கள். இந்தச் சீரிய திட்டத்திற்கு 4,100 கோவில்களில் 8 இலட்சம் பேருக்கு ,கடந்த ஆண்டு பொது விருந்து அளித்தோம்.அதேபோல இந்த ஆண்டு 5,000 கோயில்களில் சாதி மத வேறுபாடின்றி 10 இலட்சம் பேருக்குப் பொது விருந்து அளித்திருக்கிறோம்.

இந்த ஆண்டு மட்டும் பொது விருந்து அளிப்பதன் மூலம் 12 கோடி ரூபாய் செலவாகிறது. மாங்காடு காமாட்சி அம்மன் ஆலயத்தில் நான்கு ஆண்டுகளுக்கு 1,74,942.57 வருமானம் கிடைத்து வந்தது.கடந்த ஆண்டு முடிந்த பசலிப்படி வருமானம் 21,23,401 ரூபாய். ஆனால் இந்த ஆண்டோ அது 30 இலட்சத்தையும் தாண்டும் என்று எதிர்பார்க்கிறோம். முன்பு 1.75 இலட்சமாக இருந்த வருமானம் இன்று 32,50,000 ஆக உயர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆலயத்திற்கு வருகிறவர்களும், வழிபாடுசெய்கிறவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போவதால்தான் இந்த ஆலயத்தின் வருமானம் உயர்ந்து கொண்டே போகிறது. இங்கு சத்துணவுத் திட்டத்திற்காக பழனி ஆலயத்தின் சார்பில் 10 இலட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் இருக்கிற ஆலயங்களில் எல்லாவற்றையும் விட, பழனி ஆலயத்தினுடைய நன்கொடை முதல் இடத்தைப் பெறுகிறது'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு தமிழக அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு இரா. மோகனரங்கம் எம். பி. அவர்கள் பேசுகையில், ''இது போன்ற இனிய நிகழ்ச்சி இதற்கு முன்பு இருந்த அரசு நடத்த எதற்கும் முன்வரவில்லை. புரட்சித் தலைவரின்-சீரிய தலைவரின் சீரிய அரசு இந்தச் சமயத்தில் சமபந்தி (பொது விருந்து திட்டத்தை) இன்றைக்குக் கொண்டு வந்துசிறப்போடுநிறைவேற்றிவருகிறது. முதியோருக்குவிருந்துடன் மாதம் 35 ரூபாய் உதவிப் பணமும், வாரத்துக்கு 1 கிலோ அரிசியும், ஆண்டுக்கு இருமுறை உடைகளையும் வழங்கி அவர்களைச் சிறப்பிக்கிறது இந்த அரசு.விருப்பு வெறுப்பு இன்றி, கட்சிப்பாகுபாடு இன்றி இதுபோன்ற இனிய விழாவைத் தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சியினரையும் அழைத்துச் சிறப்பாக நடத்தி வருவதை நாடு நன்கு அறியும்'', என்றார்.

5

சட்டமன்ற உறுப்பினர் திருமதி டி.யசோதா, பழனி அறங்காவலர் குழுத் தலைவர் டாக்டர் திருமதி ராதா தியாகராஜன், மாங்காடு காமாட்சியம்மன் கோவில் பரம்பரை அறங்காவலர் குழுத் தலைவர் திரு மணலி இராமகிருஷ்ண முதலியார் ,குறளரசு திரு. ஜெயபாரதி ஆகியோரும் பேசினார்கள்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''நாம் எல்லோரும் ஓர் குலம் ஓர் இனம் என்று கருதி எப்படி இந்திய சுதந்தரம் பெற எந்தப் பிரச்சினையையும் கருதாமல் விடுதலை என்பதில் மட்டும் அக்கறை கொண்டு போராடினார்களோ, அதேபோல சுதந்தரத்தைக் காக்கப் பாடுபடவேண்டும்.

''சுதந்தரம் என்பது தன்மானத்தைக் காப்பது தான். வாழும் இடத்துக்கு தான் சொந்தக்காரன் என்பதை ஏற்படுத்திக் கொள்வது சுதந்தரம். மொழியை என் மொழி நான் வைத்துக் கொள்கிறேன் என்பதும் சுதந்திரம். நான் என்னுடைய உரிமையை இந்த நாட்டிலே பெற்றுத் தீருவேன் என்றால் அது

**சுதந்த்ர நன்னாளில் மாங்காடு ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு-பொதுவிருந்தில் மாண்புமிகு முதல்வர் பங்கேற்று ஒய்வூதியம் பெறும் முதியவர்களுக்கு புத்தாடைகளை வழங்கினார்.**



சுதந்தரம். ஆகவே, எந்தமொழி பேசுகிறவர்களுக்கும் அவனுடைய மொழிக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். எந்தக் கொள்கையையும் இந்த நாட்டில் சொல்வதற்கு அவனவனுக்கு சுதந்திரம் இருந்தாக வேண்டும். இதைத்தான் மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். ஆகவே, 35 ஆண்டுகளுக்குப் பிறகு 36வது ஆண்டு பிறக்கும் இந்தச் சுதந்தர நன்னாளில் இவையெல்லாம் பேசவேண்டி இருக்கிறது.

''சுதந்தரம் கிடைத்தும் யாருக்குச் சுதந்தரம் வேண்டுமோ, எதற்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ, எந்தச் சமுதாயத்துக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ யாருடைய மொழிக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ, யாருடைய தன்மான உணர்வுக்குச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ யாருடைய பொருளாதாரச் சுதந்தரம் கிடைக்க வேண்டுமோ அது இன்னும் கிடைக்கவில்லை. கடவுளுக்காவது கிடைக்குமா என்பதற்காகத்தான் இங்கு கூடியிருக்கிறோம். அங்கே போய் இன்னார்தான் போகவேண்டும் என்று இல்லாமல் அந்தக் கடவுளை நம்புகிறவர்கள் அத்தனைப் பேரும் போய் அவரவர்கள் மொழியில் அவர்கள் வேதனையைச் சொல்ல-வேண்டிக்கொள்ள உரிமை இருக்க வேண்டும். கடவுளின் முன்னேயாவது அல்லது கடவுள் முன்பாவது தெய்வத்தின் குழந்தைகள் என்று ஒன்றுபட வேண்டும். அதை நிறைவேற்றுவதற்காகத்தான் இத்தகைய காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

''இங்கே 14 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சம் பேருக்குத் துணி வாங்கிக் கொடுக்கிறோம் என்றார்கள். இதில் சுதந்தரம் கிடைத்துவிட்டது என்று சொல்வதற்குப் பெருமைப்படுவது ஒன்றுமில்லை. இந்த ஏழைகள் முதியவர்கள் இன்னும் முதியவகள் ஏழைகள் என்று அரசிடம் ஏதோ தானம் பெறுவதைப் போல, இந்தத் தாய்மார்கள் கையில் சேலைகளைக் கொடுக்கும்போது ''நீ நன்றாக இரு'' என்று சொல்கிறார்கள். இது என்னுடைய பணமா? அது சினிமாவில் நடிக்கும்போது என் பணம். இது மக்கள் பணம். மக்கள் கொடுக்கின்ற வரிப்பணத்திலிருந்து நான் அதை வாங்கிக் கொடுக்கிறேன். ஆனால் அந்தத் தாய் உள்ளமும், பெரியவர்களும் சொல்கிறார்கள். 'நீ வாழ்க!' என்று, என்னைச் சொல்வதாக எடுத்துக் கொள்ளவில்லை. எந்த மக்களிடத்திலிருந்து பணத்தை வாங்கி அதை செய்கின்றேனோ அந்த மக்கள் வாழ்ந்தாக வேண்டும் என்று அவர்கள் சொல்கின்ற வாழ்த்தாக நான் எடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்' இவை அனைத்தும் வாழ்விழந்திருக்கிற அந்தப் பெரும்பான்மையான மக்களுக்கு நாம் செய்கின்ற அடிப்படைத் தொண்டாகும். அந்த வகையில் தான் ஏறத்தாழ தமிழ்நாட்டில் 63 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு அளிக்கிறோம் என்றால் அது இன்னும் அதிகமாகப் போகிறது. நகரங்களுக்கும் விஸ்தரிக்கப் போகிறது என்றால் 125 கோடி ரூபாயாக ஒருவேளை 150 கோடி ரூபாயாக உயர்ந்தாலும் அது மக்களுடைய பணம். குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து கொடுப்பதற்காகச் செலவு செய்கிறோம் என்றமன நிறைவு அடைகிறோம். நோய் வந்தபிறகு, நோய்தீர்க்கும் மருந்தைக் கொடுப்பதைவிட நோய் வராமலே பார்த்துக் கொண்டால் அந்த உடலுக்கு உள்ள தெம்பும், அதற்குள்ள வலிவும் மிக அதிகமானது.

''யாரும் கல்வி கற்பதற்கு இன்னொருவருடைய தயவிலே வாழ வேண்டிய சூழ்நிலை இந்த நாட்டிலே இருக்கக்கூடாது. யாரும் கடவுளை வணங்குவதற்கு நீ போகாதே முன்னால், நான் தான் போகவேண்டும் என்று சொல்வதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. இதேபோலதான் கலப்பு மணமானாலும் சரி, விதவைத் திருமணமானாலும் சரி, அல்லது ஏழைகள் தங்களைத் தாங்கள் காப்பாற்றிக் கொள்வதற்கு உழைக்கிறோம் என்று முன் வந்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது என்று எண்ணித்தான் அடுத்த ஆண்டு முதல் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை நிச்சயப்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம்.

''இதன் நோக்கம் என்ன? வேலையில்லாமல் இருக்கிறார்களா தமிழகத்தில்? எந்தக் குடும்பத்திலாவது வேலை செய்யாமல் இருக்கிறார்களா? ஆனால் இன்று ஒருவர் வேலைக்குப் போய் விட்டு வந்தால் நாளைக்கு என்ன வேலை என்பது உத்தரவாதமில்லை. அதை ஒரு அரசு கொடுக்க முடியுமா என்றால் கொடுக்க வேண்டும் என்பது அண்ணாவின் கொள்கை. எங்களது கொள்கை. அதைச் செய்தாக வேண்டும். வழி கண்டுபிடித்தாக வேண்டும். மனம் உண்டானால் மார்க்கமும் உண்டு. விட்டுக் கொடுக்கும் தன்மை இருந்தால் எடுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்காது. பங்கு



**சத்துணவு திட்டத்துக்கு பழனி கோவில் சார்பில் நிதி அளிக்கிறார் பழனி கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி ராதா தியாகராஜன்.**

போட்டுக் கொள்ள மத்தியஸ்தம் தேவையில்லை

எங்களைப் பொறுத்தவரை எந்தக் கட்சியில் யார் நல்லதைச் செய்தாலும் அவர்களைப் பாராட்டுவதில் பின் வாங்குவதில்லை. அதில் விட்டுக் கொடுப்பதில்லை.

''இங்கே அமர்ந்திருக்கும் தாய்மார்களை விட, ஏற்றத் தாழ்வை மாற்றியமைக்கிறவர்கள் யாரும் இருக்க முடியாது. மக்கள் என்ன முடிவு செய்கிறார்களோ அதுதான் இந்த நாட்டின் முடிவு. குழந்தைகளைப் படிக்க வைப்பதில் அக்கறை காட்ட வேண்டும். வதந்திகளை நம்பாதீர்கள். வதந்திகளை நம்புவீர்களானால் நிம்மதியாக இருக்க முடியாது. வதந்தியை நம்புவதற்கு முன் அது உண்மைதானா என்று தெரிந்து கொள்ள வேண்டும். எதையும் நாம் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் வதந்தியை நாம் தாங்கிக் கொள்ள முடியும். அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. என்ன ஆதாரம் என்று கேட்கவேண்டும்.''

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எச்.ஜே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., நன்றி கூறினார்.

விழாவினையொட்டி, பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த தனிப்பந்தலில் மாண்புமிகு முதல்வர், ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த முதியோருடனும் மூதாட்டி ஒருவருடனும் அமர்ந்து பொது விருந்தில் உணவு அருந்தினார்.

சாதி, மத பேதமின்றி, சமத்துவ சமுதாயம் அமைந்திடும் வகையிலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பொதுவிருந்து சிறப்பு நிகழ்ச்சி மக்களின் மனத்திலே ஆழப் பதிந்து விட்டது என்றால் அது மிகையல்ல.

# தருமபுரியில் பாரதி நூற்றாண்டு விழா!

—நிகழ்ச்சித்தொகுப்பு:
**தமிழ்ப்பித்தன்**



கடையெழு வள்ளல்களில் ஒருவராக விளங்கிய அதியமான் ஆட்சிக்கொலுவிருந்த தகடூரான இன்றைய தருமபுரி, ஆகஸ்ட் 8ஆம் நாளன்று எழுச்சியுடன் காட்சி அளித்தது. திரும்பும் திசையெல்லாம் தோரணங்கள், தோரண வாயில்கள், ஊரே புதுக் கோலம் பூண்டிருந்தது. பாட்டுப் புலவன் பாரதியின் நூற்றாண்டு விழாதான் அந்த இனிய சூழ்நிலைக்குக் காரணம்.

ஆண்டு முழுதும் பாரதியார் பிறந்தநாள் கொண்டாடப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க மாவட்டத் தலைநகரில் நடைபெறும் விழா வரிசையில் தருமபுரி 6வது இடத்தைப் பெறுகிறது.

காலை 10 மணியளவில் மங்கல இசையான நாயன இசையுடன் விழா துவக்கம் ஆகியது. பின்னர் பள்ளி மாணவ, மாணவியரின் இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பாரதியாரின் புகைப்படங்கள்; அவர் எழுதிய நூல்கள்-நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள், நண்பர்கள் அவருக்கு எழுதிய கடிதங்கள் ஆகியவை கொண்ட கண்காட்சியை மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்ற 'மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாக் குழுத் தனி அலுவலர்' திரு. சி. என். கிருஷ்ண பாரதி தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதியார் சிறந்த தத்துவங்களை நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவற்றில் ஒன்று 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு' என்பதாகும். அதனை மீண்டும் மீண்டும் நினைவுறுத்துவதற்காகத்தான் அரசு இது போன்ற விழாக்களை நடத்தி வருகிறது''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமையில், 'பாரதி கண்ட புதிய சமுதாயம்' என்னும் பொருளில் கவியரங்கம் நடைபெற்றது.

''நெருப்புக் காட்டின் குறிஞ்சிப்
பூஇவர்
கணுவில்லாத கவிதைக்
கரும்புகளை
உணர்வு நிலத்தில் ஊன்றிக்
களித்தவர்
அனிச்சப் பூவினால் அணுகுண்டு
செய்தவர்
பாரதி பிடித்த பேனா முனை
யால்
பீரங்கிக்குச் சனியன்பிடித்தது''

என்று கவியரங்கத் தலைவர், வார்த்தைத் தோரணங்களால் பாரதியை அருச்சித்தபோது அரங்கம் ஆரவாரம் செய்து ஆதரித்தது.

'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்னும் தலைப்பில், கவிஞர் பழனிபாரதி, 'பாரதநாடு பார்க்கெலாம் திலகம்' என்னும் தலைப்பில் டாக்டர் இராசன், 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்னும் தலைப்பில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கோ. சமரசம், 'ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்' என்னும் தலைப்பில் நாமக்கல் நாதன், 'காற்று வெளியிடைக் கண்ணம்மா' என்னும் தலைப்பில் புலவர் கணேசன், 'பெண்விடுதலை வேண்டும்' என்ற தலைப்பில் பேராசிரியை சிவகாமசுந்தரி, 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்' என்னும் தலைப்பில் தஞ்சை மணிமாறன் கவிதை பாடினர்.

அடுத்து, திரு வலம்புரி ஜான் அவர்களை நடுவராகக் கொண்டு 'பாரதி காணவிரும்பிய அரசியல், சமுதாய மாறுதலுக்காக உழைக்காத மக்கள் குற்றம் உடையவர்களே' என்னும் பொருளில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

நடுவர் தமது முன்னுரையில் குறிப்பிட்டதாவது:

'கவிஞன் எழுதும் கவிதை மனிதனைத் தொட்வேண்டும், தொட்ட மனிதனை அது தூக்க வேண்டும்; அதுதான் கவிதை.

''அமெரிக்காவைக் கண்டுபிடித்தவர் கொலம்பஸ். இந்தியாவைக் கண்டுபிடித்தவன் பாரதி. சொப்பன உலகின் சுகாதார அதிகாரி அவன். மின்னலை விழுங்கி மின்சாரத்தைக் கொப்பளித்த கவிஞன் அவன். ஒரு நீல நெருப்பின் நிமிர்ந்த வரலாறுதான் பாரதி. அவன் அகல் விளக்காக இருந்து, பின்னர் நெருப்பாக மாறி, தீபமாக மலர்ந்து, வேள்வித்தீயாக உருவானான்.

''அதிகாரம் கைமாறுவதல்ல சுதந்திரம்; அது மக்களுக்கு ஏறுவதுதான் சுதந்திரம். இதைத்தான் பாரதி குறிப்பிட்டான்''

வழக்கைத் தொடுத்த பேராசிரியர் செகநாதன் குறிப்பிட்டார்:

''பாரதி, சமுதாய ரீதியாக, அரசியல் ரீதியாக, பொருளாதார ரீதியாக சில மாற்றங்களை வலியுறுத்திச் சென்றிருக்கிறார். அரசியல் சுதந்தரம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். பெண்ணடிமை தீரவேண்டும் என்றெல்லாம் சொல்லிச் சென்றிருக்கிறார். அவற்றை நடைமுறைப் படுத்தாத மக்கள் குற்றவாளிகளே.

''அவரது நெறியை - வெற்றி பெறச் செய்வதற்கு - பாடுபடாத மக்கள் குற்றவாளிகள்தான்.''

எதிர்வழக்காடிய பேராசிரியர் இரா. செல்வ கணபதி குறிப்பிட்டார்:

"பல நேரங்களில் அவர்கவிதை பாடும்போது அவருக்குச் சில ஆசைகள் பிறந்தன. அவற்றை அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லிய கொள்கைகளை-நெறிமுறைகளை-நடைமுறைப்படுத்த வழிவகையை அவர் காட்டவில்லை-மொழிப் பிரச்சினையில் மாற்றம் பெறுவதற்கு அவர் வழிவகுத்துத் தந்திருக்கிறார். ஆனால் சமுதாய, அரசியல் மாற்றங்களை மக்கள் பின்பற்றுவதற்கு அவர் வழிவகுத்துத் தரவில்லை''

இறுதியாக நடுவர் தீர்ப்பு வழங்கினார்· அதன் விவரம் வருமாறு;

''கவிஞன் அரசாங்கம் நடத்தவில்லை; அவன் எக்ஸ்ரே தான் எடுத்துக் காண்பிக்க முடியும். அவன் மருந்து தரமுடியாது. வழிமுறைகளைச் சொல்லக் கவிஞனால் முடியாது.

''அவன் தான் சொல்லியபடி வாழ்ந்து காட்டினான். மனிதாபிமானத்துடன் வாழ்ந்து காட்டினான். ஆனால் அவன் சொல்லிச் சென்ற தத்துவங்களுக்காக உழைக்காதது மக்களின் குற்றமே என்று தீர்ப்பு வழங்குகிறேன். இந்தத் தீர்ப்பை எதிர்த்து நீங்கள் மேல்முறையீட்டுக்குச்செல்ல முடியாது. ஏனெனில் இது உச்ச நீதிமன்றம்.''

நடுவரின் தீர்ப்பை மக்கள் கர ஒலி எழுப்பி ஆதரித்தார்கள்.

பிற்பகல், 4 மணி அளவில்



அலங்கார ஊர்திகள், சாரணர், பள்ளி-கல்லூரி மாணவ-மாணவியர், தேசிய மாணவர் படையினர், காவல் துறை இசைக்குழுவினர், மலைவாழ் மக்கள் ஆகியோர் பங்கு பெற்ற ஊர்வலம் பழைய தருமபுரி இராமக்காள் ஏரியிலிருந்து தொடங்கி நகரின் பல்வேறு முக்கிய தெருக்களின் வழியாகச் சென்று அதியமான் அரசு மேல்நிலைப்பள்ளித் திடலை அடைந்தது.

சிலம்புச் சண்டைக் குழுவினர், மிகச் சிறப்பாகத் தங்களது சண்டைப் பயிற்சியைச் செய்து காண்பித்தனர். மாணவியர் ஏராளமான அளவில் ஊர்வலத்தில் கலந்து கொண்டதும் சிறப்புமிக்க செய்தியாகும்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, மேலவைத் துணைத்தலைவர்புலவர்புலமைப்பித்தன், மாவட்ட ஆட்சியாளர் திரு எம்.எஸ். சீனிவாசன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் பலர், ஒரு மேடையில் அமர்ந்தவாறு ஊர்வலக் காட்சியைப் பார்வையிட்டனர்.

பின்னர், திரு பெ. சு. மணி அவர்கள் தலைமையில் மாணவ, மாணவியர் பங்கேற்ற இளைய பாரதம் நிகழ்ச்சி நடைபெற்றது. திரு.பெ.சு. மணி தமது உரையில் குறிப்பிட்டார்:

''பாரதி மகாகவி என்று ஒப்புக்கொள்வதற்கு, படித்த வர்க்கம மறுத்தது. அதை உணர்ந்த பாரதிதாசன், பாடல் எழுதி ''பாரதி உலக மகாகவி'' என்பதை மெய்ப்பித்தார். பாரதியார், தமது சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்கு, பாரதிதாசன் அவர்களை வாரிசாக விட்டுச் சென்றார்.''

'விடுதலை, விடுதலை, விடுதலை' என்னும் தலைப்பில் உரையாற்றிய திரு. ஸ்டாலின் சுந்தரராஜ் குறிப்பிட்டார்:

''வெள்ளையரை எதிர்த்து வெடிக்குரல் எழுப்பி, விடுதலை கேட்டவன் பாரதி. அவனது பாடல் பலரை ஈர்த்து, விடுதலைப் போருக்கு அழைத்து வந்தது.''

அடுத்து, 'காணி நிலம் வேண்டும்' என்ற தலைப்பில் பேசிய செல்வி. விசாலாட்சி குறிப்பிட்டார்:

''காணி நிலம் தனக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பராசக்தியிடம் காணிநிலம் வேண்டும் என்று கேட்டார் பாரதி.''

அடுத்து, 'ஒளிபடைத்த கண்ணினாய் வாவா' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வன்இரமேஷ் குறிப்பிட்டதாவது:

''இளைய பாரதத்திற்கு, 'ஒளி படைத்த கண்ணினாய் வா' என்று வீர வரவேற்புக்கூறினார் பாரதி. அவர்களுக்குக் கடமையை உணர்த்தினார்''

அடுத்து, 'நல்லதோர் வீணை செய்தே' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வி கோ. மாதவி தெரிவித்ததாவது;

''அவர் காண விரும்பிய 'நல்லதோர் வீணை' மக்கள் தான்! அவர் கண்ட கனவை நனவாக மாற்ற நாம் ஒற்றுமையுடன்; வலிமையுடன் பாடுபடவேண்டும்.''

அடுத்து 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் தலைப்பில் உரையாற்றிய செல்வி சரசுவதி கூறியதாவது:

''சாதிகளை ஒழிப்பதற்காக அரும்பாடு பட்டவர் பாரதி. சாதிகள் இல்லை என்று முழங்கிய அவரது கனவை நாம் நனவாக்க வேண்டும்''

பின்னர், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நிறைவுவிழா நடைபெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு எஸ்.டி. காசிராஜன், இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''எத்தனையோ புலவர்கள் எழுதுகிறார்கள். சிந்திக்கிறார்கள். எழுதியபடி செய்தார்களா? இல்லை! பாரதி எழுதியபடி செய்து காட்டினார். அதனால் தான் சிலர் அவனை தெய்வகவி என்று சொல்லுகின்றனர்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம்.எஸ். சீனிவாசன், இ.ஆ.ப., தமது முன்னிலை உரையில் குறிப்பிட்டார்;

''தருமபுரியில் எப்போதும் தமிழ் மழைபொழிந்துகொண்டேயிருக்கும். இங்கு தமிழ்த்தாய் வாழ்த்து என்று சொன்னார்கள். ஒரு மகாகவியின் விழாவை நாம் கொண்டாடுவதற்காக தமிழ்த் தாயே நம்மை வாழ்த்துகிறாள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.''

பின்னர் உரையாற்றிய தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.அரங்கநாதன் குறிப்பிட்டார்:

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதி முழங்கினானே, அந்தக் கருத்தின் எதிரொலியாகத்தான் புரட்சித் தலைவர் இன்று எல்லோருக்கும் சோறு கொடுக்க வேண்டும் என்ற முயற்சியில் இறங்கியுள்ளார்.''

அடுத்து, காவேரிப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு டாக்டர் கோ.சமரசம் தமது உரையில் தெரிவித்தார்:

''பாரதி என்னென்ன கற்பனை செய்தானோ அதை எல்லாம் நிறைவேற்ற அரும்பாடு படுகிறார் புரட்சித் தலைவர், தமிழக முதல்வர்!''

அடுத்து உரையாற்றிய கிருட்டிணகிரி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ஆர். சின்னராசு தெரிவித்தார்:

''இன்றைக்கு, கவிஞர்கள் எதையும் எழுதலாம், பாடலாம். ஆனால் பாரதி எழுதிய காலம், ஆங்கிலேயர் ஆண்ட காலம் என்பதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.''

அடுத்து, பாரதி விழா தொடர்பான கட்டுரைப்போட்டி, இசைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவியருக்குப் பரிசுகளை வழங்கினார் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்கள்.

பின்னர் மகாகவி பாரதியாரின் உருவப்படத்தை திரு. வலம்புரிஜான் திறந்து வைத்து உரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''காகிதத்தைப் பார்த்ததும் கழுதைக்குத் தின்னத் தோன்றுகிறது; கவிஞனுக்கு கவிதை எழுதத் தோன்றுகிறது. பாரதியார் கவிதைக்கும், வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாதிருந்தது. இடைவெளி இல்லாத இதிகாச எழுத்து அவன் எழுத்து. என்றைக்கும் வாழ்கின்ற எழுத்தை அவன் எழுதினான். எழுதியபடி வாழ்ந்தான். அதுதான் பாரதி. அதனால்தான் இந்த நூற்றாண்டு விழா.''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் அவர்கள், தருமபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வெண்ணாம்பட்டி பள்ளிக் கட்டடத்திற்கு பாரதி பெயர் பொறிக்கப்பட்ட கல்லை திறந்து வைத்து நிறைவுப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்;

'எல்லோரையும் போலத்தான் பாரதியும் தமிழைக் கருதினான் என்று நாம் எண்ணக்கூடாது. எல்லாருக்கும் தமிழ் உதவவேண்டும் என்று கருதித்தான் அவன் எழுதினான்'.

நிறைவு விழாத் தலைவர் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ.



கிருஷ்ணசாமி அவர்கள் தமது தலைமை உரையில்,

''பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிடித்தமான கவிஞர்களில் பாரதியாரும் ஒருவர். பாரதியாரை நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் பிடித்துக் கொள்ளவில்லை - பயன்படுத்தவில்லை. 1946ஆம் ஆண்டிலேயே பேரறிஞர் அண்ணா அவர்கள் 'People's Poet' என்று ஆங்கில உரையை வானொலியில் நிகழ்த்தினார்கள். 40 வருடங்களுக்கு முன்பே நாங்கள் பாரதியின் பெருமை குறித்துப் பேசியிருக்கிறோம். அந்தப் புத்தகத்தைத் தமிழக அரசு அண்மையில் அரசின் சார்பில் வெளியிட்டு விநியோகித்துள்ளது.

''அந்தப் புத்தகத்திலே, 'மக்கள் கவிஞனுக்கு ஒரு தனி உணர்வு மட்டும் இருந்து பயனில்லை; மக்களைத் திருத்தும் பொறுப்பும் அவனுக்கு உண்டு' என்று அண்ணா குறிப்பிடுகிறார். இந்தப் பணி முடியுமா, எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட முடியுமா என்று வினா எழுப்புகிறார் அண்ணா. அதற்கு விடையாகத் தான் புரட்சித்தலைவர் அவர்கள், ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்கள்'' என்றார்.

அனைவரின் கருத்து மழைகளுக்குப் பின்னர், வெண்ணிற ஆடை நிர்மலா குழுவினரின் 'பாரதி கண்ணம்மா' என்ற நாட்டிய நாடக நிகழ்ச்சி நடைபெற்றது. முழுக்க முழுக்க பாரதியின் பாடல்களைக் கொண்ட இந்நிகழ்ச்சி, பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

தருமபுரியில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு விழா நிகழ்ச்சி, முத்திரை பதித்த நிகழ்ச்சியாகத் திகழ்ந்தது என்க் குறிப்பிடுவது சாலப்பொருந்தும்.



# புதுமை படைத்த புனிதர்

— சௌந்தரா கைலாசம்



பேருலகை வாழ்விக்கும் தியாக ராஜப்
பெருமானின் திருவாரூர்த் தலத்தில் வாழ்ந்த
சீரியதோர் குடிப்பிறந்த கார ணத்தால்
தியாகத்தின் உருவாகிப் புகழ்வி ரிக்கும்
சூரியனாய்த் திகழ்ந்திருந்த திரு.வி.க. வின்
தொண்டுமனம் கண்டுலகம் வியந்து போற்றி
சூரியநல் அறிவருளும் தமிழின் ஆற்றில்
கும்மாளம் இட்டுநிதம் குளித்து நிற்கும்!

இனிமைச் சுவையா? நடைமிடுக்கா?
எளிமைச் சிறப்பா? உறுதெளிவா?
கனிவைக் கொடுக்கும் பண்பாடா?
கருத்தின் உயர்வா? கவிமரபா?
மனிதப் பிறப்பின் பெரும்பயனா?
வழுத்தும் அனைத்தும் கலந்துதந்து
புனிதம் படைக்கும் தமிழினிலோர்
புதுமை படைத்தார் திரு.வி.க.!





வாழ்வில் இணைந்த தூய்மையெலாம்
வாக்கில் இணைத்துப் பாடியவர்!
தாழ்வு படுத்தும் கேடுகளைச்
சகியா தறப்போ ராடியவர்!
பாழில் புகுத்தும் அடிமைநிலை
பாட்டில் வெறுத்துச் சாடியவர்!
ஏழை வாழ்வில் ஒளிமலர
ஏற்ற வழியைத் தேடியவர்!



சாதி எனும்பாகு பாடு—நமைச்
சார்ந்து தினம் கெடுக்கும் கேடு
நீதி நிறுத்தும்துணி வோடு—நேர்
நின்றே அதனுடன்போ ராடு
அன்புக் கனிகொடுக்கும் வித்து—நம்
அன்னைக் குலம்உயிரின் சொத்து!
தென்பை அளிக்குமொரு சத்து—எனத்
தெளிய உரைத்ததமிழ் முத்து!



பெண்ணின் பெருமையினைப் பாடி—நெறி
பிறழும் மதியினரைச் சாடி
எண்ணம் செயலில்நலம் நாடி—அவர்
ஏற்ற பணிகள் பலகோடி!
போற்றியநற் குணங்களுக்கோர் தஞ்சம்—நல்ல
புண்ணியர் திரு.வி.க வின் நெஞ்சம்
வேற்றுமையாம் தீமைகட்கோர் நஞ்சம்—அன்பு,
வீரம் இவை வீற்றிருக்கும் மஞ்சம்!

பொதுமையிலே வள்ளல்ராம லிங்கம்—நல்ல
புரட்சியிலே தேசபந்துச் சிங்கம்
புதுமையிலே பாரதியின் அங்கம்—எங்கள்
புனிதர்தமிழ்த் தென்றல் பசுந்தங்கம்!
பக்தியிலே மூந்தையறம் ஆழ்வார்—நல்ல
பண்பினில்பா ருள்ளவரை வாழ்வார்!
உத்தமநல் தொண்டினிலே ஆழ்வார்—எங்கள்
உள்ளமெனும் பேரரசை ஆள்வார்!



தியோசாபிகல்
சங்க அறிஞர்
வாடியா

உழைப்பாளித் தோழர்களைக் கூட்டி—அவர்
உரிமைகள் உணரும் உணர்வூட்டி
இழைக்கும் கொடுமைகளை ஓட்டி—வழி
இதுஎன அழைக்கும்வழி காட்டி
மொழிஇன வெறுப்பெனும் ஓர் கேடு—இங்கு
முளைவிட விடாதுறுதி யோடு
வழி உணரக் கூறியபண் பாடு—கொண்ட
மணவழக னார்க்கினியார் ஈடு?



காந்தியத்தில் ஊறியதோர் உள்ளம்—அது
கருணையெனும் தூய அன்பு வெள்ளம்
சாந்திபெறப் பாயுமொரு பள்ளம்—நவ
சக்திஅவர் சொல்லினிலே துள்ளும்!
உரைநடையிலே புதுமை இருக்கும்—புவி
ஓங்கிடவே உண்மையொளி பெருக்கும்!
அருமைபெறு பாடல்களின் மிடுக்கும்—நமக்கு
அடிமைநிலை போய்விடக் கைகொடுக்கும்!

தொண்டினிலும் சிறந்ததுவே றுண்டா? வாழ்க்கை
தொண்டுக்கே உள்ளது! நல்தொண்டே செல்வம்!
கொண்டபெரும் சமயமும்அத் தொண்டே அன்றோ?
குவலயமே எதிர்த்தாலும் குலைய மாட்டேன்
தண்டமிழ்என் உயிர்மூச்சு! தமிழ்ப்பண்பாடு
தழைக்கநிதம் உழைப்பதுதான் இறைவன் ஆணை
கண்டிடுக! எனமுழங்கும் திரு.வி.க.வின்
காற்சுவட்டில் செல்வதுநம் கடமை ஆகும்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP/2

